http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2018-2020 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 21-5-2020 (வியாழக்கிழமை) 8 பக்கம் 500 காசு ★★★ | மலர் 43 இதழ் 158

## ஜமால் முகமது கல்லூரி சார்பில் கொரோனா நிவாரண பொருட்கள்




திருச்சி ஜமால் முகமது கல்லூரி கொரோனா தடுப்பு மற்றும் நிவாரண களப்பணியில் ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக கல்லூரி தாளாளரும், செயலாளருமான டாக்டர் காஜா நஜிமுதீன் பயனாளிகளுக்கு நிவாரண தொகுப்பு பையினை வழங்கினார். அருகில் கல்லூரி பொருளாளர் ஜமால் முகமது, கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் உள்ளனர்.

பெரும்பிடுகு முத்தரையர்

## முத்தரையர் ஓட்டு என வீடுகள் தோறு

### வீர முத்தரையர் முன்னேற்ற

திருச்சி, மே. 21–

தமிழ்நாடு வீர முத்தரையர் முன்னேற்ற சங்க தலைவர் கே.கே.செல்வக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கி.பி. 6–ம் நூற்றாண்டு தொடங்கி 9–ம் நூற்றாண்டு முடிய 300 ஆண்டுகள் தனி நாடு, தனிக்கொடியுடன் ஆட்சி புரிந்த முத்தரையர் மன்னர்களில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் காலம் (705–745) பொற்காலம் என வரலாற்று ஆசிரி




http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2018-2020 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

திருச்சி 20-5-2020 (புதன்கிழமை) 8 பக்கம் 500 காசு ★★★ மலர் 43 இதழ் 157





...ஊராட்சியில் வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு நிவாரண தொகுப்பு ...பட்டபோது எடுத்தபடம்.

## ...டி ஊராட்சி மக்களுக்கு
## ...நிவாரண தொகுப்பு

இறந்த மக்களுக்கு ஒன்றிய கவுன்சிலர் சசிக்குமாரின் சொந்த செலவில் நிவாரண பொருள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பரமேஸ்வரி முருகன், முசிறி வட்டாட்சியர் ..., வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மனோகரன், குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கப் பட்ட மக்களுக்கு 5 கிலோ அரிசி, கத்தரிக்காய், தக்காளி, வெங்காயம், முள்ளங்கி, பீட்ரூட், உருளைக்கிழங்கு, பரங்கிக்காய் உள்ளிட்ட 7 வகையான காய்கள் அடங்கிய நிவாரண தொகுப்பு அடங்கிய பைகளை வழங்கினர்.

இதில் மீனாட்சிபுரம், கீழமேடு, சத்திரம், மேலூர் மற்றும் காட்டாம்பட்டி பகுதிகளை சேர்ந்த 1000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் முகக்கவசம் அணிந்தும், சமூக விலகலை கடைபிடித்தும் வரிசையில் நின்று நிவாரண தொகுப்பை பெற்று சென்றனர். நிகழ்ச்சியில் முசிறி ஒன்றிய செயலாளர் ராஜமாணிக்கம், காட்டாம்பட்டி ஊராட்சி தலைவர் நிர்மலாதேவி உள்பட பலர் கலந்துகொண்டனர்.



...யை முன்னிட்டு திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி மற்றும் திருச்சி ...குதியை சேர்ந்த இஸ்லாமிய மக்களுக்கு, நோன்பு கஞ்சி ...வான அரிசி மூட்டைகளை, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. ...மகேஷ் பொய்யாமொழி எம்.எல்.ஏ. வழங்கினார்.

# கொரோனா தடுப்பு களப்பணியில் ஜமால் முகமது கல்லூரி

திருச்சி,மே.20-

திருச்சி ஜமால் முகமது கல்லூரி கொரோனா நோய்த்தொற்று விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கல்லூரியின் தாவரவியல் மற்றும் வேதியியல் துறை மூலம் தயாரிக்கப்பட்ட 54 லிட்டர் கிருமி நாசினி திருச்சி மாநகரக் காவல்துறை மற்றும் பிற அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டதுடன், கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் பாதுகாப்பு முகக் கவசங்களும் வழங்கப் பட்டன.

திருச்சி அரசு பொது மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் உணவு வழங்கப்பட்டது. கலெக்டர் சிவராசுவின் வேண்டுகோளுக்கிணங்க கல்லூரி வளாகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட அறைகள் ஏற்பாடு செய்யப் பட்டன. தனிமைப் படுத்தப் பட்டவர்களுக்கு மனநல ஆலோசனை, டாக்டர் ராமகிருஷ்ணன், அரவிந்த் மற்றும் சமூக பணித்துறை உதவிப்பேராசிரியர் சேக் பரீத் மூலம் வழங்கப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்டிருந்த அனைவருக்கும் கல்லூரியின் சார்பில் ஆரோக்கியமான சரிவிகித ஊட்டச்சத்து உணவு தினசரி மூன்று வேளையும் வழங்கப்பட்டது.

தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் ஜமால் முகமது கல்லூரியில் தங்கியிருந்த காலங்களில் திருச்சி கி.ஆ.பெ. விஸ்வநாதன் மருத்துவக் கல்லூரி மன் வனிதா மற்றும் டாக்டர் ஏகநாதன் மற்றும் சுகாதார பணிகள் துணை இயக்குனர் சுப்ரமணியன் ஆகியோர் ஆலோசனை வழங்கினர்.

அதுமட்டுமல்லாது டாக்டர்கள் அஷ்ரப், அப்துல் சமது, இம்தாதுல்லா மற்றும் காதர்சாஹிப் ஆகியோரும் சிறப்பு ஆலோசனையும் வழங்கினர். திருச்சி காவல்துறை உதவி ஆணையர் மணிகண்டன் சட்ட ஒழுங்கு பணிகளை கவனித்து வந்தார். ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் அறக்கட்டளையை சேர்ந்த பேராசிரியர்கள் சையத் முகமது, சிராஜுதீன் மற்றும் ஆராய்ச்சி மாணவர் முகமது ரபீக் ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளை நாள்தோறும் கவனித்து கொண்டனர்.

கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் திருச்சி அரசு மருத்துவமனையில் தனிமைப் படுத்தப்பட்ட நபர்களின் உணவு வகைக்காக ரூ.2 லட்சத்து 47 ஆயிரத்து 760 செலவழிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி நிர்வாகக் குழு, முதல்வர், பேராசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் ஆகியோரின் உதவியால் பெறப்பட்ட நிவாரணப்பொருட்கள் கிராமப் புறங்களில் வசிக்கும் 2250 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. முன்னாள் மாணவர்கள் அமைப்பின் மூலம் 200 நபர்களுக்கு உணவளிக்கப்பட்டது.

கல்லூரி ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் தமிழ்நாடு முதலமைச்சரின் நிவாரண நிதிக்காக தங்களது ஒரு நாள் ஊதியம் ரூ.66,070ஐ வழங்கியுள்ளனர். கல்லூரி சுயநிதி பிரிவில் பணியாற்றும் பேராசிரியர்களும் ரூ.2,25,000 வழங்கியுள்ளனர். இதற்கான காசோலை திருச்சி மாவட்ட கலெக்டரிடம் வழங்கப் பட்டது.

மேலும் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர்கள் கனீஸ் அகமது மற்றும் மேஜர் அரவாண்டி ஆகிய இருவரும் தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கியுள்ளனர். மாணவர்கள் பயன்பெறும் நோக்கில் பேராசிரியர்கள், வீட்டிலிருந்தபடியே இணையத்தின் வழியாக நிகழ்நிலை வகுப்புகளை நடத்தி பாட விளக்கக் குறிப்புகளை வழங்கி வருகின்றனர். ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கத்தினர் சங்க பொதுச்செயலாளர் ஜாகிர் உசேன் மேற்பார்வையில் தனித்தனியாக நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றனர்.

அனைத்து நிகழ்வுகளையும், நிவாரண உதவிகளையும் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் காஜா நஜீமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, உதவிச்செயலர் அப்துல் சமது, கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன், விடுதி இயக்குநர் முகமது பாசில் மற்றும் காஜாமியான் விடுதி ஒருங்கிணைப்பாளர் சையது அலி பாதுஷா ஆகியோர் செயல் படுத்தி வருகின்றனர்.



கிழக்குறிச்சி ஊராட்சியில் அறம் மக்கள் நலச்சங்கம் மற்றும் ஊராட்சி ... சார்பில் வருவாயின்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்...

### திருவெறும்பூர் ஒன்றியம் கிழக்குறிச்சி ஊராட்சியில்
## அறம் மக்கள் நலச்சங்கம்-ஊராட்சி நிர்வாகம் சார்பில் நிவாரண...

நெ.1 டோல்கேட், மே. 20-

கொரோனா ஊரடங்கினால் திருவெறும்பூர் ஒன்றியம், கிழக்குறிச்சி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வருவாய் இன்றி பாதிக்கப்பட்ட நலிந்த மக்களுக்கு அறம் மக்கள் நலச்சங்கம் சார்பில் 5 கிலோ அரிசியும், ஊராட்சி மன்ற தலைவர் ஜோஸ்பின் மேரி ஏற்பாட்டில் மளிகை பொருட்கள் உள்ளிட்ட நிவாரண தொகுப்பு வழங்கப்பட்டது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வட்டாட்சியர் ஞானாமிர்தம், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஞானவேல் ஆகியோர் கலந்துகொண்டு 100-க்கும் மேற்பட்ட நலிந்த ஏழை, எளிய மக்களுக்கு அரிசி, கோதுமை மாவு, எண்ணெய், மருந்துகள் உள்ளிட்ட நிவாரண தொகுப்பை வழங்...

## தூய்மை பணியாளர்களுக்கு அ.தி.மு.க. நிவாரண...



திருச்சி புறநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் பொதுமக்களுக்கு ... கொரோனா நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. திருவெறு... ஒன்றிய பகுதியில் உள்ள 200 தூய்மை பணியாளர்களுக்கு மாவட்... டி.ரத்தினவேல் அரிசி, மளிகை, காய்கறிகள் அடங்கிய தொகுப்புகளை வ... அலுவலர் பழனியப்பன் முன்னிலையில் வழங்கியபோது எடுத்தபடம்.

### ...லையில் விழுந்தது கூட தெரியாமல்
## ...ல் மோட்டார்சைக்கிளை ஓட்டிச்சென்ற தந்தை
### அரியலூர் அருகே சோக சம்பவம்

### மேட்டூர் அணை ஜூன் 12-ந்தேதி திறப்பு
## உய்யக்கொண்டான் வாய்க்காலில் ஆகாயத்தாமரைகள் அகற்றப்படுமா?
### விவசாயிகள் எதிர்பார்ப்பு

... பொறியியல் கல்லூரியில்

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

TUESDAY, MAY 19, 2020

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
14 pages • ₹6.00


J&K administration notifies rules for domicile certificates
page 8


Actual stimulus package less than 1% of GDP: Chidambaram
page 8


CBSE Class 10, 12 exams will now be held from July 1 to 15
page 11

Xi defends China's virus response, offers vaccine when ready
page 12


JAMAL MOHAMED COLLEGE
19 MAY 2020

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW · CUTTACK · PATNA

# Technical glitch disrupts interaction with Higher Education Secretary

**SPECIAL CORRESPONDENT**
TIRUCHI

Principals of government and government-aided colleges in Tiruchi region could not take part in an interaction with the Higher Education Secretary through video-conference on Monday due to a technical glitch.

The principals were expected to provide details of the facilities that they had provided for COVID-19 quarantine during the interaction. There was a difficulty in continuing the interaction with more than 100 participants. Hence, the Higher Education Department later restricted the participants to college heads in and around Chennai, a principal of a government college here said.

The college heads in the region were reportedly told by officials that the interaction with Higher Education Secretary will take place at a later date.

Barring Jamal Mohamed College in Tiruchi, no other institution was used as a quarantine facility in the region. The office of the Regional Joint Director of Collegiate Education had, last month, sought details of buildings and sanitary infrastructure from institutions in the region, indicating that the facilities could be put to use by the district administrations during the lockdown period for containment of COVID-19 virus. The colleges, in turn, furnished information about the classrooms in academic blocks, the number of rooms in the hostel, the toilets in each building and other such particulars.

However, only the playgrounds of some of the colleges were utilised as temporary vegetable markets by the district administration.

The National Centre for Disease Control has issued a series of guidelines to carry out disinfection of the quarantine facilities where people affected by the virus had been housed. Due to the potential survival of the virus in the environment for several days, disinfection of the buildings using anti-microbial agents has been advocated. The guidelines state that the lodging area, including furniture, railing, telephone, desks, curtain, should also be disinfected thoroughly with warm water and detergent solution.

Chennai Rates
Diesel/l Rs.68.22
Gold (24k) Rs.4725/gm
Petrol/l Rs 75.54
Silver Rs.49.00/gm

TRINITY MIRROR

Adyar Cancer Institute needs help
See Page 4

Madurai Saturday 16-5-2020
VOL. 25 No.305 PAGES 4 ₹ 4.00
NATIONAL DAILY FOR THE PEOPLE
Regd.No.TN/MA/175/18-20
Air Surcharge 40 Paise

# CM relief fund receives Rs 367 crore

Chennai, May 16:
The Chief Minister's Public Relief Fund has received contributions to the tune of Rs.367.05 crore from corporates, other organisations and the public to aid the battle against COVID-19.

The Tamil Nadu government said members of the public, philanthropists and corporates have contributed to help the state in its fight against Covid-19.

As of May 5, Chief Minister's Public Relief Fund has received Rs. 347.76 cr.

In continuation of that, from May 6 to 14 the fund received Rs. 18.29 crores

Sakthi Masala have contributed Rs.5 crore, Samsung electroncs Rs. 2 crores, Chennai Petroleum Rs. 1 crore, Think and Learn Pvt Ltd. Rs. 1 cr were the donors among others.

Tamil Nadu chief minister Edappadi K Palaniswami has thanked the institutions, public and voluntary organisations and all those kind-hearted, who continuously support the government.



**Tiruchi Jamal Mohamed College teachers and non teaching staff have come forward to donate Rs Two Lakhs and Twenty Five Thousand towards Chief Minister's Relief Fund for COVID-19.The amount was handed over to Collector Sivaraju. Collector also praised the college team for coming forward to help patients at GH here by donating Rs. 2,47,760 earlier. It is laudable that this institution staff have donated Rs.6,66,070 from their salary till now for various Corona Virus efforts in the State.**

REGD. No. TRY/056/2018-2020 – சென்னை, திருச்சி, மதுரை, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சாவூர், திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய்,கொழும்பு நகரங்களில் அச்சாகிறது –
இன்டர்நெட் முகவரி: ★★★★
http://www.dailythanthi.com
12 பக்கம் 500 காசு

# தினத் தந்தி
DAILY THANTHI

அறம் தொலைக்காட்சி
உண்மையின் நிறம்... உழைப்பின் வரம்...

திருச்சி (15–5–2020) வெள்ளிக்கிழமை | மலர் 78 இதழ் 196 | வெல்க தமிழ் | சார்வரி ஞு வைகாசி மீ 2 உ ஹிஜிரி 1441 ரமலான் 21

ஜமால் முகமது கல்லூரி சார்பில்

## கொரோனா நிவாரண நிதி

திருச்சி, மே.15–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சுயநிதி பிரிவில் பணியாற்றும் பேராசிரியர்கள் சார்பில் முதல்–அமைச்சரின் கொரோனா நிவாரண நிதிக்கு ரூ.2 லட்சத்து 25 ஆயிரம் வழங்கப்பட்டது. அதனை கல்லூரியின் நிர்வாகக்குழு செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜாநஜிமுதீன், பொருளாளர் எம்.ஜெ. ஜமால் முகமது ஆகியோர், திருச்சி மாவட்ட கலெக்டர் சிவராசுவிடம் வழங்கினர். அப்போது கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் உடனிருந்தார்.

மேலும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பில், திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், கல்லூரி வளாகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்காகவும் உணவு வகைக்காக ரூ.2 லட்சத்து 47 ஆயிரத்து 760 செலவழிக்கப்பட்டு உள்ளது. கல்லூரியில் பணியாற்றும் அரசு உதவிபெறும் பேராசிரியர்கள் உள்ளிட்டோர் சார்பில் ஒரு நாள் சம்பளத்தொகை ரூ.6 லட்சத்து 66 ஆயிரத்து 70, முதல்–அமைச்சரின் கொரோனா நிவாரண நிதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வியாழக்கிழமை
14 மே 2020
திருச்சி
12 பக்கங்கள் ரூ.7

# கரோனா நிவாரண நிதியளிப்பு...



கரோனா வைரஸ் நோய்த் தடுப்பு பொது நிவாரண நிதிக்காக, ஜமால் முகமது கல்லூரியில் அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிப் பிரிவு ஆகியவற்றில் பணியாற்றும் பேராசிரியர்களின் ஒரு நாள் ஊதியமான ரூ.9 லட்சத்தை திருச்சி மாவட்ட ஆட்சியர் சு.சிவராசுவிடம் வழங்கும் கல்லூரி நிர்வாகக் குழுச் செயலர் மற்றும் தாளாளருமான டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜெ. ஜமால் முகமது, முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன்.

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 6 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 ★ 2.4.2020 வியாழன் மாலை ★ வெளியூர் 3.4.2020 வெள்ளி ★ இதழ் 306)

Regd. No. TN/SR-21/18–20

makkalkural tv

மக்கள் சேவை 98421 89568
ஸ்ரீ தங்கமே பணம்
அடகு ஏல நகையை திருப்ப (அ) விற்க
நகை கடன் ரூ.3200
BVR GOLD TESTING
916 கிராம் ரூ.3900/-
On Internet : BVR Gold Testing Melting
அழைக்க : 8754 200 770
ஏஜெண்டுகள் தேவை



திருச்சி மாநகர காவல்துறை கேட்டு கொண்டதன் பேரில் ஜமால் முஹம்மது கல்லூரி தாவரவியல் துறை சார்பில் கொரோனா வைரஸ் கிருமிகள் வராமல் தடுக்க 40 லிட்டர் தயாரித்த கை கழுவும் மருந்தை மாநகர காவல்துறை போலீசாரிடம் கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜ்முத்தீன், பொருளாளர் ஹாஜி ஜமால் முஹம்மது ஆகியோர் வழங்கினார்கள். உடன் கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் மற்றும் பேராசிரியர்கள் உடன் இருந்தார்கள்.

makkalkural tv

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மக்கள் சேவை 98421 89568
ஸ்ரீ தங்கமே பணம்
அடகு ஏல நகையை திருப்ப (அ) விற்க
நகை கடன் ரூ.3200
BVR GOLD TESTING
916 கிராம் ரூ.3900/-
மதுரை - 1 On Internet : BVR Gold Testing Melting
அழைக்க : 8754 200 770
ஏஜெண்டுகள் தேவை

மதுரை பதிப்பு

(மலர்:41 ★ 3.4.2020 வெள்ளி மாலை ★ வெளியீர் 4.4.2020 சனி ★ இதழ் 307)

Regd. No. TN/SR-21/18–20




திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்ட திருச்சி மாவட்டத்திலிருந்து டெல்லி தப்லீக் மாநாட்டில் கலந்து கொண்ட 125 பேருக்கு ஊரடங்கு உத்தரவு முடியும் வரை மூன்று நேரம் உணவு வழங்குமாறு ஜமால் முஹம்மது கல்லூரி செயலாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முத்தீன், பொருளாளர் ஹாஜி ஜமால் முஹம்மது ஆகியோரை மாவட்ட கலெக்டர் சு.சிவராசு கேட்டுக்கொண்டார். அதன் அடிப்படையில் மாவட்ட கலெக்டர் அலுவலக ஊழியரிடம் கல்லூரி நிர்வாகம் உணவை வழங்கினார்கள். உடன் கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன், காஜாமியான் விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் சையது அலி பாதுஷா ஆகியோர் உடன் இருந்தார்கள்.

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 6 பக்கம் விலை ரூ.4.00

makkalkural tv

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 ★ 9.4.2020 வியாழன் மாலை ★ வெளியூர் 10.4.2020 வெள்ளி ★ இதழ் 313)

Regd. No. TN/SR-21/18–20

மக்கள் சேவை 98421 89568
ஸ்ரீ தங்கமே பணம்
அடகு ஏல நகையை திருப்ப (அ) விற்க
நகை கடன் ரூ.3200
BVR GOLD TESTING
916 கிராம் ரூ.3900/-
மதுரை - 1 On Internet : BVR Gold Testing Melting
அழைக்க : 8754 200 770
ஏஜெண்டுகள் தேவை

## திருச்சியில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த

# 500 பேருக்கு அரிசி, மளிகை பொருட்கள்; ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகிகள் வழங்கினர்

திருச்சி, ஏப்.9–

நல் உள்ளங்கள் அறக்கட்டளை சார்பாக திருச்சி மாநகர பகுதியில் ஏழை எளிய 500 குடும்பங்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்களை ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகிகள் முனைவர் காஜா நஜ்முத்தீன், ஜமால் முஹம்மது ஆகியோர் வழங்கினார்

ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர்களால் நடத்தப்பட்டு வரும் நல் உள்ளங்கள் அறக்கட்டளை சார்பாக பல்வேறு அறப்பணிகள் நடந்தேறி வருகின்றது. இந்த ஊரடங்கின் காரணமாக அரசுப் பொது மருத்துவமனையில் நோயாளியுடன் இருப்பவர்களுக்கும் சாலையோரத்தில் இருப்பவர்களுக்கும் தினமும் 200 நபர்களுக்கு உணவு வழங்கி வருகின்றனர். அதனின் தொடர்ச்சியாக திருச்சி மாநகரத்திற்குட்பட்ட ஏழை எளிய அன்றாட கூலித் தொழில் செய்து வரும் அம்மக்களின் வாழ்வாதாரத்தையும் வருமானம் இல்லாமல் முடங்கி கிடக்கும் அம்மக்களுக்கு உதவி செய்யும் வகையில் 500 குடும்பங்கள் தெரிவுச் செய்து அரிசி மற்றும் மளிகை பொருட்களை வழங்க முடிவு செய்யப்பட்டது.



முதற்கட்டமாக 15 குடும்பத்தினருக்கு கொடுக்கும் பணியை கல்லூரி செயலாளர் , தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், கல்லூரி பொருளாளர்ஹாஜி எம். ஜமால் முகமது ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

இதில் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன், காஜாமியான் விடுதி இயக்குனர் முனைவர் முஹம்மது பாசில், விடுதி ஒருங்கிணைப்பாளர். முனைவர் சையத் அலி பாதுஷா, நல் உள்ளங்கள் அறக்கட்டளை பேராசிரியர் சையத் முகமது, பேராசிரியர் பா. சிராஜுதீன், பேராசிரியர் ஜாஹிர் உசேன், சதாம்., சமூகச் செயற்பாட்டாளர். முகமது பிலால் பாகவி, நைனார் முகம்மது ஆகியோர் கலந்து கொண்டனர்.



தஞ்சை மாவட்டம் பேராவூரணி பேரூராட்சி சார்பில் வாகனம் மூலம் ஜெனரேட்டர் வைத்து மின் தெளிப்பான் மூலம் கிருமி நாசினி தெளிக்கும் பணியினை பேராவூரணி வட்டாட்சியர் க.ஜெயலெட்சுமி தொடக்கி வைத்தார். அருகில் சுகாதார ஆய்வாளர் கே.தமிழ்வாணன் உள்ளார்.

காமதேனு வார இதழை Courier மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
₹650 ₹910 அரையாண்டு சந்தா
https://subscriptions.hindutamil.in/print-subscription

R.Dis.No.521/18 Vol.3 No.77

இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

திருச்சி / தஞ்சாவூர் பதிப்பு ● புதன், மார்ச் 18, 2020

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

https://www.hindutamil.in

● 16 பக்கங்கள் ₹ 7

HAPPY NEW YEAR 2020
E-PAPER 1 YEAR ₹2,520 ₹888 SUBSCRIBE NOW
Store.hindutamil.in

## மாநில மகளிர் கூடைப்பந்து

# சென்னை எஸ்ஆர்எம் கல்லூரி சாம்பியன்

**திருச்சி**

மாநில அளவிலான மகளிர் கூடைப் பந்து போட்டியில் சென்னை எஸ்ஆர்எம் அறிவியல் தொழில் நுட்பக் கழக அணி சாம்பியன் பட்டம் வென்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவிலான அன்னை தெரசா கோப்பைக்கான மகளிர் கூடைப்பந்து போட்டி கடந்த 14-ம் தேதி முதல் 16-ம் தேதி வரை நடைபெற்றது. இதில், 8 கல்லூரிகளின் அணிகள் பங்கேற்றன.




▲ திருச்சியில் நடைபெற்ற மாநில அளவிலான மகளிர் கூடைப்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை எஸ்.ஆர்.எம் அறிவியல் தொழில்நுட்பக் கழக அணி வீராங்கனைகள்.

சூப்பர் லீக் பிரிவில் சென்னை எஸ்.ஆர்.எம் அறிவியல் தொழில் நுட்பக் கழக கல்லூரி அணி 73-54 என்ற புள்ளிகள் கணக்கில் திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரி அணியையும், 77-48 என்ற புள்ளிகள் கணக்கில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியையும், 87-46 என்ற புள்ளிகள் கணக்கில் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியையும் வென்று அன்னை தெரசா கோப்பையைக் கைப்பற்றியது.

சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி அணி 76-75 என்ற புள்ளிகள் கணக்கில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியையும், 58-36 என்ற புள்ளிகள் கணக்கில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணியையும் வென்று 2-வது இடம் பிடித்தது.

போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் வீராங்கனைகளுக்கு ஜமால் முகமது கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜிமுதீன் உள்ளிட்டோர் பரிசுகளை வழங்கினர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

WEDNESDAY, MARCH 18, 2020

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
16 pages • ₹6.00



Ex-CJI Ranjan Gogoi defends nomination to Rajya Sabha page 10



Rahul Gandhi bats for Tamil Nadu MPs in Lok Sabha page 10




Sensex plunges 811 points, or 2.58%, to close at 30,579 page 13

UEFA postpones Euro 2020 by a year; French Open moved to September page 14



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW · CUTTACK · PATNA

## SRM IST clinches title

**TIRUCHI:** SRM IST maintained a clean super-league slate and clinched the Mother Teresa Trophy in the State-level inter-collegiate basketball tournament for women on Monday.

Ethiraj College for Women and host Jamal Mohamed College finished second and third respectively.

## Jibin and Mohanraj hog the limelight




**Dominant display:** SRM IST won all its super-league matches to emerge champion.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

புதன்கிழமை
18 மார்ச் 2020
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# கூடைப்பந்து: சென்னை எஸ்.ஆர்.எம். கல்லூரி சாம்பியன்




சென்னை எஸ்.ஆர்.எம். அறிவியல் தொழில்நுட்பக் கழகக் கல்லூரிக்கு கோப்பையை வழங்குகிறார் திருச்சி ஜமால் முகமது கல்லூரித் தாளாளர் மற்றும் செயலர் ஏ.கே. காஜா நஜிமுதீன். உடன், கல்லூரி நிர்வாகத்தினர்.

**திருச்சி, மார்ச் 17:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கூடைப்பந்து போட்டியில், சென்னை எஸ்.ஆர்.எம். அறிவியல் தொழில்நுட்பக் கழகக் கல்லூரி முதலிடம் பிடித்து கோப்பையை வென்றது.

மாநில அளவில் கல்லூரி மாணவிகளுக்கிடையிலான முதலாமாண்டு அன்னை தெரசா கோப்பைகான கூடைப்பந்து போட்டிகள், ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் கடந்த 14- ஆம் தேதி தொடங்கி 16- ஆம் தேதி வரை நடைபெற்றது.

இப்போட்டியில் திருச்சி ஜமால் முகமது, பிஷப் ஹீபர், இந்திரா காந்தி, புனித சிலுவைக் கல்லூரிகள், அண்ணாப் பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி, சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி, எஸ்.ஆர்.எம்.அறிவியல் தொழில் நுட்பக் கழகக் கல்லூரி, பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி அணிகள் பங்கேற்று விளையாடின.

இதில், திருச்சி ஜமால் முகமது, பிஷப் ஹீபர், சென்னை எஸ்ஆர் எம் அறிவியல் தொழில் நுட்பக் கழகக் கல்லூரி, எத்திராஜ் மகளிர் கல்லூரி என நான்கு கல்லூரி அணிகள் சூப்பர் லீக் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றன.

சூப்பர் லீக் போட்டியில் சென்னை எஸ்ஆர்எம் அறிவியல் தொழில் நுட்பக் கழகக் கல்லூரி, திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரியை 73-54 என்ற புள்ளிகள் கணக்கிலும், திருச்சி, ஜமால் முகமது கல்லூரியை 77-48 என்ற புள்ளிகள் கணக்கிலும், சென்னை எத்திராஜ் கல்லூரியை 87-46 என்ற புள்ளிகள் கணக்கிலும் வென்று முதலிடம் பிடித்து, அன்னை தெரசா கோப்பையையும் கைப்பற்றியது.

சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி அணி, திருச்சி ஜமால் முகமது கல்லூரியை 76-75 என்ற புள்ளிகள் கணக்கிலும், திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரியை 58-36 என்ற புள்ளிகள் கணக்கிலும் வென்று இரண்டாவது இடம் பிடித்தது.

திங்கள்கிழமை இரவு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமுதீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார்.

கல்லூரிப் பொருளாளர் எம். ஜமால் முகமது, முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் ஏ. முகமுது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன், சுயநிதிப் பிரிவு இயக்குநர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர் ஹாஜிரா பாத்திமா, உடற்கல்வி இயக்குநர் பி.எஸ். ஷா இன்ஷா, உதவி உடற்கல்வி இயக்குநர் கே. பிரதீப் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

REGD. No. TRY/056/2018-2020 ★★★★
http://www.dailythanthi.com
– தினத்தந்தி, உயிர்த்துடிப்பு உள்ள நாளிதழ் –
# தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
திருச்சி (17–3–2020) செவ்வாய்க்கிழமை | மலர் 78 இதழ் 137
விகாரி ஞ பங்குனி மீ 4 வ ஹிஜிரி 1441 ரஜப் 21
அருள்தரும் ஆன்மிகம்
22 பக்கம் 500 காசு

SRI VIJAYAA TOUGHENED GLASS PVT LTD.,
VIJAYAATUFF
Thuvakudi, Trichy - 620 015.
Customer Care : +91 431 2501502 | 8428 151 151
Email : svtg@yahoo.com | www.vijayaatuff.com

NLJ
நியூ லெக்ஷ்மி ஜுவல்லரி
மலைவாசல், திருச்சி - 2. Tel : 2701931
www.nljdiamonds.com
E-mail: nljdiamond@gmail.com
"லெக்ஷ்மியின் தங்கம் அதிர்ஷ்டத்தின் அங்கம்"



## கல்லூரி மாணவிகளுக்கான மாநில கூடைப்பந்து போட்டி:

# சென்னை எஸ்.ஆர்.எம். அணி வெற்றி

திருச்சி, மார்ச்.17–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் அன்னை தெரசா கோப்பைக்கான மாநில அளவில் கல்லூரி மாணவிகளுக்கான கூடைப்பந்து போட்டி கடந்த 14-ந் தேதி தொடங்கியது. இதில் திருச்சி, சென்னை உள்ளிட்ட இடங்களில் இருந்து 8 கல்லூரி அணிகள் பங்கேற்றன. போட்டி நேற்றுடன் முடிவடைந்தது. லீக், சூப்பர் லீக் முறையில் நடந்த இந்த போட்டியில் சென்னை எஸ்.ஆர்.எம். அறிவியல் தொழில்நுட்ப கல்லூரி அணி வெற்றி பெற்று முதல் இடத்தை பிடித்தது. சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி அணி 2-வது இடத்தையும், திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி 3-வது இடத்தையும் பிடித்தது. பரிசளிப்பு நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப்பரிசு மற்றும் கோப்பைகளை கல்லூரி தாளாளர் காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முகமது ஆகியோர் வழங்கினர். நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாகிகள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

பூமெக்ஸ்
Poomex
VESTS | BRIEFS | TRUNKS | PANTIES

–TPTC Edition–

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

மூட்டு வலிக்கு முற்றுப்புள்ளி...
அதி நவீன மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
ஜி.வி.என். மருத்துவமனை (பி) லிட்.,
46, சிங்காரத்தோப்பு, சூப்பர் பஜார், திருச்சி - 620 008.
போன் : 0431-2700712, 2700811, 2705979, 2703945

திருச்சி • செவ்வாய் • மார்ச் 17, 2020 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 18 பக்கம் • 600 காசு • மலர் 69 • இதழ் 193




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த மாநில அளவிலான அன்னை தெரசா கோப்பைக்கான மகளிர் கூடைபந்து போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை எஸ்ஆர்எம் கல்லூரி அணி வீராங்கனைகள்.

# மாநில மகளிர் கூடைப்பந்து போட்டி சென்னை எஸ்ஆர்எம் கல்லூரி சாம்பியன்

திருச்சி, மார்ச் 17–

*திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த மாநில அளவிலான மகளிர் கூடைப்பந்து போட்டியில் சென்னை எஸ்ஆர்எம் கல்லூரி அணி சாம்பியன் பட்டம் வென்றது.*

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவிலான அன்னை தெரசா கோப்பைக்கான மகளிர் கூடைப்பந்து போட்டிகள் நடந்தன. இதில் லீக் போட்டியில் வெற்றி பெற்று சூப்பர் லீக் போட்டிக்கு சென்னை எஸ்ஆர்எம், எத்திராஜ், திருச்சி பிஷப் ஹீபர், ஜமால் முகமது கல்லூரிகள் தகுதிபெற்றன.

தொடர்ந்து நடந்த சூப்பர் லீக் போட்டிகள்அனைத்திலும் வெற்றி பெற்று சென்னை எஸ்ஆர்எம் கல்லூரி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. எத்திராஜ் கல்லூரி 2வது இடத்தையும், ஜமால் முகமது கல்லூரி 3வது இடத்தையும் பிடித்தன.

வெற்றி பெற்ற அணிகளுக்கு ஜமால் முகமது கல்லூரி பொருளாளர் ஜமால் முகமது கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார். போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா செய்திருந்தார்.

ஒரு புதிய அனுபவம்
தினகரன்
Dinakaran
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline


எல்கேஜி, யுகேஜி வகுப்புகளுக்கு விடுமுறை
பக்கம் 9

இன்றைய இதழுடன்
ஆன்மிக மலர்
புத்தகம் கேட்டு வாங்குங்கள்


ரஞ்சி கிரிக்கெட் சவுராஷ்டிரா சாம்பியன்
பக்கம் 11


● திருச்சி ● சனி, 14-3-2020 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 41 ஒளி 279 ● 16 பக்கம் ₹5

### பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில்

# தனியார் மெகா வேலைவாய்ப்பு முகாம்

## திருச்சியில் நாளை நடக்கிறது

**திருச்சி, மார்ச் 14:** பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் திருச்சியில் நாளை தனியார் மெகா வேலைவாய்ப்பு முகாம் நடக்கிறது. இதில் படித்து வேலைதேடும் இளைஞர்கள் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சார்பில் சார்பில் நாளை (15ம் தேதி) வேலைவாய்ப்பு முகாம் நடக்கிறது. அதன்படி இந்த முகாம் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் காலை 9 மணியளவில் தொடங்குகிறது. இதில் தென்னிந்திய மாநிலங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன. இம்முகாமில் 5.000க்கும் மேற்பட்ட காலி பணியிடங்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெற உள்ளது. வேலைவாய்ப்பு முகாமில் இளநிலை அல்லது முதுநிலையில் தேர்ச்சி பெற்ற மற்றும் இறுதியாண்டு பயிலும் அனைத்து துறைகளை சார்ந்த மாணவர்களும், 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு, டிப்ளமோ ஆகிய படிப்புகள் படித்த அனைத்து மாணவர்களும், பங்குபெறலாம். மாற்றுத்திறனாளிகளும் கலந்துகொள்ளலாம். ஒரு சில நிறுவனங்கள் மாற்றுதிறனாளிகளுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்க ஆர்வமாக உள்ளனர்.

விருப்பமுள்ள மாணவர்கள் நாளை காலை தங்களது சுயவிபரங்கள் (பயோடேட்டா-குறைந்தது 6 ஜெராக்ஸ் காப்பி) மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் கொண்டுவர வேண்டும். பணிகளின் விபரம் மற்றும் நிறுவனங்களின் விபரங்களை www.bdu.ac.in அல்லது www.bechrusa.in என்ற இணையதளங்கலில் தெரிந்துகொள்ளலாம். முகாமிற்கு பதிவு கட்டணம் இல்லை. விபரங்களுக்கு ஒருங்கிணைப்பாளர் பிரசன்னாவை 7604936972 என்ற எண்ணில் தொடர்புகொண்டு பயன்பெறலாம் என பல்கலைக்கழக பதிவாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருக்கிறார்.

ஒரு புதிய அனுபவம்
# தினகரன்
Dinakaran
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



எல்கேஜி, யுகேஜி வகுப்புகளுக்கு விடுமுறை
பக்கம் 9

இன்றைய இதழுடன் ஆன்மிக மலர் புத்தகம் கேட்டு வாங்குங்கள்



ரஞ்சி கிரிக்கெட் சவுராஷ்டிரா சாம்பியன்
பக்கம் 11



● திருச்சி ● சனி, 14-3-2020 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 41 ஒளி 279 ● 16 பக்கம் ₹5

## கல்லூரி மாணவர்களுக்கு

# போதை பொருள் தீமை விழிப்புணர்வு நிகழ்ச்சி




▶ திருச்சியில் போதை பொருள் தடுப்பு பிரிவு போலீசார் சார்பில் கல்லூரி மாணவர்களுக்காக நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இன்ஸ்பெக்டர் பால்சாமி பேசினார். அருகில் டிஎஸ்பி காமராஜ்.

### போலீசார் ஏற்பாடு

திருச்சி, மார்ச் 14: தமிழகம் முழுவதும் கஞ்சா, ஒயிட்னர், போதை ஊசி, போதை மாத்திரை பழக்கம் இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடம் அதிகளவில் பரவி உள்ளது.

இதனை கட்டுப்படுத்தும் விதமாக போதை பொருள் தடுப்பு பிரிவு போலீசார் கல்லூரி மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நேற்று போதை பொருளின் தீமை குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. காஜாமலை போதை மறுவாழ்வு மையம் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் போதை பொருள் தடுப்பு பிரிவு டிஎஸ்பி காமராஜ் தலைமை வகித்தார்.

இன்ஸ்பெக்டர் பால்சாமி வரவேற்று பேசினார். இதில் காஜாமலை போதை மறுவாழ்வு மைய இயக்குநர் பாரதிமோகன், கல்லூரி துணை முதல்வர் மற்றும் பொருளாளர் மற்றும் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர். இதில் போதை தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் பால்சாமி பேசுகையில், போதை பொருள் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தீமை குறித்தும் எதிர்கால சமுதாயம் மாணவர்களை நம்பி உள்ளதையும் விளக்கி பேசினார்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
திங்கள்கிழமை
16 மார்ச் 2020
திருச்சி
14 பக்கங்கள் ரூ.7

# வேலைவாய்ப்பு முகாமில் 521 பேருக்குப் பணி நியமன ஆணைகள்

**திருச்சி, மார்ச் 15:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில், 521 பேருக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஆகியவை இணைந்து ஜமால் முகமது கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை வேலைவாய்ப்பு முகாமை நடத்தின.

இந்த முகாமில் 102 தனியார் நிறுவனங்கள் பங்கேற்று, தங்களுக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்வு செய்தன. 2,789 பேர் முகாமில் பங்கேற்ற நிலையில், உரிய தகுதியின் அடிப்படையில் 521 பேர் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றத் தேர்வு செய்யப்பட்டனர். 42 பேருக்கு வெளிநாடுகளில் வேலை கிடைத்துள்ளது.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணைகள் பெற்றவர்களுடன் அமைச்சர் வெல்லமண்டி என்.நடராஜன், மாவட்ட ஆட்சியர் சு.சிவராசு, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கோ. பார்த்தசாரதி உள்ளிட்டோர்.

தேர்வு செய்யப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கி, சுற்றுலாத் துறை அமைச்சர் வெல்லமண்டி என். நடராஜன் பேசியது: திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 2020 - ஆம் ஆண்டு வரை (மாற்றுத்திறனாளிகள் உள்பட) 2.69 லட்சம் பேர் பதிவு செய்து, வேலைவாய்ப்புக்காக காத்திருக்கின்றனர். வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாக மாவட்டந்தோறும், தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

2019-20-ஆம் நிதியாண்டில் 88 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 11,715 பேருக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தவிர பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்றார் அமைச்சர்.

நிகழ்வில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கோ. பார்த்தசாரதி, பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளர் கோபிநாத், பல்கலைக்கழகத் தொழில் முனைவு, புதுமை மற்றும் தொழில்நெறி மைய இயக்குநர் ரவிச்சந்திரன், துணை இயக்குநர் என். பிரசன்னா, ஜமால் முகமது கல்லூரித் தாளாளர் ஏ.கே.காஜா நஜிமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மைய துணை இயக்குநர் வெ.சுப்பிரமணியன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

ஞாயிற்றுக்கிழமை
15 மார்ச் 2020
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில கூடைப்பந்து போட்டி தொடக்கம்

**திருச்சி, மார்ச் 14:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவில் கல்லூரி மாணவிகளுக்கு இடையிலான முதலாம் ஆண்டு அன்னை தெரசா கோப்பைக்கான கூடைப்பந்து போட்டி சனிக்கிழமை தொடங்கியது.

திருச்சி ஜமால் முகமது, பிஷப் ஹீபர், ஸ்ரீமதி இந்திரா காந்தி, ஹோலி கிராஸ், அண்ணா பல்கலைக்கழக பொறியியல், சென்னை எத்திராஜ், எஸ்.ஆர். எம். அறிவியல் தொழில் நுட்ப கழகம், தேனி மாவட்டம் பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் ஆகிய 8 கல்லூரி அணிகள் பங்கேற்கும் இப்போட்டி லீக் மற்றும் சூப்பர் லீக் முறையில் நடைபெற்றது.

சனிக்கிழமை நடைபெற்ற லீக் போட்டிகளில் திருச்சி, ஜமால் முகமது கல்லூரி, தேனி மாவட்டம் பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரியை 43-20 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.



சென்னை எத்திராஜ் கல்லூரி, திருச்சி ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரியை 49-30 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

சென்னை, எஸ்.ஆர்.எம். அறிவியல் தொழில் நுட்பக் கல்லூரி, திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியை 50-34 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியை 46-32 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது. ஜமால் முகமது கல்லூரி, ஹோலி கிராஸ் கல்லூரியை 54-40 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது. பிஷப் ஹீபர் கல்லூரி, , ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரியை 37-25 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது. தொடர்ந்து லீக் போட்டிகள் நடைபெற்றது.

முன்னதாக போட்டியை கல்லூரி பொருளாளர் எம். ஜெ. ஜமால் முகமது தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமுதீன், துணை செயலாளர் கே. அப்துஸ் ஸமத் மற்றும் கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காமதேனு வார இதழை தபால் மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
ஆண்டு சந்தா ₹850 ₹1300
https://subscriptions.hindutamil.in/print-subscription

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
திருச்சி பதிப்பு • திங்கள், மார்ச் 16, 2020
R.Dis.No.521/18 Vol.3 No.75
அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி
https://www.hindutamil.in
16 பக்கங்கள் ₹ 7

காமதேனு வார இதழை Courier மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
₹650 ₹910 அரையாண்டு சந்தா
https://subscriptions.hindutamil.in/print-subscription

## திருச்சி வேலைவாய்ப்பு முகாமில்

# 1,171 பேருக்கு பணி ஆணை

**திருச்சி**

திருச்சியில் நேற்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் 1,171 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக தொழில்முனைவோர் புதுமை மற்றும் தொழில்நெறி மையம், பல்கலைக்கழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி மையம், திருச்சி மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம், ஜமால் முகமது கல்லூரி, எக்வி டாஸ் சிறுநிதி வங்கி ஆகியன இணைந்து, ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் நேற்று வேலை வாய்ப்பு முகாமை நடத்தின.



▲ திருச்சியில் நேற்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்பதற்காக தங்களின் பெயர்களை பதிவு செய்யும் இளைஞர்கள், இளம்பெண்கள்.

படம்: ஜி.ஞானவேல்முருகன்

திருச்சி, சென்னை, கோவை உட்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 102 நிறுவனங்கள் பங்கேற்று, ஆட்களைத் தேர்வு செய்தன. இம்முகாமில் 4,461 பேர் கலந்துகொண்ட நிலையில், மாற்றுத்திறனாளிகள் 12 பேர் உட்பட மொத்தம் 1,171 பேர் பல்வேறு நிறுவனங்களில் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், 2,188 பேர் 2-ம் கட்ட தேர்வுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் என்.நடராஜன், முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் சு.சிவராசு, தமிழ்நாடு திறந்த வெளி பல்கலைக்கழக துணைவேந்தர் கே.பார்த்தசாரதி, பாரதிதாசன் பல்கலைக்கழக பதிவாளர் க.கோபிநாத், ஜமால் முகமது கல்லூரி தாளாளர் கே.காஜா நிஜாமுதீன், பாரதிதாசன் பல்கலைக்கழக தொழில்முனைவோர் புதுமை மற்றும் தொழில்நெறி மைய இயக்குநர்(பொ) என்.ரவிச்சந்திரன், துணை இயக்குநர்(பொ) என்.பிரசன்னா, மாவட்ட வேலை வாய்ப்பு மைய துணை இயக்குநர் வெ.சுப்பிரமணியன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அ.கலைச்செல்வன், மண்டல வேலைவாய்ப்பு இணை இயக்குநர் டி.விஜயகுமார், எக்விடாஸ் வேலைவாய்ப்பு அலுவலர் எம்.எஸ்.குணசேகர், மேலாளர் கே.வெங்கடேஷ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஒரு புதிய அனுபவம்
தினகரன்
Dinakaran
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline

நாமக்கல்லில் முட்டைகள் தேக்கம் பக்கம் 6
இன்று 2 தினகரன் 12+12+24 பக்க வசந்தம்
செல் போனுக்கு ஜிஎஸ்டி வரி கடும் அதிகரிப்பு பக்கம் 10

● திருச்சி ● ஞாயிறு, 15-3-2020 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 41 ஒளி 280 ● 12+12+24 பக்க வசந்தம் ● விலை ₹6

## மாநில அளவிலான வாலிபால் போட்டியில்

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி



**திருச்சி,மார்ச் 15:** திருச்சியில் நடந்த மாநில அளவிலான வாலிபால் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி பெற்றது.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான வாலிபால் போட்டி லீக் மற்றும் சூப்பர் லீக் முறையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

12 கல்லூரி அணிகள் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக் மற்றும் சூப்பர் லீக் முறையில் போட்டிகள் நடைபெற்றன.

ஏ பிரிவில், சிவகாசி, அய்ய நாடார் ஜானகி அம்மாள், சென்னை, லயோலா, திருச்சி, பிஷப் ஹீபர், கல்லூரி அணிகள் இடம்பெற்றன.

பி பிரிவில், திருச்சி, செயின்ட் ஜோசப் பி, ஜமால் முகமது,கோவை பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல், கல்லூரி அணிகள் இடம் பெற்றன.

திருவண்ணாமலை, வேட்டவலம், லயோலா, திருச்சி, செயின்ட் ஜோசப் ஏ, திண்டுக்கல், காந்தி கிராமிய நிகர் நிலை பல்கலைக்கழகம், கல்லூரி அணிகளும்,

டி பிரிவில், திருப்பத்தூர், தூய இருதய, கோவை, டாக்டர். என். ஜி.பி. கலை மற்றும் அறிவியல், திண்டுக்கல், ஜி.டி.என். கலை, கல்லூரி அணிகளும் விளையாடின.

ஏ பிரிவில் முதலிடம் பிடித்த திருச்சி, பிஷப் ஹீபர், பி பிரிவில் முதலிடம் பிடித்த திருச்சி, ஜமால் முகமது, சி பிரிவில் முதலிடம் பிடித்த திருச்சி, செயின்ட் ஜோசப் ஏ, டி பிரிவில் முதலிடம் பிடித்த திண்டுக்கல், ஜி.டி.என். கலை ஆகிய நான்கு கல்லூரி அணிகள் சூப்பர் லீக் போட்டியில் விளையாடின.

சூப்பர் லீக் போட்டிகளில் திருச்சி, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரியை 32-34, 25-23, 25-14, 25-21 என்ற புள்ளிகள் கணக்கிலும்,

திண்டுக்கல், ஜி.டி.என். கலை கல்லூரியை 25-19, 25-18, 24-26, 25-17 என்ற புள்ளிகள் கணக்கிலும் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று 6 புள்ளிகள் பெற்றது.

செயின்ட் ஜோசப் கல்லூரி ஏ, திண்டுக்கல், ஜி.டி.என். கலை கல்லூரியை 25-18, 22-25, 25-20, 25-22 என்ற புள்ளிகள் கணக்கிலும், ஜமால் முகமது கல்லூரியை 28-26, 22-25, 25-11, 27-25 என்ற புள்ளிகள் கணக்கிலும் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று 6 புள்ளிகள் பெற்றது.

ஜமால் முகமது மற்றும் செயின்ட் ஜோசப் கல்லூரி அணிகள் தலா 6 புள்ளிகள் பெற்றதால் செட் விகித அடிப்படையில் ஜமால் முகமது கல்லூரி முதல் இடத்தையும், செயின்ட் ஜோசப் கல்லூரி இரண்டாவது இடத்தையும் பெற்றன.

பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் முதலிடம் பிடித்த திருச்சி ஜமால் முகமது மற்றும் இரண்டாவது இடம் திருச்சி, செயின்ட் ஜோசப் பிடித்த கல்லூரி அணிகளுக்கு கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களும் மூன்றாவது இடம் பிடித்த திருச்சி, பிஷப் ஹீபர் மற்றும் நான்காவது இடம் பிடித்த திண்டுக்கல், ஜி.டி.என். கலை கல்லூரி அணிகளுக்கு சான்றிதழ்களும், நான்கு இடம் பிடித்த கல்லூரி அணிகளுக்கு பரிசுத்தொகை முறைய ₹.10,000/-, ₹. 8,000/-, ₹. 6,000/-, ₹. 4,000/- ஆகியவற்றை கல்லூரி அதிபர் தந்தை லியோணர்ட் ரிச்சர்ட் வழங்கினார்.

REGD. No. TRY/056/2018-2020
இன்டர்நெட் முகவரி: ★★★★
http://www.dailythanthi.com

- சென்னை, திருச்சி, மதுரை, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சாவூர், திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய், கொழும்பு நகரங்களில் அச்சாகிறது -

ஞாயிறு மலர், குடும்ப மலர்
28 பக்கம் 600 காசு

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

திருச்சி (15-3-2020) ஞாயிற்றுக்கிழமை | மலர் 78 இதழ் 135

விகாரி ஶ்ரீ பங்குனி மீ 2 உ ஹிஜிரி 1441 ரஜப் 19

ஆனந்தம்...... ஆனந்தாவின் ஆடைகளில் ஆரம்பம்
மக்கள் போற்றும் மகத்தான ஜவுளி நிறுவனம்!
ஆனந்தா
சில்க்ஸ் பாரடைஸ்
என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2.

AMMAN-TRY
TMT BARS
500 guarD
உறுதியின் அடையாளம்
✆ : 7550301234

## திருச்சியில் மாநில அளவில்

# கல்லூரி மாணவிகளுக்கான கூடைப்பந்து போட்டி தொடங்கியது



திருச்சி, மார்ச்.15–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில், அன்னை தெரசா கோப்பைக்கான மாநில அளவில் கல்லூரி மாணவிகளுக்கு இடையே யான கூடைப்பந்து போட்டி நேற்று தொடங்கியது. போட்டியில் 8 கல்லூரிகள் அணிகள் பங்கேற்று லீக் மற்றும் சூப்பர் லீக் முறையில் நடக்கிறது. நேற்று காலை நடந்த லீக் ஆட்டத்தில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி, பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி அணியுடன் மோதியது. ஆட்ட முடிவில் 43–20 என்ற புள்ளிக்கணக்கில் ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி பெற்றது. 2–வதாக நடந்த ஆட்டத்தில் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி அணி 49–30 என்ற புள்ளிக்கணக்கில் திருச்சி சத்திரம் ஸ்ரீமதி இந்திரா காந்தி மகளிர் கல்லூரி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் சென்னை எஸ்.ஆர்.எம். அறிவியல் தொழில்நுட்ப கல்லூரி அணி 50–34 என்ற புள்ளிக்கணக்கில் திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரி அணியை வீழ்த்தி வென்றது.

4–வதாக நடந்த ஆட்டத்தில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணி 46–32 என்ற புள்ளிக்கணக்கில் திருச்சி அண்ணா பல்கலைக்கழக பொறியியல் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. மாலையில் நடந்த ஆட்டத்தில் ஜமால் முகமது கல்லூரி அணி 54–40 என்ற புள்ளி கணக்கில் ஹோலிகிராஸ் மகளிர் கல்லூரி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணி 37–25 என்ற புள்ளிக்கணக்கில் ஸ்ரீமதி இந்திரா காந்தி மகளிர் கல்லூரியை வீழ்த்தியது. கூடைப்பந்து போட்டிகள் நாளை(திங்கட்கிழமை) வரை நடக்கிறது. அன்று இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் நடக்கிறது.

Celebrate your Special Occasions at Café CakeBee
Café CakeBee gourmet dining
Soups | Salads
Burgers | Pizzas | Pastas
Sandwiches | Desserts
Milkshakes
For Reservations : 96599 31113
20, Williams Rd, Cantonment, Tiruchirappalli - 1
ALSO AT Chennai & Coimbatore

# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

–TPTC Edition–
SINCE 1945
AJH
அமர் ஜுவல்லரி
NEAR ROCKFORT TEMPLE, TRICHY-2
2703321 / 2702860 பார்க்கிங் வசதி உண்டு

திருச்சி • ஞாயிறு • மார்ச் 15, 2020 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 18 பக்கம் • 600 காசு • மலர் 69 • இதழ் 191




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடக்கும் மாநில அளவிலான மகளிர் கூடைபந்து போட்டியில் திருச்சி இந்திராகாந்தி, சென்னை எத்திராஜ் கல்லூரி மாணவிகள் பந்தை கூடையில் போட முயற்சிக்கின்றனர்.

ஒரு புதிய அனுபவம்
# தினகரன்
Dinakaran
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



இயக்குனருடன் திருமணமா? அனுஷ்கா பதில் பக்கம் 10



ஆபத்தை உணரவில்லையா அரசுகள்? பக்கம் 6

பாகிஸ்தான் சூப்பர் லீக் அதிரடி சதம் பக்கம் 11



● திருச்சி ● திங்கள், 16-3-2020 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 41 ஒளி 281 ● 16 பக்கம் ₹5

# மாநில கூடைப்பந்து போட்டி



▶ கல்லூரிகளுக்கிடையே அன்னை தெரசா கோப்பைக்கான மாநில கூடைப்பந்து போட்டி திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் நேற்று நடந்தது. இதில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடிய சென்னை எத்திராஜ் கல்லூரி அணி 58:49 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்றது.

REGD. No. TRY/056/2018-2020 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

– இந்திய நாளிதழ்களில் முதல் இடம் வகிக்கும் தமிழ் நாளிதழ் – தினத்தந்தி –

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

திருச்சி (16–3–2020) திங்கட்கிழமை | மலர் 78 இதழ் 136

விகாரி ஞு பங்குனி மீ 3 உ ஹிஜிரி 1441 ரஜப் 20

மாணவர் ஸ்பெஷல் மற்றும் கல்வி செய்திகள்
22 பக்கம் 500 காசு

பட்டின் பாரம்பரியம்... 15%
தைலா Thaila
பட்டு • ரெடிமேட்ஸ் • மில்ஜவுளிகள்
55, பெரியகடை வீதி, திருச்சி-2 போன்: 2705554

புதுக்கோட்டையில் மதிப்புமிக்க
ISO 9001: 2008 தரச்சான்றிதழ் பெற்ற ஒரே நிறுவனம்
100% 916 ஹால்மார்க் தங்க நகை ஷோரூம்
வசி. சண்முகம்பிள்ளை
தெற்கு ராஜவீதி, புதுக்கோட்டை-622 001.
போன்: 04322-221869 | 223869



### வேலைவாய்ப்பு முகாமில்

# 521 பேருக்கு பணி நியமன ஆணை

## அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் வழங்கினார்

திருச்சி,மார்ச்.16–

திருச்சி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம் ஆகியவை சார்பில் நேற்று திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமிற்கு திருச்சி மாவட்ட கலெக்டர் சிவராசு தலைமை தாங்கினார். முகாமில் 2,789 பேர் கலந்து கொண்டனர். 102 தனியார் நிறுவனங்களை சேர்ந்த அதிகாரிகள் அவர்களுக்கு நேர்காணல் நடத்தி தகுதியானவர்களை தேர்வு செய்தனர். இதில் மொத்தம் 521 பேர் பல்வேறு வேலைகளுக்கு தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு பணி நியமன ஆணைகளை அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில், இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கென தனிப்பட்ட முறையில், கல்லூரி வளாகங்களிலேயே போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக நடத்தப்பட்டு வருகின்றன. இதனை மாணவர்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். வெளிநாட்டு உணவு கலாசாரத்துக்கும், நமது நாட்டு கலாசாரத்துக்கும் வேறுபாடு உண்டு. நமது நாட்டில் சுகாதாரமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். எனவே, கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து நாம் அச்சப்பட தேவையில்லை என்றார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழக துணை வேந்தர் பார்த்தசாரதி, மாவட்ட வேலைவாய்ப்பு மைய துணை இயக்குனர் சுப்பிரமணியன் உள்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பதை ஒட்டுமொத்தமாக பதிவு செய்து உள்ளோம்.

இதனையும் மீறி வருகிற ஏப்ரல் 1–ந்தேதி முதல் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி தொடங்கினால் தமிழகத்தில் ஒத்துழையாமை இயக்கம் நடத்துவோம். அதன் மூலம் தமிழக அரசை பணிய வைப்போம்' என்றார்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

SATURDAY, MARCH 14, 2020

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
24 pages • ₹6.00



Sengar gets 10 years for the death of Unnao rape victim's father
page 9



U.S. air strikes on pro-Iranian military factions in Iraq kill 6
page 14



Markets test investors' nerve with wild swings, Sensex ends 1,325 pts up
page 15

Unadkat leads from the front as Saurashtra wins maiden Ranji Trophy
page 17



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW · CUTTACK · PATNA

# Job fair on Sunday

**SPECIAL CORRESPONDENT**
TIRUCHI

The Bharathidasan University Entrepreneurship, Innovation and Career Hub (BECH) and Placement and Training Cell will organise a job fair here on March 15.

The fair, being organised in association with the district administration, District Employment and Career Guidance Centre, Tamil Nadu Open University, Jamal Mohamed College and the Equitas Small Finance Bank, would be held at the Jamal Mohamed College campus.

More than 100 companies will participate in the event to recruit candidates for about 5,000 positions. Companies such as Randstad India Ltd, IDBI Federal, ABT Maruti, TVS Training & Services, JM Frictech India, ShriramTransport, ICICI Academy for Skills, Mahindra Shiva Automobiles , Apollo Pharmacy, VDART Software Services, TIZ Consultancy India, RITE CONS Services, Clusters, Rising Stars Mobiles, Eureka Forbes, DSM SOFT, Winners Institute of Communicative English, OMEGA Healthcare, QMAX Systems India, Vertical Solution, A.S.P Infotech, Broad Gate Infotech, SV Dynamics Organization, New Life Services, Aditybirla Capital, GVK- EMRI-108 Ambulance, Shriram Insurance, Fusion Micro Finance, Bright Star Educational Institution, DSM Soft, and Dextrasys Technologies would participate in the fair to recruit candidates for positions such as agency leader, team leader, supervisors, management trainee, recruitment managers, relationship officer, secretary, junior software developer, GST account assistant, web developer, video wizards, customer support executive, branch credit manager, corporate relationship manager, network engineer, junior geo-spacial engineer and others.

Graduates and post graduates in any discipline, besides candidates with qualifications such as SSLC, HSC and diploma holders can attend the camp. A few companies were specially interested in recruiting persons with disabilities. Those interested can attend the fair with copies of their resume and passport size photographs. The candidates are expected to be prepared for personal interviews, group discussions and aptitude tests. The details of various positions and participating companies were available at the BECH website: www.bechrusa.in

There will be no registration fee for participation, a press release said. For more details, contact N. Prasanna, Deputy Director (in-charge), BECH, through email: off@bechrusa.in or mobile phone - 7604936972.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 TRICHY | MONDAY, MARCH 16, 2020 | 14 PAGES | METRO | PRICE ₹2.50 VOLUME 7, ISSUE 181

THE TIMES OF INDIA

To advertise with us, call 1800 120 5474 | To order your copy, call 1800 1200 004 toll free or visit - subscribe.timesgroup.com

TIMESOFINDIA.COM | EPAPER.TIMESOFINDIA.COM

INDIA'S LARGEST ENGLISH NEWSPAPER







**Queen Elizabeth II** shifted from Buckingham Palace to Windsor Castle as UK plans isolation measures for those aged over 70; virus toll hits 21, doubling from 11 within a day

**Donald Trump** has tested negative for coronavirus, says White House physician, hours after US declares Covid-19 pandemic a national emergency

Spanish PM Pedro Sanchez's wife **Begona Gomez** tests positive for virus. The couple is stable and following preventive measures

**Ren Zhiqiang,** a high-profile former executive who called Xi Jinping a "clown" over coronovirus response, has gone missing, say friends

**Viswanathan Anand,** scheduled to return home from Germany on Monday after a chess event, forced to extend his stay for a fortnight

**Elon Musk,** who had earlier said coronavirus debate was 'just dumb', now terms unnecessary fear a 'mind-killer'

# Over lk get jobs in mega fair at Jamal Mohamed College



**PROUD MOMENT:** Tourism Minister Vellamandi N Natarajan participated in the job fair and handed over job offers to the successful candidates in the presence of district collector S Sivarasu.

TIMES NEWS NETWORK

**Trichy:** A total of 1,171 candidates, including 12 differently abled students, were the lucky lot as they returned home with offer letters from a Mega job fair organised at Jamal Mohamed College on Sunday.

Besides, another 2,188 candidates were shortlisted for further selection processes in the respective companies. Organised by Bharathidasan University Entrepreneurship, Innovation and Career Hub (BECH) along with the Equitas Small Finance Bank, a total of 102 companies from various parts of south India and 4461 candidates participated in the job fair.

The candidates were put through different types of selection processes like Aptitude Tests, Group Discussions and Personal Interviews by prospective employers.

N Prasanna, deputy director (in-charge) companies offering jobs in the tele medicine sector especially in the pharmaceutical sector were more in numbers.

# ஜமால் முகமது கல்லூரியில் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி கருத்தரங்கு: பன்னாட்டு பல்கலைக்கழக பேராசிரியர் பங்கேற்பு

திருச்சி, ஜன.9–

ஜமால் முகமது கல்லூரியில் வேதிப்பொருள் மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி குறித்த ஒருநாள் பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது.

இக் கருத்தரங்க நிகழ்வுக்கு, கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, துணைச் செயலர் கே.அப்துஸ் சமது ஆகியோர் வாழ்த்திப் பேசினர். வேதியியல் துறைத் தலைவர் முகமது சிகாபுதீன் வரவேற்றார்.

மருந்து கண்டிப்புகளில் வேதியியல் தொழில்நுட்பங்கள் மற்றும் அதன் சாத்தியக்கூறுகள் எனும் தலைப்பில் மலேசியாவில் உள்ள கெஸ்ட் பன்னாட்டு பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் விஜய் கோத்ரா உரையாற்றினார். மணிப்பால் பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் பாலாஜி, மருந்து வடிவமைப்பில் வேதி தகவலியலின் முக்கிய பங்கு எனும் தலைப்பில் உரையாற்றினார்.




மத்தியபிரதேச எஸ்விவிவி பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் ஜெயக்குமார், கரிம வேதியியல் தயாரிப்புகள் குறித்து விளக்கிப் பேசினார். இக் கருத்தரங்கில், நாடு முழுவதும் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த 450 ஆராய்ச்சியாளர்கள் தங்களது கண்டுபிடிப்புகள் குறித்த அறிக்கையை தாக்கல் செய்து பேசினர். ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்து கட்டுரைகளுடன் கூடிய மற்றும் கருத்தரங்கின் நோக்கங்கள் குறித்து விளக்கிடும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. ஏற்பாடுகளை, வேதியியல் துறை உதவிப் பேராசிரியர்கள் அன்வர் சாதிக், அஸ்ரா அகமத் மற்றும் வேதியியல் துறை ஆசிரியா்கள், மாணவர், மாணவிகள் செய்திருந்தனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வெள்ளிக்கிழமை
10 ஜனவரி 2020
திருச்சி
20 பக்கங்கள் ரூ.7

# 24 தனியார் உயர் கல்வி நிறுவனங்களுக்கு விருதுகள்

## முதல்வர் வழங்கினார்

**சென்னை, ஜன.9:** தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழும தேசியக் கல்வி மாநாட்டில் தமிழகத்தில் சிறந்து விளங்கும் 24 தனியார் உயர் கல்வி நிறுவனங்களுக்கு முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமம் சார்பில் சென்னையில் நடத்தப்பட்ட இரண்டு நாள் தேசியக் கல்வி மாநாட்டின் நிறைவு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவின் நிறைவாக சிறப்பாக செயல்பட்டு வரும் கல்வி நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி பங்கேற்று, தமிழகத்தில் உயர் கல்வித் துறையில் சிறந்து விளங்கும் 24 தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழும கல்வி மாநாட்டு விருதுகளை வழங்கினார்.

தேசிய உயர் கல்வி தரவரிசை (என்ஐஆர்எப்), 'நாக்' அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு தரவுகளின் கீழ் ஆராய்ந்து, அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட அமிர்தா விஷ்வ வித்யா பீடம், சென்னை லயோலா கல்லூரி, எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி, தஞ்சை சண்முகா கலை அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அகாதெமி, ஹிந்துஸ்தான் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம், வேலூர் விஐடி, சென்னை எம்.சி.சி., எஸ்.ஆர்.எம்., மதுரை லேடி டோக் கல்லூரி, பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, சவிதா பொறியியல் கல்லூரி, சென்னை பெண்கள் கிருத்தவக் கல்லூரி, ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி, சத்தியபாமா அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம், தியாகராஜர் கல்லூரி, டாக்டர் எம்ஜிஆர் கல்வி ஆராய்ச்சி நிறுவனம், எத்திராஜ் மகளிர் கல்லூரி, ஜஸ்டிஸ் பஷீர் அகமது சையது மகளிர் கல்லூரி, வேலம்மாள் பொறியியல் கல்லூரி, எம்.ஓ.பி.வைஷ்ணவ கல்லூரி உள்பட 24 தனியார் உயர் கல்வி நிறுவனங்களுக்கு முதல்வர் விருதுகளை வழங்கினார்.

விழாவில் முன்னதாக தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழும இயக்குநர் பிரபு சாவ்லா வரவேற்புரை ஆற்றினார்.

அப்போது பேசிய அவர், முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் எளிமை, அனைவரையும் ஒருங்கிணைத்து நிலைத்த ஆட்சியை அளிக்கும் திறன் ஆகியவற்றின் காரணமாகத்தான், நிர்வாகத்தில் தமிழகம் இந்திய அளவில் முதல் மாநிலம் என்ற விருதை பெற்றிருக்கிறது என்றார் அவர்.

மேலும், முதல்வர் எடப்பாடி பழனிசாமி அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலத் திட்டங்கள், பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி மேம்பாடு திட்டங்கள், நதிநீர்ப் பிரச்னைக்கான தீர்வு என்பன உள்ளிட்ட அரசின் சாதனைகளை விளக்கும் குறும்படம் ஒளிபரப்பப்பட்டது.

தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மனோஜ்குமார் சொந்தாலியா, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, உயர் கல்வித் துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வெள்ளிக்கிழமை
10 ஜனவரி 2020
திருச்சி
20 பக்கங்கள் ரூ.7

# சுற்றுச்சூழல் ஆராய்ச்சி கருத்தரங்கு

**திருச்சி, ஜன. 9:** ஜமால் முகமது கல்லூரியில் வேதிப்பொருள் மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி குறித்த ஒருநாள் பன்னாட்டு கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

இக் கருத்தரங்க நிகழ்வுக்கு, கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, துணைச் செயலர் கே. அப்துஸ் சமது ஆகியோர் வாழ்த்திப் பேசினர். வேதியியல் துறைத் தலைவர் முகமது சிகாபுதீன் வரவேற்றார்.

மருந்து கண்டிப்புகளில் வேதியியல் தொழில்நுட்பங்கள் மற்றும் அதன் சாத்தியக்கூறுகள் எனும் தலைப்பில் மலேசியாவில் உள்ள கெஸ்ட் பன்னாட்டு பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் விஜய் கோத்ரா உரையாற்றினார். மணிப்பால் பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் பாலாஜி, மருந்து வடிவமைப்பில் வேதி தகவலியலின் முக்கிய பங்கு எனும் தலைப்பில் உரையாற்றினார். மத்தியபிரதேச எஸ்விவிவி பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் ஜெயக்குமார், கரிம வேதியியல் தயாரிப்புகள் குறித்து விளக்கிப் பேசினார். இக் கருத்தரங்கில், நாடு முழுவதும் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த 450 ஆராய்ச்சியாளர்கள் தங்களது கண்டுபிடிப்புகள் குறித்த அறிக்கையை தாக்கல் செய்து பேசினர். ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்து கட்டுரைகளுடன் கூடிய மற்றும் கருத்தரங்கின் நோக்கங்கள் குறித்து விளக்கிடும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

ஏற்பாடுகளை, வேதியியல் துறை உதவிப் பேராசிரியர்கள் அன்வர் சாதிக், அஸ்ரா அகமத் மற்றும் வேதியியல் துறை ஆசிரியர்கள், மாணவர், மாணவிகள் செய்திருந்தனர்.




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற சுற்றுச்சூழல் ஆராய்ச்சி கருத்தரங்கில், கருத்தரங்க மலரை கல்லூரிச் செயலர் காஜா நஜிமுதீன் வெளியிட, பெற்றுக் கொள்கிறார் கல்லூரிப் பொருளாளர் ஜமால் முகமது. உடன் (இடமிருந்து) இணைப் பேராசிரியர்கள் விஜய் கோத்ரா, பாலாஜி, கல்லூரி துணைச் செயலர் அப்துஸ் சமது.


ஒரு புதிய அனுபவம்
தினகரன்
Dinakaran
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline

₹31,000ஐ தாண்டியது தங்கம் பக்கம் 4

10,+2 மற்றும் நீட் மாதிரி வினாவிடை புத்தகம் கேட்டு வாங்குங்கள்


ரன் குவிப்பில் பிளெமிங்கை முந்தினார் பக்கம் 11


●திருச்சி ●செவ்வாய், 7-1-2020 ●சென்னை ●புதுவை ●வேலூர் ●சேலம் ●கோவை ●திருச்சி ●மதுரை ●நெல்லை ●நாகர்கோவில் ●பெங்களூர் ●மும்பை ●டெல்லி ●கதிர் 41 ஒளி 213 ●16 பக்கம் ₹5


# ஜமால் முகமது கல்லூரி பட்டமளிப்பு விழா

## 1,135 மாணவர்கள் பட்டம் பெற்றனர்

திருச்சி, ஜன.7: திருச்சி ஜமால் முகம்மது தன்னாட்சிக் கல்லூரியின் சுயநிதி ஆண்கள் பிரிவிற்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணை வேந்தர் கிருஷ்ணன் 1,135 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி பேசுகையில், 'வாழ்வில் பட்டம் பெறுவதோடு, பண்புடனும்-ஒழுக்கத்துடனும்-அடக்கத்துடனும் நடந்துகொண்டால் வெற்றிமேல் வெற்றி காணலாம். நாட்டின் எதிர்காலம் இளைஞர்களாகிய உங்களிடம்தான் உள்ளது. அனைத்து துறைகளிலும் சாதனை படைக்க குறைந்த பட்ச தகுதி இளநிலை பட்டப்படிப்பு. அறிவியல், விஞ்ஞானம், கணினி அறிவியல், தொழில்நுட்பம் என பரந்து விரிந்து கிடக்கும் இவ்வுலகில், ஒவ்வொரு துறையிலும் இளைஞர்கள் கால்பதித்து சாதனை படைக்க விடா முயற்சி அவசியம்' என்றார். கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முஹம்மது உள்பட பலர் பங்கேற்றனர்.

துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 | TRICHY | TUESDAY, JANUARY 7, 2020 | 14 PAGES | METRO | PRICE ₹2.50 VOLUME 7, ISSUE 123

THE TIMES OF INDIA

TIMESOFINDIA.COM | EPAPER.TIMESOFINDIA.COM
INDIA'S LARGEST ENGLISH NEWSPAPER

To advertise with us, call 1800 120 5474 | To order your copy, call 1800 1200 004 toll free or visit - subscribe.timesgroup.com

PREZ TRUMP WARNS IRAQ OF SANCTIONS IF IT EXPELS AMERICAN TROOPS 9

AKBAR PADAMSEE, ICONIC ARTIST & PADMA BHUSHAN AWARDEE, DIES AT 91

STEP INTO 2020 WITH COOL EYEGLASSES & SUNGLASSES FROM COOLWINKS! Every participant gets sunglasses for free* with ₹500 Coolwinks E-voucher.
Answer 2 simple questions correctly to win e-vouchers the same day
To participate, SMS your <CITY> <SPACE> A1 <SPACE> <Answer 1> <SPACE> A2 <SPACE> <Answer 2> to 8745966661
COOLWINKS Presents HAPPYTIMES #HowCoolIsThat
₹1000 Coolwinks E-Vouchers (min. order value ₹1000) for 10000 winners daily.
A Green ride for the new decade! Participate daily this month for a chance to ride home an eco-friendly Avon E-Bike.
TODAY'S HAPPY TIMES Q1. Which UT will hold Assembly polls on Feb 8? READ Q2. Which city is hosting the 2nd SA-Eng Test? WIN Weekly draws for 12000 TIMESPOINTS every Sunday. *T&Cs www.toihappytimes.com



# International conference on advanced computing

Jamal Mohammed College organized the International Conference on Advanced Computing (ICAC-2019) at the college in Trichy on December 11 and 12. Research articles published in Scopus, an indexed international journal of recent technology and engineering, were released during the inaugural function. A memorandum of understanding was also signed with the Multimedia University, Malaysia, on the occasion.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
செவ்வாய்க்கிழமை
7 ஜனவரி 2020
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# 'மாணவர்கள் தங்களது சுய வரலாற்றை அறிந்துகொள்வது மிகவும் அவசியம்'

**திருச்சி, ஜன. 6 :** மாணவர்கள் தங்களது சுய வரலாற்றை அறிவது மிக முக்கியம். வெளிநாடுகளில் 10 தலைமுறையினரின் பெயர்கள் மற்றும் விவரங்களை அறிந்து வைத்துள்ளனர் என்றார் மதுரை காரமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் எம். கிருஷ்ணன்.

திருச்சி ஜமால்முகமது கல்லூரியில், ஆடவர், சுயநிதிப்பிரிவில் பட்டப்படிப்பு பயின்ற 1,135 பேருக்கு பட்டமளிப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று பட்டங்களை வழங்கி அவர் மேலும் பேசியது:

ஏழை மாணவர்களின் கல்விக்காக அரும்பாடு பட்டவர் முன்னாள் முதலமைச்சர் காமராஜ். அவரில்லையேல், இன்று நாம் பட்டங்கள் பெறுவது சாத்தியமில்லை. அதுபோல இளைஞர்களின் நலனில் அக்கறை கொண்ட நமது குடியரசு முன்னாள் தலைவர் ஏபிஜெ. அப்துல்கலாம். இவர்கள் இருவருமே அப்பழுக்கற்ற துளியும் சுயநலமின்றி தங்களது வாழ்க்கையை சமூகத்துக்காகவே வாழ்ந்தவர்கள். அவர்கள்போல, இங்கே பட்டம் பெறும் மாணவர்கள் சமூகப் பணியாற்ற முன்வரவேண்டும்.

இளைஞர்களுக்கு 3 அறிவுரைகள் மட்டுமே கூறவிரும்புகிறேன். முதலாவது, அதிகாலை எழும் பழக்கம் வேண்டும். அடுத்தபடியாக, உணவு உட்கொள்ளும்போது, தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு உட்கொள்வது கூடாது. அது உடல்நலத்துக்கு கேடு, ஆரோக்கியமற்ற நிலை ஏற்படும். மூன்றாவதாக, எந்தவிதமான மின்னணு சாதனங்களில் மூழ்கிக் கிடந்தாலும், தினசரி சராசரியாக ஒரே ஒரு மணி நேரம் மட்டும் பேற்றோருடன் செலவிடுங்கள். அது, உங்கள் உறவுமுறையை மட்டுமின்றி வம்சத்தையே வயப்படுத்தும்.

மாணவர்கள் முதலில் தங்களது சுய வரலாற்றைத் தெரிந்து கொள்வது அவசியம். மேலை நாடுகளில் 10 தலைமுறைகள் வரையில் தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளனர். ஆனால் நாம் இரு தலைமுறைகளுக்கு மேல் தெரிந்துகொள்வதில்லை. நமது முன்னோர்களைப் பற்றியும் தெரிந்துகொள்வதில்லை. நாம் மிகவும் பாரம்பரியமான, சிறப்பான நாட்டைச் சேர்ந்தவர்கள், துரதிஷ்ட வசமாக ஆங்கிலேயரிடம் அடிமைப்படவேண்டியதாகிப் போனது. எனவே நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கைகளில் தான் உள்ளது. அனைத்துத் துறைகளிலும் மாணவர்கள் தடம் பதித்து நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும் என்றார் அவர்.

நிகழ்வின்போது, கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் தலைமை வகித்தார். செயலாளர் ஏ. கே. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது, உதவிச் செயலாளர் கே. அப்துல்சமது, இயக்குநர் அப்துல் காதர் நிஹால் மற்றும் கல்லூரி நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

திங்கள்கிழமை
6 ஜனவரி 2020
திருச்சி
16 பக்கங்கள் ரூ.7

# 'ஒழுக்கத்தையும் மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்'



திருச்சி எம்.ஐ.இ.டி. கல்வி நிறுவன வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விழாவில், முத்து விழா மலரை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.எம். காதர் மொகிதீன் வெளியிட அதை பெற்றுக் கொள்கிறார் ஜமால் முகமது கல்லூரிச் செயலர் ஏ.கே.காஜா நஜ்முதீன். உடன் (இடமிருந்து) கல்லூரி துணைத் தலைவர் எம்.யூ. அப்துல் ஜலீல், மாநிலங்களவை உறுப்பினர் டி.கே. ரங்கராஜன், எம்.ஐ.டி. கல்வி நிறுவனங்கள் தலைவர் ஏ. முகமது யூனுஸ், ராமநாதபுரம் மக்களவை உறுப்பினர் கே. நவாஸ் கனி, சட்டப்பேரவை உறுப்பினர் கே.என். நேரு, திருச்சி மக்களவை உறுப்பினர் சு. திருநாவுக்கரசர், சட்டப்பேரவை உறுப்பினர்கள் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

**திருச்சி, ஜன. 5:** மாணவர்கள் பாடத்தை மட்டுமின்றி, ஒழுக்கத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.எம். காதர் மொகிதீன்.

திருச்சி எம்.ஐ.இ.டி. கல்வி நிறுவன வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிறுவனர் நாள் விழாவில் பங்கேற்று, முத்து விழா மலரை வெளியிட்டு மேலும் அவர் பேசியது:

மனிதர்கள் ஒழுக்கத்தை வாழ்வில் கற்றுக் கொண்டு, உன்னத வாழ்க்கையை வாழ வேண்டும். அதற்கான முயற்சிகளை கல்வி நிறுவனங்களில் இருந்தே மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டும். கல்வி பயிலும் மாணவர்கள் பாடத்தை மட்டுமின்றி, ஒழுக்க நெறி, பண்பாட்டு வழிமுறைகளை கற்றுக் கொள்ள வேண்டும்.

கோயில், தேவாலயங்கள், மசூதிகளில் உள்ள வாழ்க்கை தத்துவ வாசகங்கள் மனிதர்களின் வாழ்க்கையில் தூண்டுகோளாக இருப்பது போல, கல்வி நிறுவனங்களில் வாசகங்கள் அடங்கிய பொன்மொழிகள் இருந்தால் மாணவர்களின் வாழ்க்கை சிறப்படையும்.

ஆசிரியர்களின் ஆலோசனைகளைப் பெற்று செயல்படும் கல்வி நிறுவனங்கள் மட்டும வெற்றி பெறும். கல்வி நிறுவனங்கள் சமூகப்பணிகளையும் மேற்கொண்டால் மட்டுமே சமுதாய மக்களுக்கு செய்யும் சிறப்பான பணி ஆகும் என்றார். முன்னதாக கே.எம். காதர் மொகிதீன் வெளியிட்ட முத்து விழா மலரை ஜமால் முகமது கல்லூரிச் செயலர் ஏ.கே.காஜா நஜ்முதீன் பெற்றுக் கொண்டார்.

விழாவில், திருச்சி தெற்கு மாவட்ட திமுக செயலரும், சட்டப்பேரவை உறுப்பினருமான கே.என். நேரு, மக்களவை உறுப்பினர்கள் திருச்சி சு.திருநாவுக்கரசர்,ராமநாதபுரம்கே.நவாஸ்கனி, மாநிலங்களவை உறுப்பினர் டி.கே. ரங்கராஜன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கே.ஏ.எம். முகம்து அபூபக்கர், முன்னாள் மக்களவை உறுப்பினர் எம்.அப்துல் ரஹ்மான், திருச்சி எப்எஸ்எம்வணிகநிறுவன இயக்குநர் முகமது இஸ்மாயில், அரிமா முன்னாள் மாவட்ட ஆளுநர் எஸ்.முகமது ரபி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று பேசினர்.

விழாவுக்கு எம்.ஐ.இ.டி. கல்வி நிறுவனங்கள் தலைவர் எ.முகமது யூனுஸ் தலைமை வகித்தார். துணைத் தலைவர் எம்.ஒய். அப்துல் ஜலீல் வரவேற்புரையாற்றினார்.

தொடர்ந்து சுகி சிவம் நடுவராகப் பங்கேற்ற சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பங்கேற்றனர்.

மாதா முதியோர் இல்லம் & மாணவர் விடுதி
உணவு + தங்கும் விடுதி
முதியோர் இல்லம்
மாணவர் விடுதி
98653 76451,
97878 30140

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 10 பக்கம் விலை ரூ.4.00
மக்கள் குரல்
நடுநிலை நாளேடு
மதுரை பதிப்பு
(மலர்:41 * 7.1.2020 செவ்வாய் மாலை * வெளியூர் 8.1.2020 புதன் * இதழ் 221)
Regd. No. TN/SR-21/18–20

மக்கள் சேவை 98421 89568
தங்கமே பணம்
அடகு ஏல நகையை
BVR GOLD TESTING
திருப்ப (அ) விற்க
916 கிராம் ரூ.3600/-
On Internet : BVR Gold Testing Melting
அழைக்க : 8754 200 770
ஏஜெண்டுகள் தேவை

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் மகளிர் பிரிவிற்கான பட்டமளிப்பு விழா



திருச்சி, ஜன.7–

திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சிக் கல்லூரியின் மகளிர் பிரிவிற்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக திருச்சிராப்பள்ளி தேசிய தொழில்நுட்பக் கழக இயக்குநர் மினி ஷாஜி தாமஸ் கலந்துகொண்டு பட்டமளிப்பு விழாப்பேருரை நிகழ்த்தினார். அதில் கல்லூரிக் கனவுகளில் வாழ்ந்த இந்தப் பருவம் மறக்கமுடியாத நினைவுகளைக்கொண்டது என்றும் நமது வாழ்வில் சாதிக்க ஒரு கருவிபோல இந்த பட்டம் இருப்பதாக குறிப்பிட்டார். மேலும் வாழ்வு சிறக்கவும் பல்வேறு விஷயங்களை தெரிந்து கொண்டு உலகிற்கு உணர்த்தவும் இன்றைய மாணவிகளுக்குத் தன்னம்பிக்கையும் தைரியமும் எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் திறனையும் மாணவிகள் வளர்த்து க்கொள்ள வேண்டுமென்றார்.

பெண்கள் தடம் பதிக்காத துறையே இல்லை என்றும் தாயுள்ளம், நற்குணம் ஆகியவற்றைக்கொண்டு பெண்கள் அனைத்துத்துறைகளிலும் முன்னேறி வருவதாகக் குறிப்பிட்டார். விழாவில் 1441 மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. முன்னதாக கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் கே. அப்துஸ் சமது, இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முகமது ஃபாசில், ஜனாப். முஜிபுர் ரஹ்மான், பெண்கள் விடுதி இயக்குநர் ஹாஜிரா பாத்திமா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், கல்லூரியின் தேர்வு நெறியாளர், துறைத்தலைவர்கள், பேராசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள், முன்னாள் இந்நாள் மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன் உள்ளிட்ட பேராசிரியர்கள் குழுவினர் செய்திருந்தனர்.

makkalkural tv

# TRINITY MIRROR



மாதா முதியோர் இல்லம் & மாணவர் விடுதி
படுக்கை, முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள்
சிகிச்சை பிரிவு & நர்சிங் வசதி
உணவு + தங்கும் விடுதி & நாள், மாத வாடகை
முதியோர் இல்லம்
46A, பாரதியார் மெயின்ரோடு
கே.புதூர், மதுரை
மாணவர் விடுதி
55, சீதா இல்லம்
மாதா கோயில் வடக்குதெரு
கே.புதூர், மதுரை
98653 76451, 97878 30140
காமராஜர் பல்கலைக்கழகம் அருகில்
நாகமலைபுதுக்கோட்டை, மதுரை



Madurai TUESDAY 07-01-2020
VOL. 25 No.178 PAGES 8 Rs. 4.00

◆ NATIONAL DAILY FOR THE PEOPLE ◆

Regd.No.TN/MA/175/18-20
Air Surcharge 40 Paise





**Director of National Industrial Technological Corporation Mini Shajim Thomas who was the Chief guest of the Convocation function distributed 1441 degrees to women students. The College Principal S.Ismail Mohideen welcomed the gatherings.**

ZAM ZAM REAL ESTATE
ALHAJEE S.M. BATHRUTHEEN
வாய்மையும் நம்பிக்கையும் பெற்ற வளம் மிகுந்த நிறுவனம்
கட்டிடங்கள் வாங்க - விற்க வாடகை வசூல் செய்ய புகழ் பெற்றது
பு.எண்: 76 (ப.எண்: 233) பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 044 - +91 44 2848 0697 / 4330 2522
E-mail : zamzam501@rediffmail.com www.zamzamrealestate.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
R.Dis. No. 1467/19

100
999
LUNGIES
Shop Online @ www.999lungies.com | Trade Enquiry: +91 89399 97475
அனைத்து முன்னணி கடைகளிலும் கிடைக்கும்






# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் மகளிர் பிரிவிற்கான பட்டமளிப்பு விழா

## முனைவர் ஹாஜி தாமஸ் பட்டங்களை வழங்கினார்

திருச்சி, ஜன.06-

திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சிக் கல்லூரியின் மகளிர் பிரிவிற்கான பட்ட மளிப்பு விழா (05.01.2020 - ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3 மணியளவில் கல்லூரிக் குளிர்மை அரங்கில் நடை பெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மா யில் முகைதீன் தலைமையில் நடை பெற்ற இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக, திருச்சி ராப்பள்ளி தேசிய தொழில் நுட்பக் கழக இயக்குநர் முனைவர் ஷாஜி தாமஸ் கலந்துகொண்டு பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார். அதில், கல்லூரிக் கனவுகளில் வாழ்ந்த இந்தப் பருவம், மறக்கமுடியாத நினைவுகளைக் கொண்டது என்றும், நமது வாழ்வில் சாதிக்க ஒரு கருவிபோல இந்த பட்டம் இருப்பதாக குறிப்பிட்டார். மேலும், வாழ்வு சிறக்கவும், பல்வேறு விஷயங்களை தெரிந்து கொண்டு உல கிற்கு உணர்த்தவும், இன்றைய மாணவி களுக்குத் தன்னம்பிக்கையும்-தைரியமும், எந்த சூழ்நிலையையும் எதிர் கொள்ளும் திறனையும் மாணவிகள் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றார். பெண்கள் தடம் பதிக்காத துறையே இல்லை என்றும், தாயுள்ளம், நற்குணம் ஆகிய வற்றைக்கொண்டு பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருவதாகக் குறிப்பிட்டார். விழாவில் 1441 மாணவிகளுக்குப் பட்டங் கள் வழங்கப்பட்டன. முன்ன தாக, கல்லூரி முதல்வர் அனை வரையும் வரவேற்றார். கல்லூரி யின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ் சமது, இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முனைவர் முகமது ஃபாசில், முஜிபுர் ரஹ்மான், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், கல்லூரியின் தேர்வு நெறியாளர், துறைத் தலைவர்கள், பேராசி ரியப் பெருமக்கள், பெற் றோர் கள், முன்னாள்-இந் நாள் மாணவர்கள், உள் ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச் சிக்கான ஏற்பாடுகளைத் துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன் உள்ளிட்ட பேராசிரியர்கள் குழுவினர் செய்திருந்தனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

JANUARY 5, 2020

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
on Sunday

TIRUCHIRAPALLI
CITY EDITION
32 pages • ₹10.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW · CUTTACK · PATNA

# 'We must give back to society'

**STAFF REPORTER**
TIRUCHI

In a civilised society, every individual must give back to society more than what they received, said Shakeel Ahmad, Joint Secretary, University Grants Commission, here on Saturday.

"It is our collective responsibility to raise India to the rank of developed nation," he said.

He was delivering the graduation day address at Jamal Mohamed College here on Saturday.

Mr. Ahmad encouraged the students and asked them to seek out their dreams and means to achieve it.

He later handed over degree certificates to students of government-aided courses.



Shakeel Ahmad, Joint Secretary, University Grants Commission, hands over degree certificate to a student in Tiruchi on Saturday. ▪ M. MOORTHY

S. Ismail Mohideen, Principal, said the college provided nearly ₹70 lakh in scholarships and supported students from all background.

A total of 775 students were conferred degrees at the graduation ceremony of aided courses for men.




TRINITY MIRROR

Madurai SUNDAY 05-01-2020
VOL. 25 No.176 PAGES 12 Rs. 4.00

NATIONAL DAILY FOR THE PEOPLE

Regd.No.TN/MA/175/18-20
Air Surcharge 40 Paise

# Students asked to widen knowledge to contribute to society




Tiruchi, Jan 5: It is right time for students to decide about their contributions to the society as a whole, by developing their skill and knowledge, appealed the Joint Director of the University Grants Commission Shakeel Ahmed at the convocation held for the government-aided colleges at the Jamal Mohamed College.

Shakeel Ahmed who was the chief-guest of the convocation distributed Undergraduate and Post Graduate degrees to as many as 775 graduates.

The UGC and the Department of Human Resources have been in the creation of educated youths to take the country forward and it is the duty of the students to develop their skill and widen knowledge by taking interest in studies, as it alone would take the country towards prosperity. He also said that under the digital learning system Swayam has been introduced for the benefit of students to study various short-term courses.

Principal of the College Prof S.Ismail Mohideen presided over the convocation, which held in the presence of the Vice Presidents Mohammed Ibrahim and Mohamed Sikaputtin. College Treasurer Prof Abdul Khader Nihal, Directors of the College Hostel Mohammed Fazil, Prof Jamal Mohammed Yasin Zubair and all the faculty members participated.




MAKKAL KURAL (Independent National Tamil Daily) 16 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 ★ 5.1.2020 ஞாயிறு மாலை ★ வெளியீர் 6.1.2020 திங்கள் ★ இதழ் 219)

Regd. No. TN/SR-21/18–20

மக்கள் சேவை 98421 89568
ஸ்ரீ தங்கமே பணம்
அடகு ஏல நகையை
BVR GOLD TESTING
திருப்ப (அ) விற்க
916 கிராம் ரூ.3600/-
On Internet : BVR Gold Testing Melting
மதுரை - 1
அழைக்க : 8754 200 770
ஏஜெண்டுகள் தேவை

## திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் பட்டமளிப்பு விழா

# 775 மாணவர்களுக்கு பட்டங்கள்: பல்கலைக்கழக மானியக்குழு இணைச் செயலர் வழங்கினார்



திருச்சி, ஜன.5–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் அரசு உதவிபெறும் பிரிவிற்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் பல்கலைக்கழக மானியக்குழு இணை செயலர் சக்கீல் அகமது கலந்துகொண்டார்.

சனிக்கிழமை காலை திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் அரசு உதவிபெறும் பிரிவிற்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார்.

கல்லூரியின் தலைவர் எம்.ஜே.ஜமால் முகமது பிலால், செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி எம்.ஜே.ஜமால் முகமது, உதவி செயலாளர் முனைவர் அப்துல் சமது ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்த பட்டமளிப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் பல்கலைக்கழக மானியக்குழு இணை செயலர் சக்கீல் அகமது கலந்துகொண்டு இளங்கலை, முதுகலை மற்றும் எம்.பி.எல். உள்ளிட்ட 775 மாணவா்களுக்கு பட்டங்களை வழங்கி பேசியதாவது:–

இன்றைய நவீன உலகத்தில் கல்வி மட்டுமே மனிதனின் தன்னம்பிக்கையை வளர்க்கும் காரணியாக இருப்பதோடு புதுப்புதுச் சிந்தனைகளை உருவாக்கி மெச்சத்தகுந்த உச்சத்தைத் தொட வைக்கிறது. நாகரீகமான இந்த உலகில் சமுதாயத்திற்காக நாம் எதைச்செய்யப்போகிறோம் என்பதனைத் தீர்மானிக்க வேண்டும். மாணவர்களது விடாமுயற்சி ஒரு நல்ல குடிமகனாக, ஆசிரியராக, அரசியல்வாதியாக, நிறுவனங்களுக்கு நல்லதொரு நிர்வாகியாக உருவாக்கி இந்தச் சமுதாய நலனுக்கு வித்திடுகிறது. கற்கும் திறனை மாணவா்கள் இன்னும் வளா்த்துக்கொள்ள வேண்டும். பல்கலைக்கழக மானியக்குழுவும், மனிதவள மேம்பாட்டுத்துறையும் இணைந்து இந்நாட்டை மாணவர்களைக்கொண்டு கட்டமைத்து வருகிறது. கல்வி ஆராய்ச்சியில் டிஜிட்டல் கற்றல் முறையில் ஸ்வயம் என்ற இணைய முகப்பு பல்வேறு குறுகியகால கல்விமுறையை அறிமுகப்படுத்தியிருக்கிறது . இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் துணை முதல்வர்கள் முனைவர் முஹம்மது இப்ராஹிம், முனைவர் முஹம்மது சிகாபுதீன், கல்லூரி நிதியாளர் முனைவர் அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசீன் ஜுபைர் மற்றும் அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள், முன்னாள் முதல்வர்கள் மற்றும் மாணவர்களின் பொற்றோர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

ஞாயிற்றுக்கிழமை
5 ஜனவரி 2020
திருச்சி
20 பக்கங்கள் ரூ.7

# 'கற்கும் திறனை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்'

**திருச்சி, ஜன. 4:** கற்கும் திறனை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றார் பல்கலைக்கழக மானியக்குழு இணைச் செயலர் ஷக்கீல் அகமது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற அரசு உதவிபெறும் பிரிவிற்கான பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் மேலும் பேசியது:

இன்றைய நவீன உலகத்தில் கல்வி மட்டுமே மனிதனின் தன்னம்பிக்கையை வளர்க்கும் காரணியாக இருப்பதோடு புதுப்புதுச் சிந்தனைகளை உருவாக்கி மெச்சத்தகுந்த உச்சத்தைத் தொட வைக்கிறது. நாகரீகமான இந்த உலகில் சமுதாயத்திற்காக நாம் எதைச் செய்யப்போகிறோம் என்பதனைத் தீர்மானிக்க வேண்டும். மாணவர்களது விடாமுயற்சி ஒரு நல்ல குடிமகனாக, ஆசிரியராக, அரசியல்வாதியாக, நிறுவனங்களுக்கு நல்லதொரு நிர்வாகியாக உருவாக்கி இந்தச் சமுதாய நலனுக்கு வித்திடுகிறது. கற்கும் திறனை மாணவர்கள் இன்னும் வளர்த்துக்கொள்ள வேண்டும். பல்கலைக்கழக மானியக்குழுவும், மனிதவள மேம்பாட்டுத்துறையும் இணைந்து இந்நாட்டை மாணவர்களைக்கொண்டு கட்டமைத்துவருகிறது. கல்வி ஆராய்ச்சியில்டிஜிட்டல்கற்றல்முறையில் ஸ்வயம் என்ற இணைய முகப்பு பல்வேறு குறுகியகால கல்விமுறையை அறிமுகப்படுத்தியிருக்கிறது என்றார்.




பட்டமளிப்பு விழாவில் மாணவருக்கு பட்டம் வழங்கிய பல்கலைக் கழக மானியக் குழு இணைச் செயலர் ஷக்கீல் அகமது. (இடமிருந்து வலம்) கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், தலைவர் எம்.ஜே. ஜமால் முகமது பிலால், பொருளாளர் ஜமால் முகமது, செயலர் ஏ.கே.காஜாநஜிமுதீன், உதவிச் செயலர் அப்துல் சமது.

தொடர்ந்து, 775 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு, கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரியின் தலைவர் எம்.ஜே. ஜமால் முகமது பிலால், செயலர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

MOHAMAD IDRIS BROS.
KIBS கிப்ஸ்
HANDLOOM TEXTILES
கிப்ஸ்
லுங்கிகள் ■ பனியன்கள்
■ ஜட்டிகள் ■ கைக்குட்டைகள்
தயாரித்து விநியோகிப்பவர்கள்:
முகமது இதிரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
044 - 2522 1371 / 2522 1372 / 2522 1373

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
R.Dis. No. 1467/19

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜீவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர்,
சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.



# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் கணிதத்துறை முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

திருச்சி, டிச.28-

திருச்சி ஜமால் முகமது கல்லூரி கணிதத்துறை சார்பில் முதன்முறையாக கணிதத் துறை முன்னாள் மாணவர்கள் சந்திப்பு *(Maths Ilumuni Meet)* கல்லூரி வளாகத்தில் அன்று நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கணிதத்துறையில் 1951 முதல் 2019 வரை பயின்ற தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மாணவர்கள் சுமார் 200 முன்னாள் மாணவர்கள் பங்கேற்றனார். கணிதத் துறையில் பணியாற்றிய முன்னாள் பேராசிரியர்கள் பங்கேற்று சிறப்புச் செய்தனர். நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் மற்றும் கணிதத்துறைத் தலைவர் முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையுரை யாற்றினார். துறைத்தலைவர் (பொறுப்பு) பேராசிரியர் என். அப்துல் அலி வரவேற்புரையாற்றினார். முனைவர். ஆர். ஜாகீர் உசேன் நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவுற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர்கள் கல்லூரி மற்றும் துறை அவர்களுக்கு செய்த உதவியை நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழா விற்கான ஏற்பாட்டினை கல்லூரி நிர்வாகம் மற்றும் துறை பேராசிரியர்கள் சிறப் பாக செய்திருந்தனர்.

TRINITY MIRROR

Madurai SATURDAY 28-12-2019
VOL. 25 No.168 PAGES 8 Rs. 4.00

NATIONAL DAILY FOR THE PEOPLE

Regd.No.TN/MA/175/ 18-20
Air Surcharge 40 Paise

As a part of knowledge enhancement programme, Math Intelligentsia, on behalf of the Jamal Mohamed College, Department of Mathematics Students (men-section) Intra-departmental competition was conducted with events Math Quiz, Math Act, Math Fun, Sudoku and Treasure Hunt to enhance the skill of students. More than 200 students participated in the programme, and prizes to the winners were distributed by the former Vice Principal Dr P.N.P. Mohamed Sahaputheen, who also addressed the students.

மாதா முதியோர் இல்லம் & மாணவர் விடுதி
முதியோர் இல்லம்
4A, பாரதியார் மெயின்ரோடு
கே.புதூர், மதுரை
மாணவர் விடுதி
கே.புதூர், மதுரை
98653 76451,
97878 30140

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 10 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 * 28.12.2019 சனி மாலை * வெளியீடு 29.12.2019 ஞாயிறு * இதழ் 211)

Regd. No. TN/SR-21/18–20

மக்கள் சேவை 98421 89568
ஸ்ரீ தங்கமே பணம்
அடகு ஏல நகையை
திருப்ப (அ) விற்க
BVR GOLD TESTING
916 கிராம் ரூ.3600/-
On Internet : BVR Gold Testing Melting
அழைக்க : 8754 200 770



திருச்சி ஜமால் முகமது கல்லூரி கணிதத்துறையில் டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல் கலாம் சங்கத்தின் சார்பில் கணிதமேதை ராமானுஜம் பிறந்த நாள் சிறப்பு சொற்பொழிவு மற்றும் டேலி சான்றிதழ் படிப்பு முடித்த 34 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி கணிதத்துறை அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமெரிக்காவைச் சேர்ந்த விக்னேஷ் ரவிச்சந்திரன் கலந்து கொண்டு சான்றிதழை மாணவர்களுக்கு வழங்கினார்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

FRIDAY, DECEMBER 20, 2019
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
22 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW · CUTTACK · PATNA

## TAMIL NADU ROUND-UP



**Packing a punch:** Jamal Mohamed, winner of the men's team championships.

## Jamal Mohamed, JJ CAS triumph

**PUDUKOTTAI:** Jamal Mohamed College and host JJ CAS won the men's and women's team titles in the Bharathidasan University inter-collegiate boxing recently.

**The results: Team championship, men:** 1. Jamal Mohamed (Tiruchi), 2. JJ CAS (Pudukottai), 3. H.H. The Rajah's (Pudukottai); **Women:** 1. JJ CAS, 2. GAC for Women (Pudukottai), 3. GAC (Karur).

REGD. No. TRY/056/2018-2020 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- தினத்தந்தி, வெளிநாட்டு ஏடு போன்ற தோற்றம் உடையது -

வானவில் 4 பக்க இணைப்புடன்
24 பக்கம் 500 காசு




தினத் தந்தி
DAILY THANTHI
திருச்சி (18-12-2019) புதன்கிழமை
மலர் 78 இதழ் 48
வெல்க தமிழ்
விகாரி ஸ்ரீ மார்கழி மீ 2 உ
ஹிஜிரி 1441 ரபிஉல் ஆகிர் 20

நியூரோ ஒன் மருத்துவமனை
போன் 0431-2221222
80% பக்கவாதத்தை வரும் முன்பே தவிர்க்கலாம்
கரூர் பைபாஸ் ரோடு, சத்திரம் பேருந்து நிலையம், திருச்சி - 2.
www.neuroone.in



## திருச்சி துப்பாக்கி தொழிற்சாலையில்

# மரக்கன்றுகள் நடும் விழா

திருச்சி, டிச.18–

பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வின் ஒரு பகுதியாக ஒவ்வொரு வருடமும் தூய்மை விழிப்புணர்வு பிரசாரம் மத்திய தொழிலகங்கள் மற்றும் அலுவலகங்களில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் திருச்சி துப்பாக்கி தொழிற் சாலையில் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, துப்பாக்கி தொழிற்சாலையில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. திருச்சி துப்பாக்கி தொழிற்சாலை கூடுதல் பொது மேலாளர் பி.கே.அகர்வால் மரக்கன்றை நட்டார். இதேபோல் மற்ற அதிகாரி களும், ஜெ.சி.எம். உறுப்பினர்களும் மரக்கன்றுகளை நட்டனர். சிறப்பு விருந்தினராக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் லட்சுமி கலந்து கொண்டு மரக்கன்றை நட்டார். மேலும், ஒருமுறை பயன்படும் பிளாஸ் டிக்கை உபயோகப்படுத்துவதில்லை என்னும் செயலை திருச்சி துப்பாக்கி தொழிற்சாலை மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் திறமை யாக அமல்படுத்தி உள்ளதை பாராட்டினார். மேலும், ஜமால் முகமது கல்லூரியில் இருந்து தூய்மை பணிக்காக வந்துள்ள கல்லூரி மாண வர்களை ஊக்கப்படுத்தி, வளர்ந்து வரும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வது எப்படி என்பது பற்றியும் விளக்கி கூறினார்.

Dr. HAJA K. MAJEED, M.B.B.S., F.A.G.E.
Dr. ABDUL MAJEED ARSHAD, M.D.,
(Chest Specialist)
MARIAM DIAGNOSTIC CENTRE
Authorised Medical Centre for GCC Countries and Brunei Darussalam
New No. 19A (Old No. 8), Thiruvalluvar Salai, Teynampet, Chennai - 600 018. Ph : 044 - 2433 1034 / 35 / 37
Fax : 91- 044 - 2433 1036 / Mobile : 98400 74949
E-mail : mariamdiagnosticcentre@gmail.com
Website : mariamdc.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper
RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
R.Dis. No. 1467/19

SCM SHIRTS
Seyad Home Industries Private Limited
Tirunelveli - 627 003
A product of Seyad Cotton Mills

மணி - 35 சுடர் - 90 | ஹிஜ்ரி 1441 - ரபியுல் ஆகிர் 20 | திருவள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி - 02 | சென்னை 18.12.2019 புதன் | வெளியூர் 19.12.2019 வியாழன் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 4

## குடியுரிமை சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர்கள் போராட்டம்



திருச்சி, டிச.18-

குடியுரிமை சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்த திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

குடியுரிமை சட்ட திருத்தத்திற்கு நாடு முழுவதும் எதிர்ப்பு வலுத்து வருகிறது. மாணவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். திருச்சி பாலக்கரையில் நேற்று முன் தினம் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பினர் கைது செய்யப் பட்டனர்.

இந்தநிலையில் குடியுரிமை சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து திருச்சி டிவிஎஸ். டோல்கேட் அருகே உள்ள ஜமால் முகமது கல்லூரியில் மாணவ ர்கள் நேற்று பிற்பகல் 12.45 மணி அளவில் போராட்டம் நடத்த திரண்டனர். மேலும் உள்ளிருப்பு போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்த கல்லூரி நிர்வாகத்தினர் விரைந்து வந்து மாணவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். மேலும் போராட்டம் நடத்த அனுமதி யில்லை என தெரிவித்தனர்.

இதற்கிடையில் மாணவர்கள் திரண்டது குறித்து தகவல் அறிந்த கேகேநகர் போலீசார் விரைந்து வந்து கல்லூரிக்கு வெளியே பாது காப்பு பணியில் ஈடுபட்டனர்.

கல்லூரி நிர்வாகம் அனு மதி அளிக்காததால் மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதேபோல பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியில் மாணவர்கள் போராட்டம் நடத்த திரண்டனர். ஆனால். அவர்கள் போராட்டம் நடத்தாமல் கலைந்து சென்றனர்.

MOHAMAD IDRIS BROS.
KIBS
கிப்ஸ்
HANDLOOM TEXTILES
கிப்ஸ்
■ லுங்கிகள் ■ பனியன்கள்
■ ஜட்டிகள் ■ கைக்குட்டைகள்
தயாரித்து விநியோகிப்பவர்கள்:
முகமது இதிரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
044 - 2522 1371 / 2522 1372 / 2522 1373

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
R.Dis. No. 1467/19

SCM SHIRTS
SCM
A product of Seyad Cotton Mills
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003







ஜமால் முஹம்மது கல்லூரியில் அய்யம்பேட்டை கொக்கரட்டி அல்ஹாஜ் டி.எம். ஜபருல்லாஹ் அரங்க திறப்பு விழா 12-12-2019 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்றது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் கே.எம். காதர் மொகிதீன் கட்டிடத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். கல்லூரி நிர்வாகிகள் எம்.ஜே.ஏ. ஜமால் முஹம்மது பிலால், ஏ.கே. காஜா நஜ்முதீன், எம்.ஜே.ஜமால் முஹம்மது, கே.ஏ. அப்துல் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். இ.யூ.முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் எம்.எல்.ஏ., மாநில முதன்மை துணைத் தலைவர் எம். அப்துர் ரஹ்மான் மற்றும் கல்லூரி பல்வேறு துறைகளின் பொறுப்பாளர்கள் வாழ்த்துரை வழங்கினர். விழாவிற்கான ஏற்பாடுகளை சமுதாயப் புரவலர் அல்ஹாஜ் டி.எம். ஜபருல்லாஹ் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், அய்யம்பேட்டை அஞ்சுமன் அறிவகம், இஸ்லாமிய கலாச்சார மைய நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.




தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

-TPTC Edition-




திருச்சி • சனி • டிசம்பர் 14, 2019 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | •20 பக்கம் •600 காசு •மலர் 69 •இதழ் 99

# தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு

திருச்சி, டிச. 14-

*திருச்சி துப்பாக்கி தொழிற்சாலையில் பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.*

திருச்சி மாவட்ட மாசுக்கட்டுப்பாடு வாரிய பொறியாளர் லட்சுமி கலந்து கொண்டு துப்பாக்கி தொழிற்சாலை வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் கை பயன்படுத்துவதில்லை என்ற தொழிலக ஊழியர்கள் உறுதி ஏற்றுள்ளதை பாராட்டினார். ஜமால் முகமது கல்லூரியில் இருந்து தூய்மை பணிக்காக வந்த கல்லூரி மாணவர்களுக்கு சுற்றுச் சூழல் தொடர்பாக ஏற்பட்டு வரும் சவாலை சமாளிப்பது குறித்து பொறியாளர் லட்சுமி விளக்கினார்.

துப்பாக்கி தொழிற்சாலையின் கூடுதல் பொது மேலாளர் அகர்வால் மற்றும் அதிகாரிகள், பணிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
சனிக்கிழமை
14 டிசம்பர் 2019
திருச்சி
14 பக்கங்கள் ரூ.7

# சர்வதேச கணினி அறிவியல் கருத்தரங்கு




கருத்தரங்கில், கல்லூரியின் தகவல் தொழில்நுட்பத் துறைத் தலைவர் அப்துல் காதர் நிஹாலுக்கு சான்றிதழ் வழங்குகிறார் கல்லூரிச் செயலர் காஜா நஜிமுதீன். உடன் (இடமிருந்து) கருத்தரங்க இணை ஒருங்கிணைப்பாளர் அப்துல் ரசாக், கணினி அறிவியல் துறைத் தலைவர் ரவி, துணை முதல்வர் முகமது இப்ராகிம், முனைவர் ஜார்ஜ் அமலரத்தினம்.

**திருச்சி, டிச.13:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சர்வதேச அளவிலான கணினி அறிவியல் கருத்தரங்கு நடைபெற்றது.

கல்லூரியின் கணினி அறிவியல் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை சார்பில் நடைபெற்ற இக் கருத்தரங்கு வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்றது. இக் கருத்தரங்கை மலேசியா மல்டிமீடியா பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப இணை பேராசிரியர் முகமது சொகைல் சயீத், தொடக்கி வைத்து ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய குறுந்தகட்டை வெளியிட்டார்.

முதல் பிரதியை கல்லூரி செயலர் காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முகமது ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மேலும், மலேசிய பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

திண்டுக்கல் பிஎஸ்என்ஏ பொறியியல் கல்லூரி பேராசிரியர் பி. ஜெகநாதன், அழகப்பா பல்கலைக் கழக பேராசிரியர் ஏ. பத்மபிரியா, தென்காசி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி பேராசிரியர் காதர் முகைதீன், கேரள பல்கலைக் கழக பேராசிரியர் முகமது நூருல் முபாகர், விஐடி பல்கலைக் கழக பேராசிரியர் பட்டாபிராமன் ஆகியோர் கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் நவீன வளர்ச்சிகள் குறித்து பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

இக் கருத்தரங்கில், 150-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து பேசினர். இதன் நிறைவு விழாவில், கல்லூரிச் செயலர் காஜா நஜிமுதீன், கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம் ஆகியோர் ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி பாராட்டிப் பேசினர்.

இதற்கான ஏற்பாடுகளை, கல்லூரியின் கணினி அறிவியல் துறைத் தலைவர் பு. ரவி, இணைப் பேராசிரியர்கள் முகமது ஷானவாஸ், அப்துல் காதிர் நிஹால், அப்துல் ரசாக் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வெள்ளிக்கிழமை
29 நவம்பர் 2019
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# பாரதி, கலாம் கண்ட கனவை இளைஞர்கள் நனவாக்க வேண்டும்

## திரைப்பட இயக்குநர் விசு

**திருச்சி, நவ.28:** மகாகவி பாரதியார், மறைந்த குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் ஆகியோரது கனவை இன்றைய இளைஞர்கள் நனவாக்க வேண்டும்என்றார் திரைப்பட இயக்குநர் விசு.

உரத்த சிந்தனை அமைப்பு, உமறு புலவர் தமிழ்ப் பேரவை ஆகியவை இணைந்து ஜமால் முகமது கல்லூரியில் வியாழக்கிழமை நடத்திய பாரதி உலா என்னும் பாரதி விழாவில் மாணவர்களுக்குப் பரிசளித்து அவர் மேலும் பேசியது:

மேடையேறிப் பேசுகின்ற இன்றைய இளம் தலைமுறையினரது உரை வீச்சுகளே என்னைத் தொடர்ந்து இயங்க வைக்கின்றன. இளைஞர்களிடையே புதைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொணர வேண்டும் எனில் அதற்கான மேடைகளை அமைத்துத்தர வேண்டும்.

அதற்கான பணியை உரத்த சிந்தனை அமைப்பு திறம்படச் செயல்படுத்தி வருவது பாராட்டுக்குரியது. பாரதி குறித்த புகழைப் பரப்புவதோடு, இளைஞர்களின் திறமையை வெளி உலகுக்கு அறியச் செய்வதை முதல் பணியாகக் கொண்டு செயல்படும் இந்த அமைப்பை அனைத்து தரப்பினரும் ஆதரிக்க வேண்டும்.

மகாகவி பாரதியார் இளைஞர்களை ஒளிபடைத்த கண்ணினாய் வா, வா என அழைத்தார். இதேபோல, கனவு காணுங்கள் என்று கலாமும் இளைஞர்களை அழைத்தார்.

இருவருமே நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில்தான் என்பதை உணர்ந்தவர்கள். திருச்சி இளைஞர்கள் அதற்கு உதாரணமாக விளங்கவேண்டும்என்றார் அவர்.

விழாவில் கல்லூரிமாணவ,மாணவிகளுக்கான பாரதி குறித்த பாட்டரங்கம், பேச்சரங்கம் நடைபெற்றது. பாரதி பாடல்களை ச. மரியஜோசப், ச. தருனேஷ், கா. தமீம் நிஷா, மு. தஸ்னீம் ஆகியோர் பாடினர். பாரதி சிந்தனை என்னும் தலைப்பில் மு. மாரிமுத்து, மு. ரியாலுதீன், ம. முகமது அஸ்கர், ர. ராஜீவ், ப. ஜெயந்தி, மீ. ஷிஃபானா ஆகியோர் பேசினர்.

பாரதி உலா குறித்து உரத்த சிந்தனை அமைப்பின் பொதுச் செயலர் உதயம்ராம் விளக்கினார். கல்லூரிச் செயலர் ஏ.கே. காஜா நஜீமுதீன், திரைப்பட இயக்குநர் ராசி அழகப்பன், ஸ்ருதிலய வித்யாலயா இசை, நடனப்பள்ளி முதல்வர் பாரதி பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்தினர்.

கல்லூரியின் தமிழ்த் துறைத்தலைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் வரவேற்றார்.

உமறுபுலவர் தமிழ்ப் பேரவை துணைத் தலைவர் எஸ். நாகூர் கனி நன்றி கூறினார். உரத்த சிந்தனை அமைப்பின் திருச்சி கிளைச் செயலர் ஆர். அப்துல் சலாம் நிகழ்ச்சியை தொகுத்தார். இதேபோல, தூய வளனார் கல்லூரியிலும் பாரதி விழா நடைபெற்றது.



ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பேசுகிறார் திரைப்பட இயக்குநர் விசு. உடன் (வலமிருந்து) இசை, நடனப் பள்ளி முதல்வர் பாரதி பாலசுப்பிரமணியன், திரைப்பட இயக்குநர் ராசி அழகப்பன், கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், தமிழ்த் துறைத் தலைவர் சையது ஜாகீர் ஹசன், உரத்த சிந்தனை பொதுச் செயலர் உதயம் ராம், திருச்சி கிளைச் செயலர் ஆர். அப்துல் சலாம்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/thehindu

FRIDAY, NOVEMBER 1, 2019

# THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
24 pages • ₹6.00



India has registered an improved sex ratio, says health survey
page 7



CPI leader and trade unionist Gurudas Dasgupta passes away
page 10



U.S. House approves rules for Trump's impeachment
Page 12

Rohit Sharma looking forward to playing in India's first D/N Test
page 14



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW · CUTTACK · PATNA

## TAMIL NADU ROUND-UP



**Proud moment:** The victorious Jamal Mohamed College team. ▪SPECIAL ARRANGEMENT

### Jamal Mohamed and Nehru Memorial triumph

TIRUVARUR: Jamal Mohamed College and Nehru Memorial College won the men's and women's team championships respectively in the Bharathidasan University inter-collegiate powerlifting competition at Swami Dayananda CAS recently.

**The results:**

**Team championship:**

**Men:** 1. Jamal Mohamed College (Tiruchi), 2. Nehru Memorial College (Puthanampatti), 3. AVC (Mayiladuthurai).

**Women:** 1. Nehru Memorial (Puthanampatti), 2. Poompuhar (Nagapattinam), 3. Kunthavai Naacchiyaar GAC for Women (Thanjavur).

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வெள்ளிக்கிழமை
29 நவம்பர் 2019
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# 'பல்துறை கருத்துகளை தமிழில் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்'



கருத்தரங்கில் பேசுகிறார் எழுத்தாளர் பாரதி கிருஷ்ணகுமார். உடன், (இடமிருந்து) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ் கல்வித்துறை தலைவர் குறிஞ்சிவேந்தன், கூடுதல் துணை முதல்வர் எம். முகம்மது சிஹாபுதீன், உதவி செயலர் கே.அப்துஸ் சமது, பேராசிரியர் க.இம்தாதுல்லாஹ், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் க.சிராஜுதீன்.

**திருச்சி, நவ.28:** பல்துறை கருத்துகளை தமிழில் கொண்டு வர முயற்சிக்க வேண்டும் என்றார் எழுத்தாளரும், ஆவணப்பட இயக்குநருமான பாரதி கிருஷ்ணகுமார்.

ஜமால்முகமது கல்லூரி தமிழாய்வுத் துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அவர் மேலும் பேசியது:

தமிழகத்தில் தமிழ் வளர்ச்சி என்பது பெரும்பாலும் அறிக்கைகள் அளவில் மட்டுமே இருக்கிறது. உள்ளாட்சி போன்ற முக்கியத்துறைகளில் தமிழ் எழுத படிக்க கூட தெரியாதவர்கள் இருக்கின்றனர். ஆனால், தமிழக அரசு தமிழ் மொழி வழியாக ஆவணங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என ஆங்கிலத்தில் சுற்றறிக்கை அனுப்புகிறது. பல்துறைகளிலும் தமிழ் மொழியை கொண்டு செல்வதற்கான முயற்சிகளை ஆராய்ச்சி மாணவர்கள் கொண்டு செல்ல வேண்டும். பிற துறைகளில் தமிழ் மொழியை புகுத்துவதற்கான தடைகளை பலர் ஏற்படுத்துவதால், பிற மொழி மக்களிடம் தமிழின் பெருமையை கொண்டு செல்ல முடியவில்லை.

எனவே அனைத்து கலை, பண்பாடு, கலாசாரம் சார்ந்த அனைத்து துறைகளிலும் தமிழ் மொழிக்கான பெருமையை உயர்த்த வேண்டும். புதிய பொருள்களுக்கு புதிய சொற்களை கண்டறிந்து அவற்றை அறியாத மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். பல்துறை கருத்துகளை தமிழில் கொண்டு வர முயற்சிக்க வேண்டும். நவீன இலக்கியங்களை கற்பதன் மூலம் தமிழின் சொல்வளத்திற்கு வலிமையான ஈடுபாட்டை உருவாக்கும் என்றார் அவர். தொடர்ந்து பிற்பகல் நடைபெற்ற கருத்தரங்க அமர்வில் எழுத்தாளர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன், தூயவளனார் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பி.செல்வக்குமாரன் ஆகியோர் நிறைவு விழாப் பேருரை நிகழ்த்தினர்.

முன்னதாக, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் துணைவேந்தர் கோ. பாலகிருஷ்ணன், கல்லூரி அயல் நாட்டு தமிழ்க் கல்வித்துறை துறைத் தலைவர் ரா.குறிஞ்சிவேந்தன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். தலைவர் எம்.ஜே.ஜமால் முகம்மது பிலால், செயலர். ஏ.கே.காஜா நஜீமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, தமிழாய்வுத்துறை இணைப்பேராசிரியர் க.இம்தாதுல்லாஹ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

makkalkural tv

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 * 12.12.2019 வியாழன் மாலை * வெளியூர் 13.12.2019 வெள்ளி * இதழ் 195)

Regd. No. TN/SR-21/18–20

மக்கள் சேவை 98421 89568
ஸ்ரீ தங்கமே பணம்
அடகு ஏல நகையை
BVR GOLD TESTING
திருப்ப (அ) விற்க
916 கிராம் ரூ.3600/-
On Internet : BVR Gold Testing Melting
அழைக்க : 8754 200 770
ஏஜெண்டுகள் தேவை

# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சர்வதேச கணினி அறிவியல் கருத்தரங்கு



திருச்சி, டிச.12–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை சார்பில் பல்கலைக் கழக தன்னாட்சி நிதி நல்கை உதவியுடன் சர்வதேச அளவிலான இரண்டு நாள் கணினி அறிவியல் கருத்தரங்கு டிசம்பர் 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கருத்தரங்கின் தொடக்க விழா காஜாமியான் ராவுத்தர் குளிர்மை அரங்கில் டிசம்பர் 11ம் தேதி காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது.

கருத்தரங்கு தொடக்க விழாவில் ICAC 2019 கருத்தரங்கத்திற்கு வந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இன்டர்நேஷனல் ஜேர்னல் ஆஃப் ரீசென்ட் டெக்னாலஜியில் மென்மையான நகலாக வெளியிடப்படுகிறது மற்றும் சிறப்பு மிக்க மலேசியாவில் உள்ள பல்லூடக பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படும்.

மலேசியா பல்லூடக பல்கலைக் கழக தகவல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப இணை பேராசிரியர் முனைவர் முஹம்மது சொகைல் சயீத் இந்த கருத்தரங்கை தொடங்கி வைத்து சிறப்புரையாற்ற உள்ளார். கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் முகைதீன் தலைமை தாங்க உள்ளார்.

இந்த கருத்தரங்கில் துறை வல்லுனர்கள் தொழில்நுட்ப கருத்துக்களையும் தங்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள உள்ளனர். மலேசியா பல்லூடக பல்கலைக் கழக தகவல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப இணை பேராசிரியர் முனைவர் முஹம்மது சொகைல் சயீத்இதிண்டுக்கல் PSNA பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி பேராசிரியர் முனைவர் ஜெகனாதன் ,காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக கணினி அறிவியல் இணைப பேராசிரியர் முனைவர் பத்மபிரியா, தென்காசி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் ஆராய்ச்சி தலைவர் முனைவர் கோதர் மொய்தீன் ,கேரளா மாநிலம் திருவணந்தபுரம் கேரளா பல்கலைக்கழகம் கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் முகமத் நூருல் முபாரக், சென்னை VIT கணினி அறிவியல் மற்றும் பொறியியல் பள்ளி பேராசிரியர் முனைவர் பட்டாபிராமன் ஆகியோர் நான்காவது தொழில்துறை புரட்சி: ஒரு உலகளாவிய புரட்சி அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் சமுகம் தரவு சுரங்க ஆராய்ச்சிக்கான ஒரு பரிணாம அணுகுமுறை, இயந்திர கற்றலில் ஆராய்ச்சிப் போக்குகள் , கிளவுட் அடிப்படையிலான பாடப் பிரிவில் வளர்ந்து வரும் ஆராய்ச்சி தலைப்புகள் , சி.என்.என் மற்றும் பரிமர்ற்ற கற்றல், இயந்திர கற்றல் ஆழமான கற்றல் ஆகியவற்றை பயன்படுத்தி இயற்கை தரவுகளின் பரிணாமத்தின் குணப்படுத்துதல் ஆகிய தலைப்புகளில் உரையாற்ற உள்ளனர்.

சர்வதேச அளவில் நடைபெற உள்ள கணினி அறிவியல் துறை கருத்தரங்கில் சுமார் 150க்கும் மேற்பட்ட கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் வெளிநாடு மற்றும் உள்நாட்டு கல்லூரிகள் மற்றும் பல்வேறு பல்கலைக் கழகங்களில் உள்ள பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பிக்க உள்ளனர்.

இந்த கருத்தரங்கின் நிறைவு விழா மாலை 4.15 மணியளவில் காஜாமியன் ராவுத்தர் குளிர்மை அரங்கில் நடைபெற உள்ளது. கல்லூரித் தாளாளர் மற்றும் செயலர் முனைவர் காஜா நஜ்முதீன் சாகிப் கருத்தரங்கு நிறைவு உரையாற்றி கருத்தரங்கில் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்க உள்ளார்.

கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் ரவி, கருத்தரங்கின் அமைப்பு செயலர் முனைவர் முகமது சானவாஸ், மற்றும் துறைப் பேராசிரியர்கள் கருத்தரங்கு பணிகளை செய்கின்றனர்.



TRICHY

# 1086 Surveillance Cameras In Trichy City.

By Trichy Kumaran — Last updated Jan 20, 2019

Share 149 0

# உலக கண்பார்வை தின விழிப்புணர்வு பேரணி





திருச்சி ஜோசப் கண் மருத்துவமனை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற உலக கண் பார்வை தின விழிப்புணர்வு பேரணியைக் கொடியசைத்துத் தொடக்கி வைக்கிறார் பாரதிதாசன் பல்கலைக் கழக துணைவேந்தர் ப. மணிசங்கர். உடன் மருத்துவமனை இயக்குநர் நெல்சன் ஜேசுதாசன், பேராயர் டேனியல் ஜெயக்குமார் உள்ளிட்டோர். (இடது) பேரணியில் பங்கேற்ற மாணவிகள்.

**திருச்சி, அக். 11:** திருச்சியில், வியாழக்கிழமை நடைபெற்ற உலக கண்பார்வை தின விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

திருச்சி ஜோசப் கண் மருத்துவமனை, பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் நடைபெற்ற இந்த பேரணியை, பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் ப. மணிசங்கர் தொடங்கி வைத்தார். பேரணி, மருத்துவமனை வளாகத்தில் தொடங்கியது. இதில், பல்வேறு பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பங்கேற்று, கண்பார்வை விழிப்புணர்வு தொடர்பான பதாகைகளை ஏந்திச்சென்றனர்.

முன்னதாக தொடக்க நிகழ்வில், உலகம் முழுவதும் சுமார் 285 மில்லியன் நபர்கள் பார்வைக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் சுமார் 2.7 கோடிபேர் பார்வை இழந்துள்ளனர். இது உலகளவில் அதிகமாகும். உடல் மற்றும் வாழ்க்கை செயல்பாடுகளில் சுமார் 75 சதவிகிதம் பார்வை தொடர்புடையதாகவே உள்ளது எனவே, பார்வை குறைபாடு வராமல் கண்களை பாதுகாப்பது முக்கியம். இறந்த ஒருவரின் கண்களை அடுத்த 6 மணி நேரத்துக்குள் தானம் செய்தால், அதன் மூலம் இருவருக்கு பார்வை கிடைக்கலாம். எனவே கண்தானம் செய்ய முன்வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

ஜோசப் கண் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மருத்துவர் நெல்சன் வரவேற்றார். டிஇஎல்சி பேராயார் டேனியல் முன்னிலை வகித்தார். மருத்துவர்கள் அகிலன், அருண்குமார், பிரதீபா உள்ளிட்டோர் பார்வை குறைபாடு குறித்து பேசினர். மருத்துவமனை நிர்வாக அதிகாரி சுபா பிரபு நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

THE HINDU
MONDAY, SEPTEMBER 23, 2019
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
TIRUCHIRAPALLI
CITY EDITION
20 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW · CUTTACK · PATNA

TAMIL NADU ROUND-UP

## Jamal Mohamed triumphs again

TIRUCHI: Jamal Mohamed College won all its matches in the four-team league to triumph for the 12th successive year in the Bharathidasan University inter-zonal inter-collegiate volleyball tournament for men on Saturday. Bishop Heber College (two wins) and Annai CAS (one win) finished second and third.

**The results:** Jamal Mohamed bt Bishop Heber 25-23, 22-25, 25-23, 25-22; bt Annai 25-15, 25-14, 25-15; bt JJ CAS 25-10, 25-9, 25-10; Bishop Heber bt Annai 25-19, 25-17, 25-19; bt JJ 25-17, 25-11, 25-13. Annai bt JJ 25-12, 25-12, 25-9.



**Twelve in a row:** Jamal Mohamed won all its matches in the league to win the Bharathidasan University inter-zonal inter-collegiate volleyball tournament. ▪SPECIAL ARRANGEMENT

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வெள்ளிக்கிழமை
11 அக்டோபர் 2019
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# 'சமூகத்துக்கான திரைப்படங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்'




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பேசுகிறார் திரைப்பட உதவி இயக்குநர் ஜீவா. உடன், (இடமிருந்து) விலங்கியல்துறைத் தலைவர் ஜோசப் அந்தோணி ஜெரால்ட், கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், கல்லூரிச் செயலர் காஜா நஜிமுதீன், பேராசிரியர்கள் சம்சுதீன், சலாவுதீன்.

**திருச்சி, அக்.10:** சமூகத்துக்கான திரைப்படங்களுக்கு பார்வையாளர்கள் பெருமளவில் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என தமிழ்த் திரைப்பட உதவி இயக்குநர் ஜீவா வலியுறுத்தினார்.

மெகந்தி சர்க்கஸ் எனும் திரைப்படத்தின் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த இவர், திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற கலை விழாவில் பங்கேற்றுப் பேசியது:

சமூகம் என்ற கட்டமைப்புக்குள் மனிதன், விலங்குகள் மற்றும் அனைத்துவகை உயிரினங்களும் அடங்கும். இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. ஜல்லிக்கட்டு போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தது சமூக ஊடகங்கள் மட்டுமே. தவறாகப் பயன்படுத்தினால் அழிவுப்பாதைக்கும் அழைத்துச் செல்லும். சமூகத்துக்கான திரைப்படங்களை எடுக்கும் போது வியாபார நுணுக்கங்களையும் சேர்க்க வேண்டிய கட்டாயம் எழுகிறது. ஏனெனில், இன்றைய காலக்கட்டத்தில் சமூகத்துக்கான திரைப்படங்களுக்கு ஆதரவு குறைவாகவே உள்ளது. நட்சத்திர அந்தஸ்துமிக்க கதாநாயகனின் படத்துக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் சமூகத்துக்கான திரைப்படங்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இதன் காரணமாகவே வியாபாரத்துக்கான யுத்திகளைக் கொண்ட திரைப்படங்கள் அதிகளவில் வருகின்றன. மேற்கு தொடர்ச்சி மலை, ஜிப்ஸி என ஒன்றிரண்டு படங்கள் எடுத்தால் திரைப்படம் வெளியாகி ஆதரவு இல்லாமல் போகும். இல்லையெனில் திரைக்கு கொண்டு வருவதற்கே பெரிதும் சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. யதார்த்தமான படங்களைத் தர வேண்டும் என்ற ஆவலில்தான் இளைஞர்கள் பலரும் புதிது, புதிதாக திரைத்துறைக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

பாரதியார், பாரதிதாசன் கவிதைகளில் காதல் கவிதைகளும், இயற்கை அழகை ரசிக்கும் கவிதைகளும் உள்ளன. ஆனால், புரட்சி கவிதைகள்தான் அவர்களது பெயரை இன்றளவும் உச்சரிக்க வைத்துள்ளது. அத்தகைய புரட்சி மக்களிடம் எழ வேண்டும். குறிப்பாக சமூகத்துக்கான திரைப்படங்களுக்கு பெருமளவு ஆதரவு அளிக்க வேண்டும் என்றார் அவர்.

விழாவில், கல்லூரிச் செயலர் காஜா நஜிமுதீன், கல்லூரித் தலைவர் ஜமால் முகமது பிலால், கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், விலங்கியல் துறைத் தலைவர் (பொறுப்பு) ஜோசப் ஆண்டனி ஜெரால்ட், பேராசிரியர் சம்சுதீன், விழா ஒருங்கிணைப்பாளர் சலாவுதீன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்.

விழாவில் மாநிலம் முழுவதும் இருந்து 35 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர், மாணவிகள் கலந்து கொண்டனர். புகைப்படப் போட்டி, ரங்கோலி, வினாடி-வினா, கார்ட்டூன், ஓவியம், மிமிக்ரி, பாடல் என பல்வேறு கலைப்போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் பங்கேற்றோருக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கான

# பேட்மின்டன் போட்டியில் ஜமால்முகமது கல்லூரி சாதனை

திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, பெரம்பலூர், அரியலூர், புதுகை, கரூர் ஆகிய 8 மாவட்ட கல்லூரிகளுக்கு இடையிலான மாணவர்களுக்கான பேட்மின்டன் மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டிகள் நாக்-அவுட் முறையில் 2 நாட்கள் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் நடைபெற்றது.



21 கல்லூரி அணிகள் பங்கு பெற்ற பேட்மின்டன் இறுதி போட்டியில் திருச்சி, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரியை 2-0 என்ற செட் கணக்கில் வென்று முதலிடம் பிடித்து திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான மாணவர்களுக்கான பேட்மின்டன் போட்டியில் சாம்பியன் பட்டத்தை தொடர்ந்து 7வது வருடமாக பெற்றது.

மூன்றாம் இடத்திற்கு நடைபெற்ற போட்டியில் புதுகை, ஜெ.ஜெ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகை, இ.ஜி.எஸ். பிள்ளை கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 2-0 என்ற செட் கணக்கில் வென்று மூன்றாம் இடம் பிடித்தது.

வெற்றி பெற்று முதலிடம் பிடித்த ஜமால் முகமது கல்லூரி மாணவர்களை கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, இணைச் செயலாளர் அப்துஸ் சமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன் இயக்குனர் சுய நிதிப்பிரிவு அப்துல் காதர் நிஹால், உடற்கல்வி இயக்குனர் ஷா இன் ஷா ஆகியோர் பாராட்டினர்.

REGD. No. TRY/056/2018-2020 ★★★★
http://www.dailythanthi.com

– இந்திய நாளிதழ்களில் முதல் இடம் வகிக்கும் தமிழ் நாளிதழ் – தினத்தந்தி –

# தினத்தந்தி
DAILY THANTHI

வெல்க தமிழ்

திருச்சி (16–9–2019) திங்கட்கிழமை | மலர் 77 இதழ் 318 | விகாரி ஸ்ரீ ஆவணி மீ 30 உ. ஹிஜிரி 1441 முகரம் 16

மாணவர் ஸ்பெஷல் மற்றும் கல்வி செய்திகள்
22 பக்கம் 500 காசு

100% 916 ஹால்மார்க் தங்க நகை ஷோரூம்
போன்: 04322-221669 | 223669

பட்டின் பாரம்பரியம்...
தைலா Thaila



கல்லூரிகளுக்கு இடையேயான மாநில அளவிலான கைப்பந்து போட்டியில் இரு அணிகள் விளையாடியதை படத்தில் காணலாம்.

### மாநில அளவிலான

# கல்லூரிகளுக்கு இடையேயான கைப்பந்து போட்டி திருச்சியில் தொடக்கம்

திருச்சி, செப்.16–

மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கைப்பந்து போட்டி திருச்சியில் தொடங்கியது.

### கைப்பந்து போட்டி

மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கைப்பந்து போட்டி திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் நேற்று தொடங்கியது. 3 நாட்கள் நடைபெறும் இந்த போட்டியில் திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடி, கோவை, சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் உள்ள 12 கல்லூரிகளின் அணிகள் பங்கேற்றன. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் திருச்சி மண்டல அலுவலக முதன்மை மேலாளர் சத்தியநாராயணன் நேற்று காலை போட்டியை தொடங்கி வைத்தார்.

முதல் போட்டியில் செயின்ட் ஜோசப் கல்லூரி அணி 28–26, 33–35, 25–22 என்ற புள்ளிக்கணக்கில் ஜமால் முகமது கல்லூரி பி அணியை வென்றது. 2–வது ஆட்டத்தில் ஜமால் முகமது கல்லூரி ஏ அணி திண்டுக்கல் காந்திகிராமிய நிகர்நிலை பல்கலைக்கழக அணியை 25–15, 25–16 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது.

### லயோலா கல்லூரி அணி வெற்றி

3–வது போட்டியில் திண்டுக்கல் ஜி.டி.என். கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணி 22–25, 25–23, 25–15 என்ற புள்ளிக்கணக்கில் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி அணியை வென்றது. 4–வது போட்டியில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணி 25–18, 25–18 என்ற புள்ளிக்கணக்கில் கோவை டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரியை வென்றது. சென்னை லயோலா கல்லூரி அணி 25–21, 23–25, 25–13 என்ற புள்ளிக்கணக்கில் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி அணியை வென்றது. இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா நாளை(செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு நடக்கிறது. கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்று முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகளுக்கு சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

Prithvi
INNER WEARS
Bra | Slips | Panties
Uniform Shorts
Trichy: 98420 84951
Pudhukottai: 94436 76559
Ariyalur: 97914 84224

-TPTC Edition-

# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

NLJ
நியூ லைக்ஷ்மி ஜுவல்லரி
திருச்சி - 2. Tel: 0431 - 2701931

திருச்சி • திங்கள் • செப்டம்பர் 16, 2019 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 18 பக்கம் • 600 காசு • மலர் 69 • இதழ் 11



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நேற்று தொடங்கிய மாநில அளவிலான ஐஓபி சுழல் கோப்பை வாலிபால் போட்டியில் சென்னை லயோலா கல்லூரி வீரர் அடிக்கும் ஷாட்டை தடுக்க முயற்சிக்கும் தூத்துக்குடி வஉசி கல்லூரி வீரர்கள்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

திங்கள்கிழமை
16 செப்டம்பர் 2019
திருச்சி
14 பக்கங்கள் ரூ.7

# ஐஓபி சுழற்கோப்பை வாலிபால் போட்டி தொடக்கம்

**திருச்சி, செப். 15:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஐஓபி சுழற் கோப்பை கல்லூரிகளுக்கு இடையேயான வாலிபால் போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

திருச்சி, ஜமால் முகமது கல்லூரி வைர விழாவை முன்னிட்டு 10 ஆவது ஆண்டு, கல்லூரிகளுக்கு இடையிலான ஐ.ஓபி. சுழற்கோப்பைக்கான வாலிபால் போட்டி, கல்லூரி வளாகத்தில் செப்.15 முதல் 17 ஆம் தேதி வரை 3 நாள்கள் நடைபெறுகின்றது. லீக் மற்றும் நாக் அவுட் முறையில் நடைபெறும் இப்போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கியது.

கல்லூரி முன்னாள் மாணவர் மற்றும் இந்தியன் ஓவர்சிஸ் வங்கி ( ஐ.ஓ.பி.) திருச்சி மண்டல முதன்மை மேலாளர் ஜி. சத்திய நாராயணன் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். திருச்சி, ஜமால் முகமது கல்லூரி ஐ. ஓ. பி. கிளை முதன்மை மேலாளர் எஸ்.வி. பிரசன்னா , கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஏ. கே. காஜா நஜீமுதீன், பொருளாளர், எம்.ஜெ. ஜமால் முகமது, துணை செயலாளர் கே. அப்துஸ் சமது, முதல்வர், எஸ். இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் ஏ. முகமது இப்ராஹிம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில், ஞாயிற்றுக்கிழமை ஐஓபி சுழற்கோப்பைக்கான வாலிபால் போட்டியை தொடங்கி வைக்கிறார், ஐ.ஓ.பி. திருச்சி மண்டல முதன்மை மேலாளர் ஜி. சத்திய நாராயணன். உடன் ஜமால் முகமது கல்லூரி ஐ. ஓ. பி. கிளை முதன்மை மேலாளர் எஸ்.வி. பிரசன்னா, கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் உள்ளிட்டோர்.

போட்டியில் வெற்றி பெற்று முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு சுழற் கோப்பை மற்றும் சான்றிதழ்களும், மூன்று மற்றும் நான்காம் இடம் பிடிக்கும் அணிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. பரிசுத்தொகையாக முறையே ரூ.10,000, ரூ.7,000, ரூ.5,000, ரூ3,000 என வழங்கப்படவுள்ளன.

முதல் நாள் லீக் போட்டிகளில் திருச்சி தூய வளனார் கல்லூரி ஜமால் முகமது கல்லூரி 'பி' அணியை 28 - 26, 33 - 35, 22-25 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது. ஜமால் முகமது கல்லூரி 'ஏ' அணி, திண்டுக்கல் காந்தி கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகத்தை 25 - 15, 25 - 16 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது. திண்டுக்கல், ஜி.டி.என். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, துத்தூக்குடி வ.உ.சி. கல்லூரியை 22 - 25, 25 - 23, 25-15 என்றபுள்ளிக்கணக்கில் வென்றது. திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி, கோவை, டாக்டர் என். ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 25-18, 25-18 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது. சென்னை, லயோலா கல்லூரி, தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியை 25-21, 23-25, 25-13 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இறுதிப்போட்டிகள் செப்டம்பர் 17 ஆம் தேதி காலையிலும், மாலையும் நடைபெறுகின்றன.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2018-2020 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 14-9-2019 (சனிக்கிழமை) 8 பக்கம் 500காசு ★★★ | மலர் 42 இதழ் 273

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS) SEP 2019 CENTRAL LIBRARY, TRICHY

## ஆக்கி போட்டியில்

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி சாம்பியன்

திருச்சி,செப்.14–

திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற திருச்சி, தஞ்சை, நாகை, புதுகை, கரூர், திருவாரூர், பெரம்பலூர், அரியலூர் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளுக்கு இடையிலான மாணவர்களுக்கான ஆக்கி போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரி, அண்ணா விளையாட்டரங்கத்தில் உள்ள செயற்கை புல்வெளி ஆக்கி மைதானத்தில் நடத்தப் பட்டது. 8 கல்லூரி அணிகள் பங்கேற்ற ஆக்கி நாக் அவுட் போட்டியின் இறுதி போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை 41 என்ற கோல் கணக்கில் வென்று திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான ஆக்கி போட்டியின் சாம்பியன் பட்டத்தை வென்றது. திருச்சி, ஜமால் முகமது கல்லூரி வீரர் மதன் நான்கு கோல்கள் அடித்து ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

மூன்றாவது இடத்திற்கு நடைபெற்ற போட்டியில் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, புதுக்கை மாமன்னர் கல்லூரியை வென்று மூன்றாவது இடம் பிடித்தது.

பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக விளையாட்டு செயலர் பழனிச்சாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பொறையாறு, டி.பி.எம்.எல். கல்லூரி உடற்கல்வி இயக்குனர் ஸ்ரீதர் தங்கராஜ், ஜமால் முகமது கல்லூரி உடற்கல்வி இயக்குனர் பி.எஸ். ஷாகின்ஷா, பிஷப் ஹீபர் கல்லூரி உடற்கல்வி இயக்குனர் (பொறுப்பு) பால்ராஜ் முன்னிலையில் கோப்பைகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.



வெற்றி பெற்ற ஜமால் முகமது கல்லூரி மாணவர்களை கல்லூரி செயலாளர் காஜாநஜிமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், கல்லூரி சுயநிதிப்பிரிவு இயக்குனர் அப்துல்காதர் ஆகியோர் பாராட்டிய காட்சி. அருகில் கல்லூரி துணை செயலாளர் அப்துல் சமது, உடற்கல்வி இயக்குனர் ஷாகின்ஷா உள்ளனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

THURSDAY, SEPTEMBER 12, 2019
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
20 pages • ₹6.00



SC to hear plea on Sept. 16 to live-stream Ayodhya hearings
page 10



Vaiko files petition for production of Farooq Abdullah in court
page 11



Johnson's suspension of parliament unlawful, Scottish court rules
page 12; editorial: page 8

Paine's Australia looks to finish on a high as final Ashes Test begins today
page 15



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW · CUTTACK · PATNA

## TAMIL NADU ROUND-UP

### Madhan stars for Jamal Mohamed

**TIRUCHI:** Madhan netted four goals as Jamal Mohamed College defeated Bishop Heber College 4-1 and retained the title in the Bharathidasan University inter-collegiate hockey tournament for men.

**The results: Final:** Jamal Mohamed 4 (Madhan 4) bt Bishop Heber 1 (Julius Maharaja). **Third place:** St. Joseph's 4 (Paul 2, Ezhil, Nelson) bt H.H. The Rajah's 0.

### All-round show by Nallamani

**MADURAI:** N.N.N.R. Nallamani's all-round effort (67 & three for 41) helped Rising Sun register a 20-run win over Freak in the MDCA first-division league.

**The scores:**

Sparkcolts 154 in 43.2 overs (Karthick Kumar 38, Marimuthu 32, Balakrishnan 26, Kannan three for 42) lost to Sachin 155 for four in 27.1 overs (P. Sureshkumar 61, Raghavan 36, Balamurugan 29).

Rising Sun 232 in 39.2 overs (N.N.N.R. Nallamani 67, Pandi 67, Mohamed Rafique four for 43, Duraikumar three for 68) bt Freak 212 in 45.5 overs (Mohamed Rafique 32, Virumandi 32, Navaneethakrishnan 35, Bharath three for 27, N.N.N.R. Nallamani three for 41).

Oliva 176 in 34.4 overs (Ponpandian 36, Krishnamoorthy 31, T. Vinothkumar four for 45) lost to Customs 179 for eight in 39.3 overs (Seetharaman 30, C. Selvam 40, Radhakrishnan 28 n.o., Krishnamoorthy four for 49).

Mercury 156 in 44.4 overs (Omprakash 25, Karthikeyan three for 30, Narayanaswamy four for 30) bt Sachin 150 for nine in 50 overs (Gopinath 30, Karthikeyan 25 n.o., N.C. Babu three for 19).



**One more time:** Jamal Mohamed College retained the title in the Bharathidasan University inter-collegiate hockey tournament. ▪SPECIAL ARRANGEMENT

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
திங்கள்கிழமை
9 செப்டம்பர் 2019
திருச்சி
14 பக்கங்கள் ரூ.7

# பல்கலைக்கழக வளைகோல்பந்து போட்டி: ஜமால் முகமது கல்லூரி சாம்பியன்



வளைகோல்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற ஜமால்முகமது கல்லூரிக்கு கோப்பையை வழங்குகிறார் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக விளையாட்டுப்பிரிவுச் செயலர் ஏ. பழனிசாமி.

**திருச்சி,செப்.8:** திருச்சிபாரதிதாசன் பல்கலைக்கழக அளவிலான வளை கோல்பந்து போட்டியில், ஜமால் முகமது கல்லூரி அணி சாம்பியன் பட்டத்தைகைப்பற்றியது.

பல்கலைக்கழக இணைவுப் பெற்ற கல்லூரிகளுக்கிடையிலான வளைகோல்பந்து போட்டிகள் ( மாணவர் பிரிவு) திருச்சி அண்ணா விளையாட்டரங்க செயற்கை புல் வெளி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

இதன் இறுதிப் போட்டியில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை 4–1 என்ற கோல்கணக்கில் வென்று, சாம்பியன் பட்டத்தை ஜமால் முக மதுகல்லூரி கைப்பற்றியது. இக் கல்லூரியின் மதன் 4 கோல்களை அடித்து அணிக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தார்.

புதுக்கோட்டை மாமன்னர் கல் லூரியை 4–0 என்ற கோல்கணக்கில் வென்று திருச்சி தூய வளனார் கல் லூரி மூன்றாமிடத்தைப் பிடித்தது.

சாம்பியன்பட்டம் பெற்ற ஜமால் முகமது கல்லூரிக்கு கோப்பை மற் றும் சான்றிதழ்களை பாரதிதாசன் பல்கலைக்கழக விளையாட்டுப் பிரி வுச் செயலர் ஏ.பழனிச்சாமி வழங் கினார். இதுபோல மற்றஇடங்க ளைப்பிடித்தவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில், ஜமால் முகமது கல் லூரி உடற்கல்வித் துறை இயக்குநர் ஷாஇன்ஷா உள்ளிட்டோர் பங் கேற்றனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2018-2020 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 4-9-2019 (புதன்கிழமை) 8 பக்கம் 500 காசு ★★★ மலர் 42 இதழ் 263

போக்சோ சட்டத்தால்

# குழந்தைகள் மீதான குற்றங்கள் குறைய வாய்ப்பு

## பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் பேச்சு

திருச்சி, செப்.4–

பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவ–மாணவிகள் அனைவரும் சத்தான உணவை உட்கொள்ள வேண்டும். அதன் மூலம்தங்களது உடல்நலத்தை பேண வேண்டும், சத்தான மற்றும் சரிவிகித உணவு குறித்து அறிந்து கொள்ளும் வகையில் செப்டம்பர் மாதம் ஊட்டச்சத்து மாதமாக மத்திய அரசு அறிவித்தது.

அதன்படி இந்த மாதம் திருச்சியில் கல்லூரி மாணவிகளுக்கு ஊட்டச்சத்து குறித்து நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா ஜமால் முகமது கல்லூரியில் நடந்தது. விழாவில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் ஆர்.ஜி.ஆனந்த் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கி பாராட்டினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

2022–ல் ஊட்டச்சத்து குறைபாட்டினால் நோய்களைத் தடுக்கும் வகையில் ஒரு வார காலமாக இருந்த இந்த நிகழ்ச்சி ஒரு மாதமாக மாற்றப்பட்டு கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் இதன் முதல் நிகழ்ச்சியாக திருச்சியில் கல்லூரி மாணவிகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலமாகவும் பள்ளி, அங்கன்வாடி மையங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

தேசிய குழந்தை பாதுகாப்பு ஆணைய மையம் கடந்த ஒன்றரை மாதங்களில் 12மாநிலங்களில் 20அமர்வு பெஞ்ச் நடைபெற்றதில் 5 ஆயிரம் புகார்கள் பெறப்பட்டு 4 ஆயிரம் புகார்களுக்கு மேலாக தீர்வு காணப்பட்டது. டிசம்பர் இறுதிக்குள் 115 நிதி ஆயோக் மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சி நடத்திடவும், இந்தியாவிலுள்ள 727 மாவட்டங்களிலும் இதனை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது 35 நிதி ஆயோக் மாவட்டங்களில் இந்த அமர்வு கூட்டப்பட்டுள்ளது. மத்திய அமைச்சர் ஸ்மிதிராணி பதவியேற்ற பின்னர் அவரின் முயற்சியினால் முதல் கூட்டத் தொடரில் போக்சோ சட்ட திருத்தம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் குற்றங்கள் கடுமையாக் கப்பட்டுள்ளது, மேலும் போக்சோ சட்டத்தின் மூலம் மரண தண்டனை விதிக்கப்படும் என்பது தெரியவந்ததால் குற்றங்கள் குறைய வாய்ப்புகள் மிக அதிகம்.

இது போன்ற பல்வேறு புதிய முயற்சிகளை தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் செய்துகொண்டே இருக்கும். மேலும் தமிழகத்திலிருந்து பெறப்பட்ட 850க்கும் மேற்பட்ட புகார்களில் எல்லாவற்றிற்கும் தீர்வு காணப்பட்ட நிலையில் ஒருசில புகார்களுக்கு நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் அதில் கமிஷன் தலையிட முடியாது என்றார்.



விழாவில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் ஆர்.ஜி.ஆனந்த் மாணவி ஒருவருக்கு பரிசு வழங்கிய காட்சி.

காணவில்லை

நான் கடந்த 25.06.2019 அன்று ஸ்ரீரங்கத்திலிருந்து உறையூர் ஜெயந்தி பஸ் ஸ்டாப் வழியாக எனது இளைய மகனுடன் இருசக்கர வாகனத்தில் வந்த பொழுது எனது பையில் வைத்திருந்த எனது மூத்த மகனின் அசல் கிரய ஆவண எண், (ஆவண எண்.1043/1995, 1088/1999) திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் சப் ரிஜிஸ்ட்ரார் அலுவலகம், பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணப் பத்திரத்தை காணவில்லை.இது சம்பந்தமாக உறையூர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளேன் கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் தகவல் தெரிவிக்கவும்.

V.Govindammal,
W/o.Vasudevan,
No.16, Nadu neikkara Eda St,
Palakkarai, Trichy.

பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரர் திரு.S.தண்டபாணி S/o, சுப்பையாநாயுடு 72A, மகேந்திர மேத்ரா தெரு காந்திரோடு திருவானைக்காவல் என்பவர் 19.07.2019 அன்று காந்திரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்ற போது தனது பெயரிலுள்ள அசல் கிரயபத்திரம் எண்:1787/1997, dt. 31.03.1997 ( ஸ்ரீரங்கம் சார்பதிவகம் வெள்ளிதிருமுத்தம் கிராம T.S.Nos.2150/Part, 2151/Part, ஆகியவற்றில் கட்டுப்பட்டது) தவறவிட்டுள்ளார். மேற்படி ஆவணம் கிடைக்கப்பெற்றவர்கள் என்னிடம் ஒப்படைக்கவும். இது குறித்த புகார் Online-ல் பதியப்பட்டு CTD19073938 என்ற எண்ணில் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் விசாரணை நிலுவையில் உள்ளது. மேலும் மேற்படி ஆவணத்தை யாரேனும் தவறாக பயன்படுத்தினால் அது எமது கட்சிக்காரரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதையும் அறியவும்.

இப்படிக்கு
P.Vadivelu,B.A.,LLB.,
Advocate & Notary Public,Srirangam. Cell: 94436 45577, 87785 51484.

திருச்சிராப்பள்ளி மாவட்ட துணைச்சீட்டு பதிவாளர் அவர்களின் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி
முன்னிலை:திருமதி.ம.யோகமலர் அவர்கள்
மத்தியஸ்த வழக்கு எண்: 119/2019
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு (பிரைவேட்) லிமிடெட்.
No: 22/5, Vijay Complex, 1st Floor,
T.T.Road, Musiri-621211. வாதி
R1- T.Gopal, S/o.MR.Thangaraj,
No:42/8, South Street,
Mangalam (Po).
R2- T.Tamilselvi, S/o.MR.Thangaraj,
No:42/8, Mangalam South Street,
Mangalam (Po), Musiri (T.K).
R3- R.Boopathi, S/o.A.Rajendran, No:1/14,
Agrakaram, Mangalam (Po), Musiri- 621205
பிரதிவாதி

திருச்சிராப்பள்ளி மாவட்ட துணைச்சீட்டு பதிவாளர் அவர்களின் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி
முன்னிலை:திருமதி.ம.யோகமலர் அவர்கள்
மத்தியஸ்த வழக்கு எண்: 83/2019
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு (பிரைவேட்) லிமிடெட்.,
மதுரை ரோடு, திருச்சி–8 வாதி
R1- D.Barathi Raja, S/o.MR.Durai Raj,
No:23/1, Annanagar, 5th Street, S.Kannanur,
Samayapuram (Po),
R2- S.Sivagami, W/o.MR.Sakthivel,
No:23/1, Annanagar, 5th Street, S.Kannanur,
Samayapuram (Po),
R3- A.Balachandar, S/o.MR.Arjunan,
No:4/157, Ganesapuram, Thiruvarambur,
Trichy- 620014.
பிரதிவாதி

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2018-2020 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 4-9-2019 (புதன்கிழமை) 8 பக்கம் 500 காசு ★★★ மலர் 42 இதழ் 263

### போக்சோ சட்டத்தால்

# குழந்தைகள் மீதான குற்றங்கள் குறைய வாய்ப்பு

## பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் பேச்சு

திருச்சி, செப்.4–

பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவ–மாணவிகள் அனைவரும் சத்தான உணவை உட்கொள்ள வேண்டும். அதன் மூலம் தங்களது உடல்நலத்தை பேண வேண்டும், சத்தான மற்றும் சரிவிகித உணவு குறித்து அறிந்து கொள்ளும் வகையில் செப்டம்பர் மாதம் ஊட்டச்சத்து மாதமாக மத்திய அரசு அறிவித்தது.

அதன்படி இந்த மாதம் திருச்சியில் கல்லூரி மாணவிகளுக்கு ஊட்டச்சத்து குறித்து நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா ஜமால் முகமது கல்லூரியில் நடந்தது. விழாவில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் ஆர்.ஜி.ஆனந்த் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கி பாராட்டினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

2022–ல் ஊட்டச்சத்து குறைபாட்டினால் நோய்களைத் தடுக்கும் வகையில் ஒரு வார காலமாக இருந்த இந்த நிகழ்ச்சி ஒரு மாதமாக மாற்றப்பட்டு கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் இதன் முதல் நிகழ்ச்சியாக திருச்சியில் கல்லூரி மாணவிகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலமாகவும் பள்ளி, அங்கன்வாடி மையங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

தேசிய குழந்தை பாதுகாப்பு ஆணைய மையம் கடந்த ஒன்றரை மாதங்களில் 12 மாநிலங்களில் 20 அமர்வு பெஞ்ச் நடைபெற்றதில் 5 ஆயிரம் புகார்கள் பெறப்பட்டு 4 ஆயிரம் புகார்களுக்கு மேலாக தீர்வு காணப்பட்டது. டிசம்பர் இறுதிக்குள் 115 நிதி ஆயோக் மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சி நடத்திடவும், இந்தியாவிலுள்ள 727 மாவட்டங்களிலும் இதனை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது 35 நிதி ஆயோக் மாவட்டங்களில் இந்த அமர்வு கூட்டப்பட்டுள்ளது. மத்திய அமைச்சர் ஸ்மிதிராணி பதவியேற்ற பின்னர் அவரின் முயற்சியினால் முதல் கூட்டத் தொடரில் போக்சோ சட்ட திருத்தம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் குற்றங்கள் கடுமையாக்கப்பட்டுள்ளது, மேலும் போக்சோ சட்டத்தின் மூலம் மரண தண்டனை விதிக்கப்படும் என்பது தெரியவந்ததால் குற்றங்கள் குறைய வாய்ப்புகள் மிக அதிகம்.

இது போன்ற பல்வேறு புதிய முயற்சிகளை தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் செய்துகொண்டே இருக்கும். மேலும் தமிழகத்திலிருந்து பெறப்பட்ட 850க்கும் மேற்பட்ட புகார்களில் எல்லாவற்றிற்கும் தீர்வு காணப்பட்ட நிலையில் ஒருசில புகார்களுக்கு நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் அதில் கமிஷன் தலையிட முடியாது என்றார்.



விழாவில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் ஆர்.ஜி.ஆனந்த் மாணவி ஒருவருக்கு பரிசு வழங்கிய காட்சி.


## காணவில்லை

நான் கடந்த 25.06.2019 அன்று ஸ்ரீரங்கத்திலிருந்து உறையூர் ஜெயந்தி பஸ் ஸ்டாப் வழியாக எனது இளைய மகனுடன் இருசக்கர வாகனத்தில் வந்த பொழுது எனது பையில் வைத்திருந்த எனது மூத்த மகனின் அசல் கிரய ஆவண எண், (ஆவண எண்.1043/1995, 1088/1999) திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் சப் ரிஜிஸ்ட்ரார் அலுவலகம், பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணப் பத்திரத்தை காணவில்லை. இது சம்பந்தமாக உறையூர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளேன் கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் தகவல் தெரிவிக்கவும்.

V.Govindammal,
W/o.Vasudevan,
No.16, Nadu neikkara Eda St,
Palakkarai, Trichy.

## பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரர் திரு.S.தண்டபாணி S/o, சுப்பையாநாயுடு 72A, மகேந்திர மேத்ரா தெரு காந்திரோடு திருவானைக்காவல் என்பவர் 19.07.2019 அன்று காந்திரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்ற போது தனது பெயரிலுள்ள அசல் கிரயபத்திரம் எண்:1787/1997, dt. 31.03.1997 ( ஸ்ரீரங்கம் சார்பதிவகம் வெள்ளிதிருமுத்தம் கிராம T.S.Nos.2150/Part, 2151/Part, ஆகியவற்றில் கட்டுப்பட்டது) தவறவிட்டுள்ளார். மேற்படி ஆவணம் கிடைக்கப்பெற்றவர்கள் என்னிடம் ஒப்படைக்கவும். இது குறித்த புகார் Online-ல் பதியப்பட்டு CTD19073938 என்ற எண்ணில் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் விசாரணை நிலுவையில் உள்ளது. மேலும் மேற்படி ஆவணத்தை யாரேனும் தவறாக பயன்படுத்தினால் அது எமது கட்சிக்காரரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதையும் அறியவும்.

இப்படிக்கு
P.Vadivelu, B.A., LLB.,
Advocate & Notary Public, Srirangam. Cell: 94436 45577, 87785 51484.

திருச்சிராப்பள்ளி மாவட்ட துணைச்சீட்டு பதிவாளர் அவர்களின் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

முன்னிலை:திருமதி.ம.யோகமலர் அவர்கள்
மத்தியஸ்த வழக்கு எண்: 119/2019
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு (பி)லிமிடெட்.
No: 22/5, Vijay Complex, 1st Floor,
T.T.Road, Musiri-621211. வாதி
R1- T.Gopal, S/o.MR.Thangaraj,
No:42/8, South Street,
Mangalam (Po).
R2- T.Tamilselvi, S/o.MR.Thangaraj,
No:42/8, Mangalam South Street,
Mangalam (Po), Musiri (T.K).
R3- R.Boopathi, S/o.A.Rajendran, No:1/14,
Agrakaram, Mangalam (Po), Musiri- 621205
பிரதிவாதி

திருச்சிராப்பள்ளி மாவட்ட துணைச்சீட்டு பதிவாளர் அவர்களின் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

முன்னிலை:திருமதி.ம.யோகமலர் அவர்கள்
மத்தியஸ்த வழக்கு எண்: 83/2019
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு (பி)லிமிடெட்.,
மதுரை ரோடு, திருச்சி-8 வாதி
R1- D.Barathi Raja, S/o.MR.Durai Raj,
No:23/1, Annanagar, 5th Street, S.Kannanur,
Samayapuram (Po),
R2- S.Sivagami, W/o.MR.Sakthivel,
No:23/1, Annanagar, 5th Street, S.Kannanur,
Samayapuram (Po),
R3- A.Balachandar, S/o.MR.Arjunan,
No:4/157, Ganesapuram, Thiruvarambur,
Trichy- 620014.
பிரதிவாதி

முரசு: 59 ஒலி: 111
8 பக்கங்கள் விலை 500 காசுகள்
THANJAI MALAI MURASU
Reg.No. TRY/060/2018-2020
RNI Regn. No.5842/61
தஞ்சை
மாலை முரசு
திருச்சி பதிப்பு
4-9-2019 (ஆவணி 18) புதன்கிழமை
★★★




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஊட்டச்சத்து குறைபாடு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. இதில் தேசிய குழந்தைகள் நல வாரிய உறுப்பினர் டாக்டர், ஆனந்த் பேசியபோது எடுத்த படம்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வியாழக்கிழமை
5 செப்டம்பர் 2019
திருச்சி
16 பக்கங்கள் ரூ.7

# போக்குவரத்து விழிப்புணர்வு: சாதனை புத்தகத்தில் இடம்பெற்ற மாணவி

**திருச்சி, செப்.4:** மாணவர்களிடையே போக்குவரத்து விதிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய கல்லூரி மாணவி ஜெட்லி சாதனையாளர் புத்தகத்தில் புதன்கிழமை இடம்பெற்றார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி, எக்ஸ்னோரா மன்றம் ஆகியவை இணைந்து மாணவர்களிடையே போக்குவரத்து விதிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதல்வர் இஸ்மாயில் மொகிதீன் தலைமை வகித்தார். கல்லூரி தாளாளர் காஜா நஸமுதீன், பொருளாளர் ஜமால் முகமது ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு குழந்தைகளை பாதுகாப்பு உரிமை மாநில உறுப்பினர் பி.மோகன் கலந்துகொண்டார். தொடர்ந்து, இக்கல்லூரியில் எம்.பி.ஏ இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி எஸ்.ரேஷ்மி திரளான மாணவர்களிடையே போக்குவரத்து விதிமுறைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி தொடர்ந்து 45 நிமிடங்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினார்.




அதிக நேரம் போக்குவரத்து விழிப்புணர்வு ஏற்படுத்திய மாணவி ரேஷ்மிக்கு சாதனை சான்றிதழ் வழங்கிய ஜெட்லி சாதனை புத்தக நிறுவனர் டிராகன் ஜெட்லி, குழந்தைகள் உரிமை பாதுகாப்பு மாநில உறுப்பினர் பி.மோகன்.

போக்குவரத்து பிரிவில் அதிக நேரம் விழிப்புணர்வு ஏற்படுத்தி ஜெட்லி சாதனை புத்தகத்திலும் இடம்பெற்றார்.

நிகழ்ச்சிக்கு, ஜெட்லி சாதனை புத்தக அமைப்பு நிறுவனர் டிராகன் ஜெட்லி நடுவராக கலந்துகொண்டு மாணவியின் சாதனையை உறுதி செய்தார். தொடர்ந்து, மாணவி ரேஷ்மிக்கு ஜெட்லி புத்தக சாதனையாளர் சான்றிதழ், விருதினை டிராகன் ஜெட்லி, பி.மோகன் உள்ளிட்டோர் வழங்கினர்.

நிறைவாக, எக்ஸ்னோரா செயலர் அனீஸ் முகமது நன்றி தெரிவித்தார். இதில், கல்லூரிமேலாண்மை பிரிவு இயக்குநர் ஹுர்துராஜ், பேராசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யு (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040, போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
SCM A product of Seyad Cotton Mills
Seyad Home Industries Private Limited
Tirunelveli - 627 003



## திருச்சியில் கல்லூரிகளுக்கு இடையிலான

## காஜாமியான் சுழற்கோப்பை ஹாக்கி போட்டியில் ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி கோப்பையை தக்க வைத்தது

திருச்சி, செப்.04-

திருச்சியில் 19 ஆவது ஆண்டாக நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டியில், ஜமால் முகமது கல்லூரி அணி வென்று கோப்பையை தக்க வைத்துக் கொண்டது.

திருச்சி, ஜமால் முகமது கல்லூரியின் உடற்கல்வி துறை சார்பில், 19-ஆம் ஆண்டாக கல்லூரிகளுக்கு இடையிலான காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டி நாக் அவுட் முறையில் செப்.1 முதல் 3-ஆம் தேதி வரை நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் இருந்து 13 கல்லூரிகள் பங்கேற்ற போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, திண்டுக்கல், ஜிடிஎன். கலைக் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரி அணிகள் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரையிறுதி போட்டிகளில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை, மாருதி உடற்கல்வியியல் கல்லூரியை 3-0 என்ற கோல் கணக்கிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரி, திண்டுக்கல், ஜிடிஎன். கலைக்கல்லூரியை 2-1 என்ற கோல் கணக்கிலும் வென்று இறுதி போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. மூன்றாவது இடத்திற்கு நடைபெற்ற போட்டியில் திண்டுக்கல், ஜிடிஎன் கலைக் கல்லூரி, மாருதி உடற் கல்வியியல் கல்லூரியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இறுதிப் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்று கோப்பையை தக்க வைத்து கொண்டது. கல்லூரி துணைச் செயலர் கே. அப்துஸ் சமது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திருச்சி ஜமால் முகமது கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரிகளுக்கு கோப்பைகள், சான்றிதழ்களை வழங்கினார்.

மூன்றாமிடம் பிடித்த திண்டுக்கல் ஜிடிஎன். கலைக் கல்லூரி, 4-ஆவது இடம் பிடித்த கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், பரிசுத் தொகையாக முறையே ரூ. 10ஆயிரம், ரூ7 ஆயிரம், ரூ5 ஆயிரம், ரூ3 ஆயிரத்தை கல்லூரிச் செயலர் ஏ.கே. காஜா நஜிமுதீன் வழங்கினார்.

கல்லூரிப் பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது, முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், இயக்குநர் சுயநிதிப்பிரிவு கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் கே.என். முகமது பாசில், உடற்கல்வி இயக்குனர் பி.எஸ். ஷா இன்ஷா ஆகியோர் அணிகளுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

## இ.யூ. முஸ்லிம் லீக் சேலம் மாவட்ட முன்னாள் செயலாளர் டி.ஏ. வாஹித் கான் காலமானார்



இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் சேலம் மாவட்ட முன்னாள் செயலாரள டி.ஏ. வாஹித் கான் (வயது 84) 01-09-2019 ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் காலமானார். ஜனாஸா தொழுகை 02-09-2019 திங்கட் கிழமை ளுஹர் தொழுகைக்கு பிறகு ஜாமிஆ மஸ்ஜிதில் நடத்தப்பட்டு சேலம் பழுமைக்கான கபரஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நல்லடக்கத்தை தொடர்ந்து மாவட்டத் தலைவர் ஏ.கே. நஜீர் அஹமது தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில துணைத்தலைவர் எம்பி. காதர் உசேன், மாவட்ட துணைத்தலைவர் எம். நஸீர் பாஷா ஆகியோர் இரங்கல் உரையாற்றினர்.

மாவட்ட செயலாளர் அஸ்கர் பாஷா, மாவட்ட பொருளாளர் ஹன்னு என்கிற சாதிக் பாஷா, மாவட்ட துணைத் தலைவர் அஜ்மல் பாஷா, மாவட்ட துணை செயலாளர் அப்துல் ஹமீது, முஸ்லிம் யூத் லீக் மாநில துணைத்தலைவர் ஹசன் ஜக்கரியா, மாவட்ட யூத் லீக் அமைப்பாளர் இத்ரீஸ், முனீர், அப்துல் காதர், பாலக்காடு அக்பர், பண்டுபாய், பாஷா, அப்துல் அஹமது, ஜமால், காஜா, அலாவுதீன், ஷாகிர், முஹம்மது அலி, சிராஜ், நிசார், இர்பான் பாஷா, இத்ரி சேட் உள்ளிட்ட நிர்வாகிகள், ஜமாஅத்தார்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தலைமை நிலைய பாடகர் இறையன்பன் குத்தூஸ் தந்தையார் எம்.கே. மொய்தீன் காலமானார்



தி.மு.க. தலைமை நிலைய பாடகர் இஸ்லாமிய இசை அரசு இறையன்பன் குத்தூஸ் தந்தையார் எம்.கே. மொய்தீன் இன்று (03-09-2019) செவ்வாய்கிழமை அதிகாலை 2. 30 மணியளவில் காலமானார். அன்னாரின் ஜனாஸா இன்று 03-09-2019 மக்ரிப் தொழுகைக்கு பின் சென்னை, டாக்டர் நடேசன் சாலையில் உள்ள பக்கீர் லெப்பை பள்ளி வாசலில் தொழுகை நடத்தப் பட்டு சென்னை லாயட்ஸ் ரோடு, பப்பு மஸ்தான் தர்கா கபரஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா தொழுகையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில செயலாளர் கேஏம். நிஜாமுதீன், மாநில துணைச் செயலாளர் எஸ்ஏ. இப்ராஹிம் மக்கி, தலைமைநிலைய பாடகர் ஏ. ஷேக் மதார், வடசென்னை மாவட்ட துணைச்செயலாளர் ஏ.கே. முஹம்மது பாரி, தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்க தலைவர் காயல் இளவரசு, ஆர்எஸ்பி வீடியோ உரிமையாளர் காயல் தர்வேஸ் உள்ளிட்ட ஜமாஅத்தார்கள் பங்கேற்று மறைந்தவரின் மஃபிரத்திற்கு துஆ செய்தனர்.

# கல்லூரிகளுக்கு இடையேயான ஹாக்கி போட்டி: திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி சாம்பியன்

திருச்சி, செப்.4–

திருச்சியில் 19 ஆவது ஆண்டாக நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டியில் ஜமால் முகமது கல்லூரி அணி வென்று கோப்பையை தக்க வைத்துக் கொண்டது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் உடற்கல்வி துறை சார்பில் 19 ஆம் ஆண்டாக கல்லூரிகளுக்கு இடையிலான காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டி நாக் அவுட் முறையில் செப்.1 முதல் 3ஆம் தேதி வரை நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் இருந்து 13 கல்லூரிகள் பங்கேற்ற போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, திண்டுக்கல், ஜி.டி.என். கலைக் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரி அணிகள் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரையிறுதி போட்டிகளில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை, மாருதி உடற்கல்வியியல் கல்லூரியை 30 என்ற கோல் கணக்கிலும் மதுரை அமெரிக்கன் கல்லூரி, திண்டுக்கல், ஜி.டி.என். கலைக்கல்லூரியை 21 என்ற கோல் கணக்கிலும் வென்று இறுதி போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. மூன்றாவது இடத்திற்கு நடைபெற்ற போட்டியில் திண்டுக்கல், ஜி.டி.என் கலைக்கல்லூரி, மாருதி உடற்கல்வியியல் கல்லூரியை 10 என்ற கோல் கணக்கில் வென்றது.

இறுதிப் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரியை 10 என்ற கோல் கணக்கில் வென்று கோப்பையை தக்க வைத்து கொண்டது. கல்லூரி துணைச் செயலர் கே. அப்துஸ் சமது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திருச்சி ஜமால் முகமது கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரிகளுக்கு கோப்பைகள், சான்றிதழ்களை வழங்கினார்.மூன்றாமிடம் பிடித்த திண்டுக்கல் ஜி.டி.என். கலைக் கல்லூரி, 4 ஆவது இடம் பிடித்த கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும் பரிசுத் தொகையாக முறையே ரூ. 10ஆயிரம், ரூ.7 ஆயிரம், ரூ.5 ஆயிரம், ரூ.3 ஆயிரத்தை கல்லூரிச் செயலர் ஏ.கே. காஜா நஜிமுதீன் வழங்கினார்.

கல்லூரிப் பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது, முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், இயக்குநர் சுய நிதிப்பிரிவு கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் கே.என். முகமது பாசில், உடற்கல்வி இயக்குனர் பி.எஸ். ஷா இன்ஷா ஆகியோர் அணிகளுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
புதன்கிழமை
4 செப்டம்பர் 2019
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# காஜாமியான் சுழற்கோப்பை ஹாக்கி: ஜமால்முகமது கல்லூரி அணி வெற்றி

**திருச்சி, செப்.3:** திருச்சியில் 19 ஆவது ஆண்டாக நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டியில், ஜமால் முகமது கல்லூரி அணி வென்று கோப்பையை தக்க வைத்துக் கொண்டது.

திருச்சி, ஜமால் முகமது கல்லூரியின் உடற்கல்வி துறை சார்பில், 19-ஆம் ஆண்டாக கல்லூரிகளுக்கு இடையிலான காஜாமியான் சுழற் கோப்பைக்கான ஹாக்கி போட்டி நாக் அவுட் முறையில் செப்.1 முதல் 3 ஆம் தேதி வரை நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் இருந்து 13 கல்லூரிகள் பங்கேற்ற போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, திண்டுக்கல், ஜி.டி.என். கலைக் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரி அணிகள் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரையிறுதி போட்டிகளில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை, மாருதி உடற்கல்வியியல் கல்லூரியை 3-0 என்ற கோல் கணக்கிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரி, திண்டுக்கல், ஜி.டி.என். கலைக்கல்லூரியை 2-1 என்ற கோல் கணக்கிலும் வென்று இறுதி போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. மூன்றாவது இடத்திற்கு நடைபெற்ற போட்டியில் திண்டுக்கல், ஜி.டி.என் கலைக்கல்லூரி, மாருதி உடற்கல்வியியல் கல்லூரியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. இறுதிப் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்று கோப்பையை தக்க வைத்து கொண்டது. கல்லூரி துணைச் செயலர் கே. அப்துஸ் சமது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திருச்சி ஜமால் முகமது கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரிகளுக்கு கோப்பைகள், சான்றிதழ்களை வழங்கினார்.



போட்டியில் வென்ற ஜமால் முகமது கல்லூரி அணிக்கு கோப்பை வழங்கும் கல்லூரி நிர்வாகத்தினர்.

மூன்றாமிடம் பிடித்த திண்டுக்கல் ஜி.டி.என். கலைக் கல்லூரி, 4ஆவது இடம் பிடித்த கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், பரிசுத் தொகையாக முறையே ரூ. 10ஆயிரம், ரூ.7 ஆயிரம், ரூ.5 ஆயிரம், ரூ.3 ஆயிரத்தை கல்லூரிச் செயலர் ஏ.கே. காஜா நஜிமுதீன் வழங்கினார்.

கல்லூரிப் பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது, முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், இயக்குநர் சுய நிதிப்பிரிவு கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் கே.என். முகமது பாசில், உடற்கல்வி இயக்குனர் பி.எஸ். ஷா இன்ஷா ஆகியோர் அணிகளுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

REGD. No. TRY/056/2018-2020 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- தினத்தந்தி, வெளிநாட்டு ஏடு போன்ற தோற்றம் உடையது -

வாளவில் 4 பக்க இணைப்புடன்
24 பக்கம் 500 காசு

தினத் தந்தி
DAILY THANTHI

திருச்சி (4-9-2019) புதன்கிழமை
மலர் 77 இதழ் 306
வெல்க தமிழ்
விகாரி ஸ்ரீ ஆவணி மீ 18 உ.
ஹிஜ்ரி 1441 முகரம் 4

RAMRAJ lagnaa PURE SILK DHOTIS SHIRTS

நியூரோ ஒன் 80%




## மாநில ஆக்கி போட்டியில்

# திருச்சி ஜமால்முகமது கல்லூரி சாம்பியன்

திருச்சி, செப்.4-

கல்லூரிகளுக்கு இடையேயான மாநில ஆக்கி போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரி மைதானத்தில் கடந்த 1-ந் தேதி முதல் தொடங்கி 3 நாட்கள் நடைபெற்று வந்தது. இந்த போட்டியில் திருச்சி, மதுரை, கோவை, சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 13 கல்லூரி அணிகள் கலந்து கொண்டு விளையாடின. நாக்அவுட் முறையில் நடத்தப்பட்ட இந்த போட்டியில் திருச்சி ஜமால்முகமது கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகியவை இறுதி போட்டிக்கு தகுதி பெற்றன. நேற்று மாலை இறுதி போட்டி நடந்தது. பரபரப்பாக நடந்த இந்த போட்டியில் ஜமால்முகமது கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் மதுரை அமெரிக்கன் கல்லூரியை வென்று சாம்பியன் கோப்பையை தட்டி சென்றது. 3-ம் இடத்துக்கு நடந்த போட்டியில் திண்டுக்கல், ஜி.டி.என். கலைக்கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரியை வென்றது. பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கல்லூரி துணை செயலாளர் அப்துஸ்சமது பரிசு கோப்பைகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார். விழாவில் பலர் கலந்து கொண்டனர்.

ATLAS மருத்துவமனை
24x7 விபத்து மற்றும் எலும்பு முறிவு சிகிச்சைகள்
அதிநவீன மூட்டு மாற்று & தண்டுவட சிகிச்சைகள்
34/1, முதல் கிராஸ், VN நகர், சந்திரம் பேருந்து நிலையம் அருகில், ... Ph: 0431-2701248, 2701348, 73737 97401

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
-TPTC Edition-

Parryware Sanitaryware
நாகப்பா கார்ப்பரேஷன்
Phone : 0431 - 2707850, 4010765

திருச்சி • புதன் • செப்டம்பர் 4, 2019 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 18 பக்கம் • 600 காசு • மலர் 68 • இதழ் 363



திருச்சியில் நடந்த காஜாமியான் கோப்பை ஹாக்கி போட்டியில் முதலிடம் பெற்ற ஜமால் முகமது கல்லூரி அணி வீரர்கள்.

# ஹாக்கி: 'ஜமால்' சாம்பியன்

**திருச்சி:** காஜாமியான் கோப்பைக்கான ஹாக்கி போட்டி ஜமால் முகமது கல்லூரியில் நடந்தது.

13 கல்லூரிகள் பங்கேற்ற இப்போட்டியின் அரையிறுதி சுற்றுக்கு திருச்சி ஜமால் முகமது, கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, திண்டுக்கல், ஜி.டி.என். கலை அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி அணிகள் தகுதி பெற்றன. அரையிறுதி போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரி, திண்டுக்கல் ஜி.டி.என். கலைக்கல்லூரியை 2:1 என்ற கோல் கணக்கிலும் வீழ்த்தின. இறுதி போட்டியில் ஜமால் முகமது கல்லூரி அணி, மதுரை அமெரிக்கன் கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கில் வென்று கோப்பையை தக்க வைத்து கொண்டது. பரிசளிப்பு விழாவில் கல்லூரி துணை செயலாளர்அப்துல் சமது பரிசு வழங்கினார். நிகழ்ச்சியில் செயலாளர் காஜா நஜிமுதீன், பொருளாளர்ஜமால் முகமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

WEDNESDAY, SEPTEMBER 4, 2019
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
18 pages • ₹6.00



Chandrayaan lander gets first orbit trim to prime it for landing page 7


Chidambaram to remain in CBI custody till September 5 page 10



Govt. nod for one-time capital infusion of ₹4,557 cr. into IDBI Bank page 14

Virat Kohli's men defeat West Indies in second Test, sweep series page 15


## TAMIL NADU ROUND-UP




**Triumphant:** Jamal Mohamed College team after beating The American College in the final. ▪SPECIAL ARRANGEMENT

### Jamal Mohamed retains hockey title

**TIRUCHI:** Host Jamal Mohamed College edged out The American College 1-0 to retain the Khajamian Trophy in the 19th inter-collegiate hockey tournament here on Tuesday.

**The results: Final:** Jamal Mohamed 1 (Madhan) bt The American 0.

**Third place:** GTN 1 (Jithu) bt Maruthi CPE 0.

**Semifinals:** Jamal Mohamed 3 (Naveen 2, Hariharan) bt Maruthi CPE 0; The American 2 (Dhanasekaran, Yuvaraj) bt GTN 1 (Gopi).

Vidyashram 157 for seven in 20 overs (S.G. Balaji 52, A. Raghul Eniyadharsan 44) bt Sri Vignesh Vidyalaya 125 for seven in 20 overs (R. Yuva Karthick 32, C. Kishore three for 21).

Kamala Niketan Montessori 138 for five in 20 overs (C. Sakthi Santosh 37) bt BHEL MHSS 92 in 19.2 overs (M. Nishanth three for 13).

### Khusenkhojaev wins chess title

**TIRUNELVELI:** IM Muhammad Khusenkhojaev of Tajikistan won the title in the Courtallam Saaral International FIDE-rating chess tournament,

THE NEW INDIAN EXPRESS
TIRUCHY • FRIDAY • AUGUST 30, 2019 • ₹6.00 • PAGES 20 • LATE CITY EDITION



READ SHARE FOLLOW
newindianexpress.com
facebook.com/thenewindianxpress twitter.com/newindianexpress
instagram.com/newindianexpress



## GOVT TO SWEETEN AIR INDIA DEAL BY TWEAKING TERMS

**After its earlier bid to woo investors for the carrier failed, the govt now plans to dilute disinvestment terms and conditions**

**'NEW EXPRESSION OF INTEREST WILL BE A HIT'**

In the first attempt to divest AI in May 2018, the government wanted to retain 24% stake, which could have been one of the primary reasons for not getting potential buyers. Sources said now the govt will put 95% stake up for sale and retain 5% for employees stock option. Civil Aviation Minister Hardeep Puri claimed the new EoI will be a hit with investors PTI

**BIDDING PROCESS TO START IN OCTOBER**

- In February, the government had approved setting up of Air India Assets Holding Company to transfer ₹29,464 crore worth loans of the national carrier and its four subsidiaries
- The government is set to fast-track the process and a meeting headed by Home Minister Amit Shah will set the ball rolling

160

NO. OF QUERIES ABOUT AIR INDIA SALE PROCESS EARLIER, BUT ZERO BIDS



# Badminton tournment

Jamal Mohamed College won the Bharathidasan University inter-collegiate men's badminton tournament held at Bishop Heber College recently. Bishop Heber College and JJ CAS won the second and third prize.

FOLLOW US:
facebook.com/thehindu
twitter.com/the_hindu

SATURDAY, AUGUST 31, 2019

# THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
22 pages • ₹6.00



Swami Chinmayanand case: law student can stay in Delhi, says SC
page 7



Kamal Nath meets Sonia amid reports of a tussle in M.P. unit
page 10



Hong Kong democracy activists get bail, protest march banned
page 12

India adopts cautious approach after early wickets
page 16



PRINTED AT • CHENNAI • COIMBATORE • BENGALURU • HYDERABAD • MADURAI • NOIDA • VISAKHAPATNAM • THIRUVANANTHAPURAM • KOCHI • VIJAYAWADA • MANGALURU • TIRUCHIRAPALLI • KOLKATA • HUBBALLI • MOHALI • MALAPPURAM • MUMBAI • TIRUPATI • LUCKNOW • CUTTACK • PATNA

## TAMIL NADU ROUND-UP

## JMC claims title

**PUDUKOTTAI:** Jamal Mohamed College won all its matches in the semifinal league to clinch the men's title in the Bharathidasan University inter-collegiate ball badminton tournament at Ganesar CAS recently.

**The scores (semifinal league):** Jamal Mohamed bt Periyar EVR 35-20, 35-15, bt AVC 35-27, 35-26, bt St. Joseph's 35-26, 35-13; St. Joseph's bt AVC 35-16, 35-23, bt Periyar EVR 35-18, 35-16; AVC bt Periyar EVR 35-27, 35-30.

**Final standings:** 1. Jamal Mohamed, 2. St. Joseph's, 3. AVC, 4. Periyar EVR.



**Top team:** Jamal Mohamed College which won the title in the Bharathidasan University inter-collegiate ball badminton tournament. ▪SPECIAL ARRANGEMENT

Prithvi
INNER WEARS
Bra | Slips | Panties
Uniform Shorts
Trichy: 88429 94951
Pudhukottai: 94436 76559
Ariyalur: 97914 84224

# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

–TPTC Edition–

திருச்சியில்
ராயல் பர்னிச்சர்
திருச்சி – 8.
2702225, 2700620.

திருச்சி • திங்கள் • செப்டம்பர் 2, 2019 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 18 பக்கம் • 600 காசு • மலர் 68 • இதழ் 361



திருச்சியில் நேற்று தொடங்கிய மாநில அளவிலான ஹாக்கி போட்டியில் ஜமால் முகமது கல்லூரி வீரர் அடித்த பந்தை திருப்பத்தூர் சேக்கர்டு ஹார்ட் கல்லூரி வீரர் தாவிக்குதித்து தடுக்க முயல்கிறார்.

ஒரு புதிய அனுபவம்
தினகரன்
Dinakaran
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



வெ.இண்டீசுக்கு எதிரான டெஸ்ட் ஹாட்ரிக் சாதனை பக்கம் 11



₹1.76 லட்சம் கோடி பொருளாதாரத்தை சீர்படுத்துமா? பக்கம் 6

மந்தநிலைக்கு தவறான நிர்வாகமே காரணம் பக்கம் 12



● திருச்சி ● திங்கள், 2-9-2019
● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி
● கதிர் 41 ஒளி 88 ● 16 பக்கம்



# திருச்சியில் மாநில அளவில் ஹாக்கி போட்டி துவக்கம்



திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் காஜாமியான் சுழற்கோப்பைக்கான மாநில அளவில் கல்லூரிகளுக்கிடையே ஹாக்கிபோட்டி நேற்று துவங்கியது. இதில் கோவை அணியும், நாமக்கல் அணியும் மோதின.

**திருச்சி, செப்.2:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 19ம் ஆண்டு காஜா மியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டி நேற்று துவங்கியது. இதில் 10 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் பங்கேற்று விளையாடுகிறது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி, உடற்கல்வி துறை சார்பில் 19ம் ஆண்டு கல்லூரிகளுக்கு இடையிலான காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டி நாக் அவுட் முறையில் நேற்று துவங்கியது. முதல்நாள் போட்டியை கல்லூரி பொருளாளர் ஜமால் முகமது துவக்கிவைத்தார். கல்லூரி இயக்குனர் அப்துல் காதர் நிஹால், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வித்துறை இயக்குநர் ஷாயின்ஷா மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் 13 கல்லூரி அணிகள் பங்கேற்று ஹாக்கிநாக் அவுட் போட்டியில் விளையாடியது. முதல்நாள் போட்டியில் காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை 2-1என்ற கோல் கணக்கில் வென்றது.

மதுரை, கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரி, ராமநாதபுரம் சையது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 3-2 என்ற கோல் கணக்கில் வென்றது. கோவை, மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, ராசிபுரம், முத்தையம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றது. திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி, திருச்சி ஜமால் முகமது கல்லூரி 'பி' அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

கடலூர், மதுரை, சென்னை, திருப்பத்தூர், ராசிபுரம், திண்டுக்கல், காரைக்குடி உள்ளிட்ட நகரங்களிலிருந்து 10 அணிகள் பங்கேற்று விளையாடி வருகிறது.

இதில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் கல்லூரிகளுக்கு கோப்பைகள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுத்தொகை ரூ.10,000, ரூ.7000மும், மூன்று மற்றும் நான்காம் இடங்களை பிடிக்கும் கல்லூரிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுத்தொகை ரூ.5,000, ரூ.3000மும் வழங்கப்படுகின்றது. இந்த போட்டி நாளை (3ம் தேதி) வரை நடைபெறுகிறது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

திங்கள்கிழமை
2 செப்டம்பர் 2019
திருச்சி
14 பக்கங்கள் ரூ.7

## குரூப்–4 தேர்வு

# 169 மையங்களில் 56,138 பேர் எழுதினர்

**திருச்சி, செப்.1:** திருச்சி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குரூப்-4 தேர்வை 56,138 பேர் தேர்வு எழுதினர்.

குரூப் 4 – பிரிவில் கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், வரி தண்டலர், தட்டச்சர் உள்ளிட்ட பதவிகளில் காலியாக உள்ள 6, 491 பணியிடங்களை நிரப்பும் வகையில், ஜூன் 14 ஆம் தேதி தேர்வுக்கான அறிவிக்கையை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டது. இத்தேர்வை எழுத 17 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை தேர்வு நடைபெற்றது.

இதற்காக திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு, திருவெறும்பூர், ஸ்ரீரங்கம், மணப்பாறை, மருங்காபுரி, லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, துறையூர், தொட்டியம் ஆகிய 11 வட்டங்களில் 169 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மாவட்டத்தில் குரூப் 4 தேர்வை எழுத 67,535 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 56,138 பேர் மட்டுமே தேர்வெழுதினர். 11,397 பேர் தேர்வு எழுத வரவில்லை.

தேர்வுப் பணிகளைக் கண்காணிக்க 227 முதன்மைக் கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். வினாத்தாள்களைக் கொண்டு செல்லவும், விடைத்தாள்களை எடுத்து வரவும் 57 நடமாடும் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இக்குழுவுக்கு துணை வட்டாட்சியர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் ஒரு அலுவலர், ஒரு வருவாய் உதவியாளர் மற்றும் ஆயுதம் ஏந்திய காவலர், அலுவலக உதவியாளர் இடம்பெற்றிருந்தனர். துணை ஆட்சியர் நிலையில் 12 பறக்கும்படையினர் தேர்வு மையங்களில் திடீர் ஆய்வு நடத்தினர்.

அனைத்து மையங்களிலும் தேர்வு நடைபெறுவதை பதிவு செய்திட 230 விடியோகிராபர்களும் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். திருச்சி ஜமால் முகமது கல்லூரி மையத்தில் ஆட்சியர் சு. சிவராசு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அனைத்து மையங்களிலும் காவல்துறை சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும் தேர்வு மையங்களுக்கு சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட்டன.

தேர்வு முடிந்தவுடன் பறக்கும்படையினர், நடமாடும் குழுக்கள் துணையுடன் விடைத்தாள்கள் அனைத்தும் முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து, விடைத்தாள் திருத்தும் மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை குரூப்–4 தேர்வு எழுதியவர்களின் அடையாள அட்டைகளை ஆய்வு செய்கிறார் ஆட்சியர் சு. சிவராசு.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
திருச்சி பதிப்பு • திங்கள், செப்டம்பர் 2, 2019
R.Dis.No.321/18 Vol 2 No.244
அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி
16 பக்கங்கள் ₹ 7

LAUNCHING OFFER
subscriptions.hindutamil.in SUBSCRIBE NOW
காமதேனு வார இதழை Courier மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
ஆண்டு சந்தா ₹1222 ₹1820
www.kamadenu.in/print-subscription

திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில்

# குரூப்- 4 தேர்வை 1.30 லட்சம் பேர் எழுதினர்

• 25 ஆயிரத்து 623 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை

**திருச்சி**

தமிழ்நாடு முழுவதும் நேற்று நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி குரூப்-4 தேர்வுக்கு விண்ணப்பித்திருந்தவர்களில் திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 30 ஆயிரத்து 486 பேர் எழுதினர், 25 ஆயிரத்து 623 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை.

திருச்சி மாவட்டத்தில் திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு, திருவெறும்பூர், ஸ்ரீரங்கம், மணப்பாறை, மருங்காபுரி, லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, துறையூர், தொட்டியம் ஆகிய வட்டங்களில் மொத்தம் 169 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் தேர்வு நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் சு.சிவராசு நேரில் பார்வையிட்டார். திருச்சி மாவட்டத்தில் 56,138 பேர் தேர்வெழுதினர். விண்ணப்பித்திருந்தவர்களில் 11,397 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை.



▲ திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் நேற்று டிஎன்பிஎஸ்சி குரூப்-4 தேர்வு நடைபெறுவதைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் சு.சிவராசு.

படம்: ஜி.ஞானவேல்முருகன்

### கரூர் மாவட்டத்தில்...

கரூர் மாவட்டத்தில் 80 மையங்களில் நேற்று நடைபெற்ற இத்தேர்வை 20,892 பேர் எழுதினர். விண்ணப்பித்தவர்களில் 3,871 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை. கரூர் தெரசா நகர் புனித தெரசா பெண்கள் மேல்நிலைப் பள்ளி உள்ளிட்ட சில மையங்களில் மாவட்ட ஆட்சியர் த.அன்பழகன் தேர்வு நடைபெறுவதை பார்வையிட்டார். எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரி தேர்வு மையத்தில் பார்வையற்ற லதா என்ற தேர்வருக்கு மாவட்ட ஆட்சியர் த.அன்பழகனின் மனைவி பூமா உதவியாளராக இருந்து தேர்வெழுதினார்.

### அரியலூர் மாவட்டத்தில்...

அரியலூர் மாவட்டத்தில் 54 மையங்களில் நேற்று நடைபெற்ற இத் தேர்வை 14,763 பேர் எழுதினர். 2,837 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை. அரியலூர் அரசு தொழில்பயிற்சி மையத்தில் தேர்வு எழுதிய மாணவர்களை மாவட்ட ஆட்சியர் டி.ஜி.வினய் பார்வையிட்டார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்...

பெரம்பலூர் மாவட்டத்தில் 47 தேர்வு மையங்களில் நடைபெற்ற இத் தேர்வை 11,525 பேர் எழுதினர். 2,527 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை. தேர்வு நடைபெற்ற சில மையங்களை மாவட்ட வருவாய் அலுவலர் சி.ராஜேந்திரன் பார்வையிட்டார்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்...

புதுக்கோட்டை மாவட்டத்தில் 90 மையங்களில் நடைபெற்ற இத் தேர்வை 27,168 பேர் எழுதினர். 4,991 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை. பல்வேறு தேர்வு மையங்களை மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.சாந்தி பார்வையிட்டார்.

## தவறுதலாக குறிப்பிட்டதால் குழப்பம்

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தேர்வு மையத்தில் தேர்வு எழுத ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தவர்களின் நுழைவுச் சீட்டில், இத்தேர்வு மையம் ஆலங்குடி அருகே ஆண்டிகுளம் பகுதியில் உள்ளது என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆண்டிகுளம் பகுதியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் தேர்வு மையம் அமைக்கப்பட்டு இருந்ததால் விண்ணப்பதாரர்களுக்கு குழப்பம் ஏற்பட்டது. இதுதொடர்பாக நேற்று முன்தினம் மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பு அனைவரின் கவனத்துக்கும் சென்றடையாததால் இந்த இரு மையங்களிலும் தேர்வு எழுத வந்தவர்கள் கடும் அவதிக்கு ஆளாகினர்.

மொத்தத்தில் திருச்சி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 1 லட்சத்து 30 ஆயிரத்து 486 பேர் தேர்வு எழுதினர், 25 ஆயிரத்து 623 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை.

REGD. No. TRY/056/2018-2020 ★★★★●
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

– இந்திய நாளிதழ்களில் முதல் இடம் வகிக்கும் தமிழ் நாளிதழ் – தினத்தந்தி –

# தினத் தந்தி
DAILY THANTHI

வெல்க தமிழ்

திருச்சி (2-9-2019) திங்கட்கிழமை | மலர் 77 இதழ் 304

விகாரி ஸ்ரீ ஆவணி மீ 16 உ ஹிஜிரி 1441 முகரம் 2

மாணவர் ஸ்பெஷல் மற்றும் கல்விச் செய்திகள்
26 பக்கம் 500 காசு

பட்டின் பாரம்பரியம்... 15%
தைலா Thaila

fw leggings Feel the Difference... Cool • Stylish • Comfort
Available in 60 Shades
SHRUGS | JEGGINGS | CAPRIS & TOPS | SHORTS | NIGHT WEAR SET
Mob : 94426 61722
Available at All Leading Outlets in South India
Also Available on amazon



# கல்லூரிகளுக்கு இடையேயான மாநில ஆக்கி போட்டி

## திருச்சியில் தொடங்கியது

திருச்சி, செப்.2–

கல்லூரிகளுக்கு இடையேயான மாநில ஆக்கி போட்டி திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் நேற்று காலை தொடங்கியது.

நாக் அவுட் முறையில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் சென்னை, மதுரை, திருச்சி, திண்டுக்கல், கடலூர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 14 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் கலந்து கொண்டன. முதல் ஆட்டத்தில் காரைக்குடி அழகப்பா உடற்கல்வியியல் கல்லூரியும் திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரி அணியும் மோதின. இதில் 2–1 என்ற கோல் கணக்கில் காரைக்குடி அழகப்பா உடற்கல்வியியல் கல்லூரி வெற்றி பெற்றது. மதுரை அருளானந்தர் கல்லூரியும் ராமநாதபுரம் சையதுஅம்மாள் கலைஅறிவியல் கல்லூரியும் மோதின. இதில் 3–2 என்ற கோல் கணக்கில் அருளானந்தர் கல்லூரி வெற்றி பெற்றது. கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரியும் ராசிபுரம் முத்தையம்மாள் கல்லூரியும் மோதின. இதில் 3–0 என்ற கணக்கில் மாருதி உடற்கல்வியியல் கல்லூரி வெற்றி பெற்றது. திருப்பத்தூர் தூய இருதய கல்லூரியும் ஜமால்முகமது கல்லூரி 'பி' அணியும் மோதின. இதில் 2–1 என்ற கோல் கணக்கில் தூய இருதய கல்லூரி வெற்றி பெற்றது. தொடர்ந்து போட்டிகள் நடைபெற்று வருகிறது. பரிசளிப்பு விழா நாளை (செவ்வாய்கிழமை) மாலை நடக்கிறது.

---

புரோ கபடி:

## தமிழ் தலைவாஸ் அணியின்

REGD. No. TRY/058/2018-2020 ★★★★
இண்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com
- தினத்தந்தி, உயிர்த்துடிப்பு உள்ள நாளிதழ் -
தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
திருச்சி (3-9-2019) செவ்வாய்க்கிழமை
மலர் 77 இதழ் 305
விகாரி ஆவணி 17 உ
ஹிஜிரி 1441 முகரம் 3
அருள்தரும் ஆன்மிகம்
20 பக்கம் 500 காசு

SRI VIJAYAA TOUGHENED GLASS PVT LTD.,
Email : svtg@yahoo.com | www.vijayaatuff.com
NIJ
நியூ லெக்ஷ்மி ஜுவல்லரி



கல்லூரிகளுக்கு இடையிலான மாநில அளவிலான ஆக்கி போட்டியில் இரு அணிகள் விளையாடியதை படத்தில் காணலாம்.

### கல்லூரிகளுக்கு இடையேயான ஆக்கி போட்டி

# திருச்சி, கோவை, திண்டுக்கல், மதுரை அணிகள் அரையிறுதிக்கு தகுதி

திருச்சி, செப்.3-

கல்லூரிகளுக்கு இடையேயான ஆக்கி போட்டியில் திருச்சி, கோவை, திண்டுக்கல், மதுரையை சேர்ந்த கல்லூரி அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

## மாநில ஆக்கி போட்டி

கல்லூரிகளுக்கு இடையேயான மாநில ஆக்கி போட்டி திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் நேற்று முன்தினம் காலை தொடங்கியது. நாக் அவுட் முறையில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் சென்னை, மதுரை, திருச்சி, திண்டுக்கல், கடலூர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 14 கல்லூரிகளை ்ந்த அணிகள் கலந்து கொண்டு மோதின.

இதில் மதுரை அமெரிக்கன் கல்லூரி 3-0 என்ற கோல் கணக்கில் சென்னை ஆவடியில் உள்ள நாசரேத் கலை அறிவியல் கல்லூரியை வென்றது. திருச்சி ஜமால்முகமது கல்லூரி 6-0 என்ற கோல் கணக்கில் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி பாரதிதாசன் தொழில்நுட்ப கழக அணியை வென்றது.

## திருச்சி, கோவை அணிகள்

கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரி 3-1என்ற கோல் கணக்கில் மதுரை கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியை வென்றது. திண்டுக்கல் ஜி.டி.என்.கலைக்கல்லூரி 4-0 என்ற கணக்கில் திருப்பத்தூர் தூய இருதய கல்லூரியை வென்றது. மதுரை, அமெரிக்கன் கல்லூரி 3-1 என்ற கோல் கணக்கில் காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரியை வென்றது.

இதன் மூலம் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, திண்டுக்கல் ஜி.டி.என். கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகிய 4 அணிகள் அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றன. இன்று (செவ்வாய்க்கிழமை) காலை அரையிறுதி போட்டிகளும், மாலையில் இறுதி போட்டியும், அதனை தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் நடக்கிறது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
செவ்வாய்க்கிழமை
3 செப்டம்பர் 2019
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

## காஜாமியான் சுழற்கோப்பை ஹாக்கி

# அரையிறுதியில் திருச்சி, மதுரை, கோவை, திண்டுக்கல் அணிகள்



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டியை தொடக்கி வைத்து வீரர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கிறார் கல்லூரிப் பொருளாளர் ஜமால் முகமது. உடன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள்.

**திருச்சி, செப். 2:** திருச்சியில் காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கிபோட்டி தொடங்கியது.

ஜமால் முகமது கல்லூரியின் உடற்கல்வி துறைசார்பில் 19-ஆம் ஆண்டு கல்லூரிகளுக்கு இடையிலான காஜாமியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டி நாக் அவுட் முறையில் மூன்று நாள் நடைபெறுகிறது. 13 கல்லூரி அணிகள் பங்கேற்கும் இப்போட்டிகளின் தொடக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி இயக்குநர் கே.என். அப்துல் காதர் நிஹால், முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வித்துறை இயக்குநர் பி. எஸ். ஷாயின்ஷா ஆகியோர் முன்னிலையில், கல்லூரிப் பொருளாளர் எம். ஜே. ஜமால் முகமது, போட்டிகளைதொடக்கிவைத்து வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். முதல்நாள் போட்டியில், காரைக்குடி அழகப்பா பல் கலை. உடற்கல்வியியல் கல்லூரி, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது. மதுரை கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரி, ராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 3-2 என்ற கோல் கணக்கில் வென்றது. கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றது. திருப்பத்தூர் தூய இருதயக் கல்லூரி, திருச்சி, ஜமால் முகமது கல்லூரி 'பி'யை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது. மதுரை அமெரிக்கன் கல்லூரி, சென்னை ஆவடி, நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி 3-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இரண்டாம் நாளான திங்கள் கிழமை நடைபெற்ற போட்டியில், திருச்சி ஜமால் முகமது கல்லூரி, பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி பாரதிதாசன் தொழில் நுட்பக் கழக திருச்சி வளாக அணியை 6-0 என்ற கோல் கணக்கில் வென்றது. கோவை, மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, மதுரை கருமாத்தூ, அருளானந்தர் கல்லூரியை 3-1 கோல் கணக்கில் வென்றது. திண்டுக்கல் ஜி.டி.என். கலை கல்லூரி, திருப்பத்தூர் தூய இருதயக் கல்லூரியை 4-0 என்ற கோல் கணக்கில் வென்றது. மதுரை அமெரிக்கன் கல்லூரி, காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கோவை மாருதி உடற்கல்வியியல் கல்லூரி, திண்டுக்கல் ஜி.டி.என். கலை அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகிய 4 கல்லூரி அணிகள் அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

செவ்வாய்க்கிழமை காலை அரை இறுதிப் போட்டிகள் மற்றும் மாலை 4 மணிக்கு இறுதிப் போட்டி, தொடர்ந்து பரிசளிப்பு விழா நடைபெறுகிறது.

சென்னை
மதுரை
கோவை
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புதுதில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

வியாழக்கிழமை
29 ஆகஸ்ட் 2019
திருச்சி
14 பக்கங்கள் ரூ.7

## பாரதிதாசன் பல்கலைக்கழகப் பூப்பந்து

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதலிடம்

**பொன்னமராவதி, ஆக. 28:** பொன்னமராவதி அருகிலுள்ள மேலைச்சிவபுரி கணேசர் கல்லூரியில் நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான ஆண்கள் பூப்பந்தாட்டப் போட்டியில், திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியினர் முதலிடம் பெற்றனர்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையேயான ஆண்கள் பூப்பந்தாட்டப் போட்டி மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

போட்டிக்கு, கல்லூரிக்குழு தலைவர் சி. நாகப்பன் தலைமை வகித்தார். போட்டியில், திருச்சி ஜமால் முகமது கல்லூரி, ஈ.வெ.ரா.கல்லூரி, பிஷப் ஹீபர் கல்லூரி, தூய வளனார் கல்லூரி, மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரி, பெரம்பலூர் ரோவர் கல்லூரி, மயிலாடுதுறை ஏவிசி கல்லூரி, புதுக்கோட்டை மன்னர் கல்லூரி மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக அணியினர் உள்ளிட்ட 11 அணியினர் பங்கேற்று விளையாடினர். போட்டியை மாநில நடுவர்கள் என். செந்தில்பாண்டியன், க. அன்புமணி, பி. திருலோகசுந்தர், அர்த்தரசு ஆகியோர் வழிநடத்தினர்.



ஆடவர் பூப்பந்துப் போட்டியில் முதலிடம் பெற்ற திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியினருக்கு கோப்பை வழங்குகிறார் பல்கலைக்கழக விளையாட்டுச் செயலர் அ.பழனிச்சாமி. உடன், மேலைச்சிவபுரி கணேசர் கல்லூரி முதல்வர் சிவ.சொர்ணம் உள்ளிட்டோர்.

முதலிடத்தை திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியினரும், இரண்டாம் இடத்தை திருச்சி தூய வளனார் கல்லூரி அணியினரும், மூன்றாம் இடத்தை மயிலாடுதுறை ஏவிசி கல்லூரி அணியினரும், நான்காம் இடத்தை திருச்சி ஈ.வெ.ரா. அரசு கல்லூரி அணியினரும் பெற்றனர்.

போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு பரிசு வழங்கும் விழா மேலைச்சிவபுரி கணேசர் கல்லூரி விளையாட்டுத் திடலில் புதன்கிழமை நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் சிவ.சொர்ணம் தலைமைவகித்தார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியரும், விளையாட்டு செயலருமான அ.பழனிச்சாமி பங்கேற்று வெற்றிபெற்ற அணியினருக்கு சான்றிதழ் மற்றும் கோப்பை வழங்கினார்.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
திருச்சி பதிப்பு • திங்கள், ஆகஸ்ட் 26, 2019
R.Dis.No.521/18 Vol 2 No.237
16 பக்கங்கள் ₹ 7

LAUNCHING OFFER
subscriptions.hindutamil.in SUBSCRIBE NOW
காமதேனு வார இதழை Courier மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
₹650 ₹910 அரையாண்டு சந்தா
www.kamadenu.in/print-subscription

பாரதிதாசன் பல்கலை. கல்லூரிகளுக்கிடையேயான

# பேட்மிண்டன் போட்டியில் 7-வது ஆண்டாக ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி

**திருச்சி**

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்ற கல்லூரிகளுக்கிடையே நடை பெற்ற மாணவர்களுக்கான பேட்மிண்டன் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியினர் 7-வது ஆண்டாக வெற்றி பெற்றனர்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளுக்கிடையேயான மாணவர்களுக்கான பேட்மிண்டன் மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டிகள் இரு தினங்கள் பிஷப் ஹீபர் கல்லூரியில் நடைபெற்றன.

பேட்மிண்டன் போட்டியில் 21 கல்லூரி அணிகள் பங்கேற்றன. இதில் இறுதிப் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி 2 -0 என்ற செட் கணக்கில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணியை வென்றது. பேட்மிண்டன் போட்டியில் முதலிடத்தை தொடர்ந்து 7-வது ஆண்டாக ஜமால் முகமது கல்லூரி தக்க வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான மாணவர்களுக்கான பேட்மிண்டன் போட்டியில் முதலிடம் பிடித்த திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியினர்.

மூன்றாமிடத்துக்கான போட்டியில் புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணி 2-0 என்ற செட் கணக்கில் நாகை இஜிஎஸ் பிள்ளை கல்லூரி அணியை வென்று மூன்றாமிடம் பெற்றது.

தொடர்ந்து 7-வது ஆண்டாக சாம்பியன் பட்டம் பெற்ற ஜமால் முகமது கல்லூரி அணியினரை கல்லூரிச் செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜே.ஜமால் முகமது, இணைச் செயலாளர் கே.அப்துல் சமது, முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வி இயக்குநர் பி.எஸ். ஷா இன் ஷா மற்றும் நிர்வாகிகள் பாராட்டினர்.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
திருச்சி பதிப்பு ● திங்கள், ஆகஸ்ட் 26, 2019
R.D.s.No.521/18 Vol.2 No.237
LAUNCHING OFFER
subscriptions.hindutamil.in SUBSCRIBE NOW
காமதேனு வார இதழை Courier மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
₹650 ₹940 அரையாண்டு சந்தா
www.kamadenu.in/print-subscription



▲ திருச்சி ஜமால் முகமது கல்லூரி தேர்வு மையத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாம் நிலை காவலருக்கான எழுத்து தேர்வில் பங்கேற்றோர். படம்: ஜி.ஞானவேல்முருகன்

## இரண்டாம் நிலை காவலர், தீயணைப்பு வீரர் பணிகளுக்கு

# 8 மாவட்டங்களில் 30,799 பேர் தேர்வு எழுதினர்

● 7,425 பேர் பங்கேற்கவில்லை

**திருச்சி**

காவலர் மற்றும் தீயணைப்பு வீரர் பணிக்கான எழுத்துத் தேர்வை திருச்சி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 30,799 பேர் எழுதினர். அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டவர்களில் 7,425 பேர் தேர்வு எழுதவில்லை.

இரண்டாம் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள், தீயணைப்பு வீரர்கள் பணியிடத்துக்கான எழுத்துத் தேர்வு மாநிலம் முழுவதும் நேற்று நடைபெற்றது. திருச்சி மாவட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா கல்லூரி, தேசியக் கல்லூரி, சாரநாதன் பொறியியல் கல்லூரி, ஜமால் முகமது கல்லூரி உட்பட 9 மையங்களில் நடைபெற்ற எழுத்துத் தேர்வில் பங்கேற்க 10,615 பேருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இவர்களில் 8,751 பேர் தேர்வு எழுதினர். 1,864 பேர் வரவில்லை. தேர்வு மையங்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தேர்வை மாநகர காவல் ஆணையர் அ.அமல்ராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் கண்காணித்தனர்.

இதேபோல, புதுக்கோட்டை மாவட்டத்தில் 5 மையங்களில் 4,803 பேரும், கரூர் மாவட்டத்தில் ஒரு மையத்தில் 2,436 பேரும், பெரம்பலூர் மாவட்டத்தில் 2 மையங்களில் 1,412 பேரும், அரியலூரில் 9 மையங்களில் 2,972 பேரும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 மையங்களில் 5,005 பேரும், திருவாரூர் மாவட்டத்தில் 3 மையங்களில் 2,404 பேரும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3 மையங்களில் 3,016 பேரும் தேர்வு எழுதினர். ஒட்டுமொத்தமாக திருச்சி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டிருந்த 38,224 பேரில் 30,799 பேர் தேர்வில் பங்கேற்றனர். 7,425 பேர் தேர்வு எழுதவில்லை. மத்திய மண்டலத்தில் நடைபெற்ற தேர்வு மையங்களை ஐ.ஜி வரதராஜு உள்ளிட்ட அதிகாரிகள் மேற்பார்வையிட்டனர்.

Prithvi
INNER WEARS
Bra | Slips | Panties
Uniform Shorts
Trichy: 98429 96951
Pudukottai: 94438 76550
Ariyalur: 97914 94224

-TPTC Edition-

# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

பட்டின் பாரம்பரியம்... 15%
தைலா Thaila
பட்டு • ரெடிமேட்ஸ் • பிளவுஸ்

திருச்சி • திங்கள் • ஆகஸ்ட் 26, 2019 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 69 • இதழ் 354

## விளையாட்டு செய்திகள்



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு இடையே நடந்த பேட்மின்டன் போட்டியில் முதலிடம் பிடித்த திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி.

# பேட்மின்டன் போட்டியில் முதலிடம்

திருச்சி, ஆக. 26-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்குஉட்பட்ட திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, பெரம்பலூர், அரியலூர், புதுகை, கரூர் ஆகிய 8 மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்கான பேட்மின்டன் மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டி நாக்-அவுட் முறையில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் நடந்தது.

21 கல்லூரி அணிகள் பங்கு பெற்ற பேட்மின்டன் இறுதி போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணியை 2-0என்ற செட் கணக்கில் வென்று முதலிடம் பிடித்து தொடர்ந்து 7ம் ஆண்டாக சாம்பியன் பட்டம் பெற்றது.

மூன்றாம் இடத்திற்கு நடந்த போட்டியில் புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலைமற்றும்அறிவியல் கல்லூரி அணி, நாகை இஜிஎஸ் பிள்ளைகலைமற்றும்அறிவியல் கல்லூரி அணியை 2 - 0 என்ற செட் கணக்கில்வென்றுமூன்றாம் இடம் பிடித்தது. முதலிடம் பிடித்த ஜமால் முகமது கல்லூரி கல்லூரி அணிமாணவர்களை கல்லூரி செயலாளர் காஜா நஜூமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வி இயக்குனர் பிஎஸ் ஷா இன் ஷா ஆகியோர் பாராட்டினர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

MONDAY, AUGUST 26, 2019

# THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
18 pages • ₹6.00



Arun Jaitley cremated at Nigambodh Ghat with state honours page 10



India lags behind in quality of economic data reporting in 2018 page 11



Rahane, Vihari help India pull away in opening Test page 16

Stokes' brilliant knock takes England to sensational win page 18



PRINTED AT • CHENNAI • COIMBATORE • BENGALURU • HYDERABAD • MADURAI • NOIDA • VISAKHAPATNAM • THIRUVANANTHAPURAM • KOCHI • VIJAYAWADA • MANGALURU • TIRUCHIRAPALLI • KOLKATA • HUBBALLI • MOHALI • MALAPPURAM • MUMBAI • TIRUPATI • LUCKNOW • CUTTACK • PATNA

## TAMIL NADU ROUND-UP

### Jamal Mohamed wins

**TIRUCHI:** Jamal Mohamed College defeated JJ CAS 3-0 to win the men's title in the Bharathidasan University inter-collegiate table tennis tournament here recently.

**The results (final):** Jamal Mohamed bt JJ CAS 3-0 (A. Vengadesh bt A. Riyas Ahamed 11-5, 11-8, 11-5; B. Murali Manohar bt P. Prakash 11-3, 11-7, 11-9; S. Vignesh bt V. Ajith Kumar 11-2, 11-4, 11-5). **Third place:** Thanthai Hans Roever bt H.H. The Rajah's 3-2 (S. Vineeth bt A. Senbagaraj 11-2, 11-5, 11-5; A. Periyasami lost to M. Vijay 11-13, 9-11, 8-11; E. Prabakaran lost to K. Karan 5-11, 12-10, 9-11, 8-11; Vineeth bt M. Vijay 9-11, 11-7, 11-7, 12-10; A. Periyasami bt Senbagaraj 11-5, 11-8, 11-6).



**The best:** The victorious Jamal Mohamed College table tennis team. ▪ SPECIAL ARRANGEMENT

## ENGAGEMENTS

**At Coimbatore**

**Cricket:** CDCA league entry knockout tourney, PSGIMS 'C', CIT, Sri Shakthi 'B' & PIE Tech (Pollachi) grounds, 9 a.m.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 TRICHY | TUESDAY, AUGUST 20, 2019 | 16 PAGES | METRO | PRICE ₹2.50 VOLUME 7, ISSUE 6

THE TIMES OF INDIA

INDIA'S LARGEST ENGLISH NEWSPAPER

TIMESOFINDIA.COM | EPAPER.TIMESOFINDIA.COM



# Jamal Mohammed College conducts sports meet

The physical education department of Jamal Mohamed College conducted its 18th annual sports meet for women on August 1. A total of 4,000 women participated in 15 events. Free demonstrations on Yoga, Karate and Silambam were conducted. Blue house won the overall champions trophy in the team event while first year BBA student J Thejasvani bagged the individual champion award. Principal S Ismail Mohideen and deputy police commissioner N S Nisha, law and order, Trichy, distributed medals and certificates. College secretary and correspondent A K Khaja Nazeemudeen, treasurer M J Jamal Mohamed, assistant secretary K Abdus Samad, self-finance director, K N Abdul Khadar Nihal, men and women hostel directors Mohamed Fazil, Hazera Fathima were present. College physical director B S Sha in Sha presented annual sports report. College additional vice principal M Mohamed Sihabudeen proposed the vote-of-thanks.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
ஞாயிற்றுக்கிழமை
18 ஆகஸ்ட் 2019
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர்களுக்கு விருது




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழாவில், தஞ்சாவூர் அய்யம்பேட்டை அஞ்சுமன் அறிவக நிறுவனர் டி.எம். ஜபருல்லாஹ்க்கு ஜமாலியன் விருது வழங்குகிறார் கல்லூரி தாளாளர்ஏ.கே. காஜா நஜிமுதீன். உடன் (இடமிருந்து) கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில், துணைச் செயலர் கே. அப்துஸ் சமது, கல்லூரித் தலைவர் ஜமால் முகமது பிலால், பொருளாளர் ஜமால்முகமது, நிர்வாகக் குழு உறுப்பினர் ரஹமத்துல்லாஹ்.

**திருச்சி, ஆக.17:** ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா, விருது வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி முதல்வர்எஸ்.இஸ்மாயில்முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரித் தலைவர் எம்.ஜே. ஜமால் முகமது, தாளானர் ஏ.கே. காஜா நஜிமுதீன், துணைச் செயலர் கே. அப்துஸ் சமது, நிர்வாகக் குழு உறுப்பினர் ரஹமத்துல்லாஹ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், கல்லூரியின் முன்னாள் மாணவரும், புதுதில்லியைச் சேர்ந்த முதுநிலை தணிக்கையாளருமான பி. ஆறுமுகம் சிறப்புரையாற்றினார்.

விழாவில், தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை அஞ்சுமன் அறிவக நிறுவனர் டி.எம். ஜபருல்லாஹ், மலேசியா பினாங்கு இமான் சொசைட்டி தலைவர் எம். அமீர் அலி ஆகியோருக்கு கல்லூரியின் உயரிய விருதான ஜமாலியன் விருது வழங்கப்பட்டது. மேலும், இக் கல்லூரியில் பயின்று சமுதாயத்தில் வெற்றியாளராகசிறந்து விளங்கும் 21 முன்னாள் மாணவர்களுக்குசிறந்த முன்னாள் மாணவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. விழாவில், கூடுதல் துணை முதல்வர் எம். முகமது சிஹாபுதீன், கல்லூரி இயக்குநர் அப்துல் காதர், விடுதி இயக்குநர்கள் முகமது பாசில், முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் விருதுக்கு தேர்வானவர்களையும், அவர்களது சிறப்புகளையும் எடுத்துக் கூறி பாராட்டிப் பேசினர்.

கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க பொதுச் செயலர் ஆர். ஜாகிர் உசேன் வரவேற்றார். கல்லூரியின் துணை முதல்வர் முகமத இப்ராகிம் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை, கல்லூரி பேராசிரியர்கள், முன்னாள் மாணவர் சங்கத்தினர் செய்திருந்தனர்.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 TRICHY | MONDAY, AUGUST 19, 2019 | 16 PAGES | METRO | PRICE ₹2.50

THE TIMES OF INDIA

TIMESOFINDIA.COM | EPAPER.TIMESOFINDIA.COM

INDIA'S LARGEST ENGLISH NEWSPAPER

# 677 students get prizes for recycling waste at home

**Deepak.Karthik**
@timesgroup.com

**COMPETITION RESULT**

Pic: R Baskar

Number of students, **who received bicycle (first prize)** 200

Number of students, **who received wristwatch (second prize)** 224



Number of students, **who received dictionary (third prize)** 253

Total participants 7,979

Total number of schools 365

Total prizes 677

**Trichy:** Trichy Corporation on Sunday evening awarded prizes to 677 students from city schools here for efficiently recycling waste generated into manure in their houses.

A total of 7,979 students from 356 schools in 65 wards here participated in the contest-- 'Let us make a new beginning, let us practice home composting' -- conducted between July 1 and July 31, to promote the importance of solid waste management among school students.

The urban local body, through school managements, had distributed around 1.75 lakh report cards to houses with school-going children.

The report cards, apart from carrying the personal information of the student, had five questions.

The card includes a question about identifying whether the segregation of waste at source is happening at the house with school going children and whether home composting is practiced to process the biodegradable waste into manure in their house.

After a month-long exercise during which, the sanitary workers and officials on daily basis inferred their observations for the questions asked, the report cards were collected by school managements in the first week of August 2019.

Subsequently, senior sanitary officials, to identify the students, who efficiently practiced home composting measure, carried out door-to-door inspections to cross-check the inference made by sanitary workers in the report cards.

Based on the field inspections to ascertain the working of waste recycling mechanisms if installed by the school students, the civic body on Sunday awarded 200 bicycles each worth ₹5,500 to 200 students as the first prize.

Wristwatches and dictionaries were awarded to 224 and 253 students respectively as second and third prizes in the contest.

Meanwhile, under National Urban Livelihoods Mission (NULM) scheme, the corporation on Sunday inaugurated a shelter built at an estimated cost of ₹50 lakh for attenders of patients ailing at Trichy Mahatma Gandhi Memorial Government Medical College Hospital (MGMGH).

The facility has a separate dormitory for men and women visitors with each having a capacity to accommodate 25 people.

THE NEW
# INDIAN EXPRESS
TIRUCHY • MONDAY • AUGUST 19, 2019 • ₹6.00 • PAGES 30 • LATE CITY EDITION



READ SHARE FOLLOW
newindianexpress.com
facebook.com/thenewindianxpress twitter.com/newindianexpress
instagram.com/newindianexpress



*RED WEDDING IN KABUL AS SUICIDE BOMBER KILLS 63*

**Over 180 people were wounded after the attacker targeted a packed marriage hall in the Afghan capital late Saturday**

**LARGELY A GATHERING OF SHIAS**

Mirwais, the groom, recalled greeting smiling guests in the afternoon, before seeing their bodies being carried out hours later. "I lost my brother, I lost my friends. My bride is in shock. I will never be happy again," he told a local TV channel. The wedding was largely a gathering of Shia Muslims, AFP reported. They are often targeted in Sunni-majority Afghanistan

**ISIS CLAIMS RESPONSIBILITY**

- The Taliban, which is currently in talks with the US over an agreement to end 18 years of fighting, condemned the attack
- Islamic State claimed responsibility for the suicide bombing. But the "Taliban cannot absolve itself of blame, for it provides a platform for terrorists", Afghan President Ashraf Ghani said | P11

100th

**INDEPENDENCE DAY TO BE MARKED BY AFGHANISTAN ON MONDAY**

CHENNAI • MADURAI • VIJAYAWADA • BENGALURU • KOCHI • HYDERABAD • VISAKHAPATNAM • COIMBATORE • KOZHIKODE • THIRUVANANTHAPURAM • BELAGAVI • BHUBANESWAR • SHIVAMOGGA • MANGALURU • TIRUPATI • TIRUCHY • TIRUNELVELI • SAMBALPUR • HUBBALLI • DHARMAPURI • KOTTAYAM • KANNUR • VILLUPURAM • KOLLAM • WARANGAL • TADEPALLIGUDEM • NAGAPATTINAM • THRISSUR • KALABURAGI

# Pedalling to greener future: Winners of corpn's Home Composting Competition given bicycles

**EXPRESS NEWS SERVICE** @Tiruchy

THE corporation on Sunday distributed prizes to the winners of the ₹50-lakh home composting competition. Nearly 8,000 students participated in the competition which started on January 10. Bicycles worth ₹5,550 each were given to 200 students as first prize and wristwatches worth ₹1,500 each to 224 students as second prize. Dictionaries costing ₹750 each were given to 253 students who came third.

Though the corporation had initially planned to announce the results of the competition on February 28, it later extended it to July to increase participation of students."The students are the future of the city. We have reached out to 1.75 lakh students from 365 schools in city limits by creating awareness on home composting," said Corporation Commissioner N Ravichandran.



Ministers Vellamandi N Natarajan distributing prizes to winners at the function. S Valarmathi, Corporation Commissioner N Ravichandran, City Engineering S Amuthavalli and other officials are also seen | EXPRESS

He said this competition would continue for a year to encourage the students. "We have decided to continue this home composting competition and every week we will select the winners. This will increase students' participation. More students will get prizes and we always want to appreciate their efforts. We are trying to make Tiruchy a 'Clean City' for our future generations," added Ravichandran.

According to officials, students can establish any type of composting system in their homes to participate in the competition. "They can then send a photograph of it to our WhatsApp number - 8300113000. Our officials will inspect the home and check the home composting facility. Based on their reports, we will give bicycles, wristwatches or dictionaries to participants," said officials

Several students and teachers suggested the corporation should come up with more such initiatives. "We are glad the corporation is conducting several competitions for school students. We hope it will come up with more such competitions in the future," said K Jasmine, a Class 9 student who won a bicycle in the competition. "The students were showed so much interest in this competition. This kind of competition would bring them closer to officials and the corporation. This would also help in enhancing civic responsibility of our future citizens," said Geraldine Rani, a teacher of St Joseph's Anglo Indian Girls Higher Secondary School.

**'WE REACHED OUT TO 1.75 LAKH STUDENTS IN CITY'**

Though the corporation had initially planned to announce the results of the competition on February 28, it later extended it to July to increase participation of students."The students are the future of the city. We have reached out to 1.75 lakh students from 365 schools in city limits by creating awareness on home composting," said Corporation Commissioner N Ravichandran.

THE HINDU
MONDAY, AUGUST 19, 2019
TIRUCHIRAPALLI

18 killed in Himachal Pradesh rain, landslips; hundreds stranded page 7
Memos warn of food, drug shortages if UK leaves EU without deal page 12
Archer on the prowl again, but Australia survives in Lord's Test page 16

GENERAL LIBRARY, TIRCHY 19 AUG 2019




Students receive bicycles as prizes for securing first place in a competition conducted for home composting in Tiruchi on Sunday. ▪

# Tiruchi school students feted for practising home composting

## Month-long evaluation conducted

**STAFF REPORTER**
TIRUCHI

Tiruchi corporation distributed prizes to nearly 200 students for helping create awareness and practising composting at their homes.

The competition recognising efficacy, conducted for the second year, was meant to appreciate the work done by school students to segregate and compost waste.

The review for the competition began on July 1. Over 1.71 lakh report cards were distributed to school children and sanitary workers examined the home composting work at residences.

After a month-long evaluation, wherein the usage of the prepared compost was also judged, prizes were distributed based on the students' participation.

Vellamandi N. Natarajan, Minister for Tourism, and S. Valarmathi, Minister for Backward Classes, took part in the ceremony and handed over the prizes.

### Prizes

Bicycles worth ₹5,500 each was handed out to 200 students for securing first place, 224 students received wristwatches worth ₹1,500 as second prize and 253 students received dictionaries as third prize.

REGD. No. TRY/066/2018-2020 ★★★★
இன்டர்நெட் முகவரி: www.dailythanthi.com
- இந்திய நாளிதழ்களில் முதல் இடம் வகிக்கும் தமிழ் நாளிதழ் - தினத்தந்தி -
தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
திருச்சி (19-8-2019) திங்கட்கிழமை | மலர் 77 இதழ் 290
விகாரி ஆவணி மீ 2 உ ஹிஜ்ரி 1440 துல்ஹஜ் 17
22 பக்கம் 500 காசு



விழாவில் அமைச்சர்கள் வெல்லமண்டி நடராஜன், வளர்மதி ஆகியோர் ஒரு மாணவிக்கு சைக்கிள் வழங்கிய போது எடுத்த படம். அருகில் மாநகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

## அரியமங்கலம் குப்பை கிடங்கு

# இந்தியாவிலேயே பெரிய பூங்காவாக விரைவில் மாற்றப்படும்

## அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் பேச்சு

திருச்சி, ஆக.19-

அரியமங்கலம் குப்பை கிடங்கு இந்தியாவிலேயே பெரிய பூங்காவாக விரைவில் மாற்றப்படும் என்று அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் பேசினார்.

### பரிசளிப்பு விழா

திருச்சி மாநகராட்சி சார்பில் இனி ஒரு விதி செய்வோம், இல்லந்தோறும் உரம் செய்வோம் என்ற திட்டம் கடந்த ஜூலை மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் திருச்சி நகரில் உள்ள 365 பள்ளிகளை சேர்ந்த மாணவ - மாணவிகள் பங்கேற்றனர். 7,979 மாணவ- மாணவிகள் நேரடியாக பங்கேற்று வீடுகளில் விஞ்ஞான முறையில் உரம் தயாரிக்க பெற்றோருக்கு உதவினர். இவர்களில் முதல் பரிசான தலா ரூ.5 ஆயிரத்து 500 மதிப்புள்ள சைக்கிள்களை பெற 200 மாணவர்களும், இரண்டாம் பரிசான தலா ரூ.1,500 மதிப்புள்ள கைக்கடிகாரம் பெற 224 மாணவர்களும், 253 மாணவர்கள் தலா ரூ.750 மதிப்புள்ள ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியும் பெறுவதற்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நேற்று மாலை திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்தது. மாநகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். நகர பொறியாளர் அமுதவள்ளி வரவேற்று பேசினார். விழாவில் அமைச்சர்கள் வெல்லமண்டி நடராஜன், வளர்மதி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு மாணவ- மாணவிகளுக்கு சைக்கிள் உள்ளிட்ட பரிசுகளை வழங்கினார்கள்.

விழாவில் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் பேசியதாவது:-

### நடுநாயகமான நகரம்

திருச்சி தமிழகத்தின் நடுநாயகமான நகரம். அதனால் தான் இதனை தலைநகரமாக மாற்றுவதற்கு மறைந்த முன்னாள் முதல் -அமைச்சர் எம்.ஜி.ஆர். ஆசைப்பட்டார். கடந்த 15 ஆண்டுகளில் திருச்சி நகரம் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்கு காரணம் திருச்சி மாநகராட்சி எடுத்துள்ள நடவடிக்கைகள் தான். பழைய திருச்சியை நவீன திருச்சியாக மாற்றும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இரண்டாண்டுகளில் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பில் பொலிவுறு நகரம், பாதாள சாக்கடை இணைப்பு திட்டம், குடிநீர் திட்ட பணிகள் முடிக்கப்படும். பாதாள சாக்கடை பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்ததும் அனைத்து சாலைகளும் போடப்பட்டு திருச்சி மிக அழகான நகரமாக மாறும்.

அரியமங்கலம் குப்பை கிடங்கை பூங்காவாக மாற்றும் பணி நடந்து வருகிறது. விரைவில், இந்த பணி முடிவடைந்தால் சுமார் 50 ஏக்கரில் இந்தியாவிலேயே பெரிய பூங்காவாக அது விளங்கும். வெளிநாடுகளில் பார்த்து ரசிக்க வேண்டிய அனைத்து காட்சிகளையும் திருச்சியில் கண்டு களிக்க முடியும். மாநகராட்சியின் திட்டங்களுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

முடிவில் பொன்மலை கோட்ட உதவி ஆணையர் தயாநிதி நன்றி கூறினார். உதவி ஆணையர்(கணக்கு) திருஞானம் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இதனை தொடர்ந்து திருச்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளுக்கு உதவுவதற்காக வருபவர்கள் தங்குவதற்காக ரூ.50 லட்சத்தில் கட்டப்பட்ட விடுதி கட்டிடம், ஸ்ரீரங்கம் கோட்டம் பாபு சாலையில் ரூ.83 லட்சத்தில் உருவாக்கப்பட்ட பூங்கா, அகிலாண்டேஸ்வரி நகரில் ரூ.55 லட்சத்தில் அமைக்கப்பட்ட பூங்கா, எம்.ஜி.ஆர். சிலை ரவுண்டானாவில் அமைக்கப்பட்டுள்ள நீரூற்று ஆகியவற்றையும் அமைச்சர்கள் திறந்து வைத்தனர்.

LAUNCHING OFFER
subscriptions.hindutamil.in SUBSCRIBE NOW

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
திருச்சி பதிப்பு • திங்கள், ஆகஸ்ட் 19, 2019
R.Dis.No.521/18 Vol.2 No.230
அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி
https://www.hindutamil.in
16 பக்கங்கள் ₹ 7

காமதேனு வார இதழை தபால் மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
₹475 ₹630 அரையாண்டு சந்தா
www.kamadenu.in/print-subscription

## இல்லந்தோறும் உரம் செய்வோம் திட்டத்தில்

# தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பரிசளிப்பு

திருச்சி

திருச்சி மாநகராட்சியின் 'இனி ஒரு விதி செய்வோம்- இல்லந்தோறும் உரம் செய்வோம்' என்ற திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு நேற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

வீடுகளில் உருவாகும் மக்கும் குப்பையை வீட்டிலேயே உரமாக்கும் இந்தத் திட்டத்தை மாநகராட்சி நிர்வாகம் 2019, ஜன.3-ம் தேதி தொடங்கியது. பள்ளி மாணவ, மாணவிகள் மூலம் பெற்றோரையும் இணைந்து செயல்பட வைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். அதேவேளையில், இதில் மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோரை ஊக்குவிக்கும் வகையில், உரம் தயாரிக்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவோருக்கு பரிசுகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.




▲ திருச்சியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இல்லந்தோறும் உரம் செய்வோம் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஒரு மாணவிக்கு சைக்கிளை பரிசாக வழங்கும் அமைச்சர்கள் என்.நடராஜன், எஸ்.வளர்மதி. உடன், ஆணையர் என்.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர்.

முதல் பரிசாக 200 பேருக்கு தலா ரூ.5,500 மதிப்பிலான சைக்கிள், 2-வது பரிசாக 224 பேருக்கு தலா ரூ.1,500 மதிப்பிலான கைக் கடிகாரம், 3-வது பரிசாக 253 பேருக்கு ஆக்ஸ்போர்டு டிக்ஸ்னரி ஆகியவை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, மாநகர எல்லைக் குள் உள்ள 365 பள்ளிகளில் பயிலும் 1.75 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ' அவர்களில், தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி ஜமால் முகம்மது கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாநகராட்சி ஆணையர் என்.ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். நகரப் பொறியாளர் எஸ்.அமுதவல்லி முன்னிலை வகித்தார்.

மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் என்.நடராஜன், பிற்படுத் தப்பட்டோர்- சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் எஸ்.வளர்மதி ஆகியோர், மாணவ, மாணவிகள் சிலருக்கு பரிசுகளை வழங்கினர். மீதியுள்ள மாணவ, மாணவிகளுக்கான பரிசுகள் அந்தந்தப் பள்ளிகள் மூலம் வழங்கப்பட உள்ளன. நிகழ்ச்சியில், மாநகராட்சி செயற்பொறியாளர் பி.சிவபாதம், உதவி ஆணையர் கள் எம்.தயாநிதி, எஸ்.திரு ஞானம், சி.பிரபாகரன், எஸ். வைத்தியநாதன், ரா.திருஞானம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS) 19 AUG 2019 GENERAL LIBRARY TRICHY

திருச்சி • திங்கள் • ஆகஸ்ட் 19, 2019 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் • 18 பக்கம் • 600 காசு • மலர் 68 • இதழ் 347

# இல்லந்தோறும் உரம் செய்வோம் போட்டி

## வென்றவர்களுக்கு சைக்கிள்

திருச்சி, ஆக. 19-

திருச்சி மாநகராட்சி சார்பில், வீடுகளில் உருவாகும் குப்பைகளை வீடுகளிலேயே உரமாக்கும்திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட, 'இனி ஒரு விதி செய்வோம் -இல்லந்தோறும் உரம் செய்வோம்' போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா ஜமால் முகமது கல்லூரியில் நேற்று நடந்தது. விழாவுக்கு மாநகராட்சி கமிஷனர் ரவிச்சந்திரன்தலைமை வகித்தார்.

போட்டியில், முதல் பரிசு பெற்ற 200 மாணவர்களுக்குதலாரூ.5ஆயிரத்து 500 மதிப்புள்ள சைக்கிள்களைஅமைச்சர்நடராஜன் வழங்கிப் பேசுகையில், சாலைகள், பூங்காக்கள், செயற்கை நீரூற்றுகள் கொண்ட அழகிய நகரமாக்கும் பணியை திருச்சி மாநகராட்சி மேற்கொண்டு வருகிறது. ரூ. 650 கோடியில் பாதாள சாக்கடை பணி, ரூ.ஆயிரம் கோடியில் ஸ்மார்ட் சிட்டி திட்டப்பணிகள், ரூ.63 கோடியில் குடிநீர் திட்டப்பணிகள் என பல்வேறு பணிகள் மாநகரில் நடந்து வருகிறது. அரியமங்கலம் குப்பை கிடங்கை 'பயோமைனிங்' திட்டத்தில் அகற்றும் பணி நடந்து வருகிறது. அங்கு இந்தியாவிலேயே மிகப்பெரிய பூங்கா அமைக்கப்பட உள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு நாம் வாழும் காலம் மாநகரின் பொற்காலம் என்ற நிலை உருவாகும்'', என்றார்.

அமைச்சர் வளர்மதி பேசுகையில், தமிழக அளவில் திருச்சி மாநகராட்சி முதன்மையான மாநகராட்சியாக திகழ்கிறது. திட்டங்கள், வசதிகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குப்பையில்லா மாநகராட்சியாக திகழ செயல்படுத்தப்படும் முன்னோடி திட்டங்களுக்கு மாநகர மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும், என்றார்.

மாநகராட்சி கமிஷனர் ரவிச்சந்திரன் பேசுகையில், பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட, 'இனிஒருவிதிசெய்வோம் - இல்லந்தோறும் உரம் செய்வோம்' என்ற இப்போட்டியில் 7 ஆயிரத்து 979 மாணவர்கள் நேரடியாக பங்கேற்றனர். இதில், சிறப்பாக திட்டத்தை செயல்படுத்திய மாணவர்களில், முதல் பரிசுக்கு 200 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ரூ.5 ஆயிரத்து 500 மதிப்புள்ள சைக்கிள்கள் இன்று பரிசாக வழங்கப்படுகின்றன. 2ம் பரிசாக 224 மாணவர்களுக்கு ரூ.ஆயிரத்து 500 மதிப்புள்ள வாட்ச், 3ம் பரிசாக 253 பேருக்கு ரூ.750 மதிப்புள்ள டிக்ஸ்னரிகள் அவரவர் பள்ளிகள் மூலம் வழங்கப்படும். இந்த பரிசுகளுக்கான ரூ.50 லட்சத்தை லட்சுமி விலாஸ் வங்கி, சிட்டி யூனியன் வங்கி, கனரா வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கிகள் தங்களது சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளன.

வரும் நாட்களில், வீடுகளில் உரமாக்கும் அமைப்பை அமைத்து அதனை மாநகராட்சிக்கு செல்பி எடுத்து அனுப்பும் மாணவர்களிலிருந்து, வாரம் 3 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு சைக்கிள்கள் பரிசாக வழங்கப்படும் என்றார்.

நகரப் பொறியாளர் அமுதவள்ளி வரவேற்றார். உதவி கமிஷனர் தயாநிதி நன்றி கூறினார்.



திருச்சி மாநகராட்சி சார்பில், பள்ளி மாணவ, மாணவிகளுக்காக நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சைக்கிள்களை அமைச்சர்கள் வெல்லமண்டி நடராஜன், வளர்மதி ஆகியோர் வழங்கினர். அருகில், மாநகராட்சி கமிஷனர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர்.

MOHAMAD IDRIS BROS.
KIBS
கிப்ஸ்
HANDLOOM TEXTILES
கிப்ஸ்
■ லுங்கிகள் ■ பனியன்கள்
■ ஜட்டிகள் ■ கைக்குட்டைகள்
தயாரித்து விநியோகிப்பவர்கள்:
முகமது இத்ரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
044 - 2522 1371 / 2522 1372 / 2522 1373

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

100
999
LUNGIES
Shop Online @ www.999lungies.com | Trade Enquiry: +91 89399 97475
அனைத்து முன்னணி கடைகளிலும் கிடைக்கும்



## திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சி கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா




திருச்சி, ஆக.17-

திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சிக் கல்லூரியின் முன்னாள் மாணவ-மாணவியர் சந்திப்பு விழா (15.08.2019 - வியாழக்கிழமை) கல்லூரியின் தலைவர் எம்.ஜே. ஜமால் முஹம்மது பிலால், தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது மற்றும் துணைச்செயலாளர் முனைவர். கே. அப்துஸ் சமது, நிர;வாகக்குழு உறுப்பினர் ஹாஜி. ரஹமத்துல்லாஹ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக முன்னாள் மாணவர்களான, புது டெல்லியை சேர்ந்த முன்னாள் முதுநிலை தணிக்கையாளர் பி. ஆறுமுகம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இதில், தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை அஞ்சுமன் அறிவக நிறுவனர் அல்ஹாஜ். டிஎம். ஜபருல்லாஹ் மற்றும் மலேஷியா பெனாங் இமான் சொஸைட்டி தலைவர் எம். அமீர்அலி ஆகியோருக்கு "ஜமாலியன் விருது" வழங்கப்பட்டது. மேலும், இக்கல்லூரியில் பயின்று சமுதாயத்தில் வெற்றியாளர் களாக சிறந்து விளங்கிவரும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தலைசிறந்த 21 முன்னாள் மாணவர் களுக்கு, ஜமால் முஹம்மது கல்லூரியின் உயரிய விருதான, "சிறந்த முன்னாள் மாணவர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது. விழாவில், கூடுதல் துணை முதல்வர் முனைவர் எம். முஹம்மது சிஹாபுதீன், கல்லூரி இயக்குநர் முனைவர் அப்துல் காதர்நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது ஃபாசில், ஜனாப். முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்டோர் விருது பெறுவோரை அறிமுகம் செய்து வைத்தனர் முன்னதாக, கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க பொதுச்செயலாளர் முனைவர். ஆர் ஜாகிர்உசேன் அனைவரையும் வரவேற்றார் நிறைவாக கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் முகமது இப்ராஹிம் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி பேராசிரியர்கள் முன்னாள்-இந்நாள் மாணவ-மாணவியர் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
திருச்சி பதிப்பு • சனி, ஆகஸ்ட் 17, 2019
R.Dis.No.321/18 Vol.2 No.228
• சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி •
https://www.hindutamil.in
• 20 பக்கங்கள் ₹ 7

LAUNCHING OFFER
60% OFF
subscription.hindutamil.in SUBSCRIBE NOW

காமதேனு வார இதழை தபால் மூலம் சிறப்புச் சந்தா விலையில் பெற
₹475 ₹650 அரையாண்டு சந்தா
www.kamadenu.in/print-subscription




▶▶ ஜமால் முகமது கல்லூரியில் நேற்று நடைபெற்ற விழாவில், அய்யம்பேட்டை அஞ்சுமன் அறிவக நிறுவனர் டி.எம்.ஜபருல்லாவுக்கு ஜமாலியன் விருதை வழங்குகிறார் கல்லூரி செயலாளர் ஏ.கே.காஜா நஜிமுத்தீன். உடன், கல்லூரி நிர்வாகிகள்.

# ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

■ திருச்சி

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரி தலைவர் எம்.ஜே.ஜமால் முகமது பிலால், செயலாளர் ஏ.கே.காஜா நஜிமுத்தீன், பொருளாளர் எம்.ஜே.ஜமால் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் மாணவரும், முன்னாள் முதுநிலை தணிக்கையாளருமான பி.ஆறுமுகம் பங்கேற்று பேசினார்.

விழாவில், தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை அஞ்சுமன் அறிவக நிறுவனர் டி.எம்.ஜபருல்லா, மலேசியா பினாங்கு இமான் சொசைட்டி தலைவர் எம்.அமீர் அலி ஆகியோருக்கு 'ஜமாலியன் விருது' வழங்கப்பட்டது. மேலும், தற்போது பல்வேறு துறைகளில் வெற்றியாளர்களாக உள்ள இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் 21 பேருக்கு கல்லூரியின் சார்பில் சிறந்த முன்னாள் மாணவர் விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில், கல்லூரி துணைச் செயலாளர் கே.அப்துல் சமது, நிர்வாகக் குழு உறுப்பினர் ரகமத்துல்லா, கூடுதல் துணை முதல்வர் எம்.முகமது சிஹாபுதீன், கல்லூரி இயக்குநர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முகமது பாஃசில், முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, முன்னாள் மாணவர் சங்க பொதுச் செயலாளர் ஆர்.ஜாகிர் உசேன் வரவேற்றார். முடிவில், கல்லூரியின் துணை முதல்வர் முகமது இப்ராஹிம் நன்றி கூறினார்.

makkalkural tv

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 ★ 16.8.2019 வெள்ளி மாலை ★ வெளியூர் 17.8.2019 சனி ★ இதழ் 81)

Regd. No. TN/SR-21/18–20

ஸ்ரீ மீனாட்சி
கேட்டரர்ஸ்
சைவம் & அசைவம்
93452 13345, 82201 11500
84891 68816
காட்டுப்பிள்ளையார் கோவில் பின்புறம், நரிமேடு, மதுரை-2

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் முன்னாள் மாணவ மாணவியர் சந்திப்பு

திருச்சி, ஆக.16–

திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சிக் கல்லூரியின் முன்னாள் மாணவமாணவியர் சந்திப்பு விழா கல்லூரியின் தலைவர் எம்.ஜே. ஜமால் முஹம்மது பிலால், தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது மற்றும் துணை செயலாளர் கே.அப்துஸ் சமது, நிர்வாகக்குழு உறுப்பினர் ஹாஜி. ரஹமத்துல்லாஹ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன், தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு சிறப்புவிருந்தினராக முன்னாள் மாணவர்களான, புதுதில்லியை சேர்ந்த முன்னாள் முதுநிலை தணிக்கையாளர் திரு. பி. ஆறுமுகம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இதில், தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை அஞ்சுமன் அறிவக நிறுவனர் அல்ஹாஜ், டி.எம். ஜபருல்லாஹ் மற்றும் மலேஷியா பெனாங் இமான் சொஸைட்டி தலைவர் எம். அமீர் அலி ஆகியோருக்கு "ஜமாலியன் விருது" வழங்கப்பட்டது.




மேலும், இக்கல்லூரியில் பயின்று சமுதாயத்தில் வெற்றியாளர்களாக சிறந்து விளங்கிவரும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தலைசிறந்த 21 முன்னாள் மாணவர்களுக்கு, ஜமால் முஹம்மது கல்லூரியின் உயரிய விருதான, "சிறந்த முன்னாள் மாணவர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விழாவில், கூடுதல் துணை முதல்வர் முனைவர் எம். முஹம்மது சிஹாபுதீன், கல்லூரி இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர். முஹம்மது பாஃசில், ஜனாப். முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்டோர் விருதுபெறுவோரை அறிமுகம் செய்து வைத்தனர்.

முன்னதாக கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க பொதுச்செயலாளர் முனைவர். ஆர். ஜாகிர் உசேன் அனைவரையும் வரவேற்றார். நிறைவாக கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் முகமது இப்ராஹிம் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி பேராசிரியர்கள் முன்னாள்இந்நாள் மாணவ மாணவியர் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.

THE NEW INDIAN EXPRESS

TIRUCHY • FRIDAY • AUGUST 09, 2019 • ₹6.00 • PAGES 20 • LATE CITY EDITION



READ SHARE FOLLOW

newindianexpress.com

facebook.com/thenewindianexpress twitter.com/newindianxpress

instagram.com/newindianexpress

*PRANAB GETS THE COUNTRY'S HIGHEST CIVILIAN AWARD*

**Late Jana Sangh leader Nanaji Deshmukh and late singer Bhupen Hazarika have also been conferred the Bharat Ratna**

**SONIA, RAHUL SKIP THE FUNCTION**

President Ram Nath Kovind gave the award to ex-president Pranab Mukherjee, Hazarika's son Tej and Vikramjeet Singh, a close relative of Deshmukh, on Thursday. While Prime Minister Narendra Modi was among those who attended the function, Congress leaders Sonia and Rahul Gandhi were not spotted. Sonia's distrust of Pranab is well known

**5TH PRESIDENT TO GET THE AWARD**

- The Bharat Ratna has been conferred after a gap of four years
- Former prime minister Atal Bihari Vajpayee and founder of Banaras Hindu University Madan Mohan Malviya were given the award by the Narendra Modi government in 2015
- Mukherjee is the fifth president to receive this award

January 25

THE ANNOUNCEMENT FOR BHARAT RATNA WAS MADE EARLY THIS YEAR

CHENNAI • MADURAI • VIJAYAWADA • BENGALURU • KOCHI • HYDERABAD • VISAKHAPATNAM • COIMBATORE • KOZHIKODE • THIRUVANANTHAPURAM • BELAGAVI • BHUBANESWAR • SHIVAMOGGA • MANGALURU • TIRUPATI • TIRUCHY • TIRUNELVELI • SAMBALPUR • HUBBALLI • DHARMAPURI • KOTTAYAM • KANNUR • VILLUPURAM • KOLLAM • WARANGAL • TADEPALLIGUDEM • NAGAPATTINAM • THRISSUR • KALABURAGI



# Annual sports meet

Jamal Mohamed College physical education department conducted 69th annual sports meet for women recently. Around 3,500 people participated in 18 events. Demonstrations on yoga, karate and silambam were also conducted. The college's Yellow house won the overall champions trophy.

THE NEW INDIAN EXPRESS
TIRUCHY • FRIDAY • AUGUST 09, 2019 • ₹6.00 • PAGES 20 • LATE CITY EDITION



READ SHARE FOLLOW
newindianexpress.com
facebook.com/thenewindianxpress twitter.com/newindianxpress
instagram.com/newindianexpress

*PRANAB GETS THE COUNTRY'S HIGHEST CIVILIAN AWARD*

**Late Jana Sangh leader Nanaji Deshmukh and late singer Bhupen Hazarika have also been conferred the Bharat Ratna**

**SONIA, RAHUL SKIP THE FUNCTION**

President Ram Nath Kovind gave the award to ex-president Pranab Mukherjee, Hazarika's son Tej and Vikramjeet Singh, a close relative of Deshmukh, on Thursday. While Prime Minister Narendra Modi was among those who attended the function, Congress leaders Sonia and Rahul Gandhi were not spotted. Sonia's distrust of Pranab is well known

**5TH PRESIDENT TO GET THE AWARD**

- The Bharat Ratna has been conferred after a gap of four years
- Former prime minister Atal Bihari Vajpayee and founder of Banaras Hindu University Madan Mohan Malviya were given the award by the Narendra Modi government in 2015
- Mukherjee is the fifth president to receive this award

January 25
THE ANNOUNCEMENT FOR BHARAT RATNA WAS MADE EARLY THIS YEAR




# World Breastfeeding Week

World Breastfeeding Week was observed by the PG and Research Department of Nutrition and Dietetics of Jamal Mohamed College. A guest lecture by T Jayanthi Dhinagaran, chief dietician, Meenakshi Hospital Thanjavur was delivered at the event.

-TPTC Edition-

# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

திருச்சி • செவ்வாய் • ஆகஸ்ட் 6, 2019

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

• 18 பக்கம் • 600 காசு • மலர் 68 • இதழ் 334

Poomex



திருச்சி ஜமால் முகமது கல்லூரி மாணவிகளுக்கான ஆண்டு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு போலீஸ் துணை கமிஷனர் நிஷா பரிசு வழங்கினார். அருகில் கல்லூரி செயலாளர் காஜா நஜூமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 | TRICHY | TUESDAY, AUGUST 6, 2019 | 14 PAGES | METRO | PRICE ₹2.50

THE TIMES OF INDIA

INDIA'S LARGEST ENGLISH NEWSPAPER

To advertise with us, call 1800 120 5474 | To order your copy, call 1800 1200 004 toll free or visit - subscribe.timesgroup.com

Home minister Amit Shah ji's speech accurately highlighted the monumental injustices of the past and coherently presented our vision for the sisters and brothers of J&K NARENDRA MODI | PM

We support the govt on its decisions on J&K. We hope this will bring peace and development in the state ARVIND KEJRIWAL | Delhi CM

Integration does not take place through legislation, it happens through the heart. India's crown has been chopped off. We went from Prime Minister to chief minister, now we're at Lt Governor GHULAM NABI AZAD | Leader of Oppn in RS

Total betrayal of the trust that the people of J&K had reposed in India when the state acceded to it in 1947. These decisions will have far-reaching and dangerous consequences OMAR ABDULLAH | Former J&K CM

Darkest day for Indian democracy. Decision of J&K leadership to reject 2-nation theory in 1947 & align with India has backfired. Unilateral decision of GOI will make India occupational force in J&K MEHBOOBA MUFTI | Ex-CM

# Annual sports meet held at Jamal Muhammed College

The 69th annual sports meet of Jamal Muhammed College was held on the campus recently. Yellow house won the overall championship at the meet while V I Kirubanandan bagged the individual champion award. South Asian games medalist F Nizar Basha distributed the medals and certificates to the winners of the meet. As many as 3500 men took part in the event. JMC principal S Ismail Mohideen, college secretary and correspindent A K Khaja Nazeemudeen, treasurer M J Jamal Mohamed, assistant secretary K Abdus Samad, self-finance director K N Abdul Khadar Nihal, men and women hostel directors Mohamed Fazil, Hazera Fathima were present. College physical director B S Sha presented annual sports report.



சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
ஞாயிற்றுக்கிழமை
4 ஆகஸ்ட் 2019
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

# மாணவிகளுக்கு பேக்கரி பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி

**திருச்சி, ஆக.3:** ஜமால் முகமது கல்லூரி ஊட்டச்சத்து மற்றும் உணவியல் துறை மாணவிகளுக்கு, பேக்கரி பொருள் தயாரிப்பு குறித்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

கல்லூரியின் முதுநிலை ஊட்டச்சத்து மற்றும் உணவியல் அறிவியல் ஆய்வுத் துறை சார்பில் நடைபெற்ற பயிற்சி வகுப்புக்கு, கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜ்முதீன் தலைமை வகித்தார். பொருளாளர் ஜமால் முகமது சாஹிப், உதவிச் செயலர் அப்துஸ் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராஹிம் ஆகியோர், பயிற்சி வகுப்பின் அவசியம் குறித்து விளக்கிப் பேசினர்.

பயிற்சி வகுப்பில், பேக்கரி பேஸ்கட் நிறுவனத்தின் தலைமை சமையலர் பி. முத்துவேல், சவூதி அரேபியாவைச் சேர்ந்த ஊட்டச்சத்து ஆராய்ச்சியாளர் ரியாத், குமுளூர் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சித் துறையின் பயிற்றுநர் அண்ணாதுரை ஆகியோர் பங்கேற்று, பல்வேறு பயிற்சிகளை அளித்தனர்.

பேக்கரி பொருள் வகைகள், அவற்றை தயாரிக்கும் முறைகள், பதப்படுத்துதல், தரம் கணக்கிடுதல் என பல்வேறு நிலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

கல்லூரியின் பிஎஸ்சி மூன்றாமாண்டு ஊட்டச்சத்து பிரிவில் பயிலும் மாணவிகள், முதலாமாண்டு உணவுப் பதப்படுத்துதல் துறை மாணவிகள் என 100-க்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்றனர். இதற்கான ஏற்பாடுகளை, துறைத் தலைவர் பாஷல் முகமது மற்றும் ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் செய்திருந்தனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வியாழக்கிழமை
1 ஆகஸ்ட் 2019
திருச்சி
16 பக்கங்கள் ரூ.7

# ஜமால் முகமது கல்லூரியில் 69ஆம் ஆண்டு விளையாட்டு விழா




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் முன்னாள் சர்வதேச தடகள வீரர் ஜி. நிஷார் பாஷா, கல்லூரிப் பொருளாளர் ஜமால் முகமது (இடமிருந்து 2, 3 ஆவது). உடன், கல்லூரி நிர்வாகிகள்.

**திருச்சி, ஜூலை 31:** ஜமால் முகமது கல்லூரியில் 69-ஆம் ஆண்டு விளையாட்டு விழா புதன்கிழமை நடைபெற்றது.

கல்லூரி உடற்கல்வித் துறை சார்பில், 18 பிரிவுகளின் கீழ் நடைபெற்ற போட்டியில் 3,500 மாணவர்கள் பங்கேற்றனர். மாணவர்களுடன் ஆசிரியர்களுக்கும் மற்றும் கல்லூரி அலுவலகப் பணியாளர்களுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டன. கராத்தே, யோகா, சிலம்பம் விளையாட்டுகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இப்போட்டிகளில், ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கல்லூரியின் மஞ்சள் நிற அணி பெற்றது. தனி நபர் சாம்பியன் பட்டத்தை வணிகவியல் முதலாமாண்டு மாணவர் வி.ஐ. கிருபானந்தன் பெற்றார்.

தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் வரவேற்புரை வழங்கினார். முன்னாள் மாணவரும்,1985-ஆம் ஆண்டு டாக்காவில் நடைபெற்ற இரண்டாவது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற முன்னாள் சர்வதேச தடகள வீரருமான ஜி. நிசார் பாஷா விழாவில் பங்கேற்று, பரிசுகளை வழங்கிப் பேசினார். கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது, இணைச்செயலர் கே. அப்துஸ்சமது, சுய நிதிப்பிரிவு இயக்குநர் கே.என். அப்துல்காதர் நிஹால், ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதி இயக்குநர்கள் கே.என். முகமது பாசில், ஜே. ஹாஜிரா பாத்திமா உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.

கல்லூரி உடற்கல்வி இயக்குநர் பி.எஸ். ஷாஇன்ஷா ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரி துணை முதல்வர் ஏ. இப்ராஹீம் நன்றி கூறினார்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

புதன்கிழமை
31 ஜூலை 2019
திருச்சி
18 பக்கங்கள் ரூ.7

குடிமைப்பணித் தேர்வு

# திட்டமிட்ட உழைப்பும், உத்வேகமும்தான் வெற்றிக்கு வழிவகுக்கும்

**திருச்சி, ஜூலை 30:** குடிமைப்பணிகளுக்கான போட்டித் தேர்வில் திட்டமிட்ட உழைப்பும், உத்வேகமும்தான் வெற்றிக்கு வழிவகுக்கும் என்றார் கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமி ஆலோசகர் எம்.பூமிநாதன்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி குடிமைப்பணித் தேர்வுகளுக்கான படிப்பு மையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊக்குவிப்பு நிகழ்வில் பங்கேற்று, மேலும் அவர் பேசியது:

குடிமைப்பணிகளுக்கான போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்றோர் அனைவரும் அதிக மதிப்பெண் பெற்றவர்கள் கிடையாது. 10, 12 -ஆம் வகுப்புகள் மற்றும் பட்டப்படிப்புகளில் குறைந்த மதிப்பெண் பெற்றவர்களும் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதை மாணவ, மாணவிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். திட்டமிட்ட உழைப்பும், வெற்றி பெறவேண்டும் என்ற உத்வேகமும்தான் இத்தேர்வில் வெற்றி பெற வழி வகுக்கும். உதாரணமாக, இந்த நிகழ்வில் பேசிய சித்ரா 60 சதவிகித மதிப்பெண்களுடன் ஐஏஎஸ் தேர்வில் 6-ஆவது முறையாக முயன்று வெற்றிபெற்றுள்ளார். அதேநேரம் ஒரே முயற்சியில் தேர்ச்சி பெற்றவர்களும் தமிழகத்தில் உள்ளனர். தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் உதவி ஆட்சியராக உள்ள இளைஞர் பிரகாஷ், முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று பணியில் சேர்ந்துள்ளார்.

22 வயது நிரம்பிய இளைஞர்களுக்கு ஒரு மாவட்ட நிர்வாகத்தையே கொடுக்கும் பெருமையான விஷயம் இந்திய நிர்வாகத்தில் உள்ளது என்பது இளைஞர்கள் பெருமைபடக்கூடிய விஷயமாகும். ஆனால் அண்மைக்காலங்களாக குடிமைப்பணித் தேர்வில், தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் தேர்ச்சி விகிதம் குறைந்து வருவதைக் காண முடிகிறது. இளைஞர்கள் வேறு வேலை வாய்ப்புகளைத் தேடிச் செல்வதால், இத்தேர்வுகளில் பங்கேற்போரின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி 4 தேர்வில் சுமார் 22 லட்சம் பேரும், தொகுதி 1-ல் சுமார் 2 லட்சம் பேரும் பங்கேற்கும் நிலையில், குடிமைப்பணிகள் தேர்வில் தமிழக இளைஞர்கள் சுமார் 15,000 பேர் விண்ணப்பித்து அதில் 5,000 பேர்தான் தேர்வெழுதுகின்றனர். நல்ல எதிர்காலத்தை தரும் இத்தேர்வில் அனைத்து தரப்பினரும் பங்கேற்பதன் மூலம், பிற தேர்வுகளை எளிதில் வெற்றி பெற முடியும் என்றார்.

நிகழ்வில், கிங்மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமி சிறப்பு ஆலோசகர் மற்றும் பயிற்சியாளரும், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியுமான விவேக் ஹரிநாராயணன், திருச்சி கிளை ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம், சென்னை கிங்மேக்கர்ஸ் அகாதெமியில் பயிற்சி பெற்று, அண்மையில் ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த சித்ரா தியாகராஜன், ஜமால் முகமது கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், கல்லூரிப் பொருளாளர் எம்.ஜே. ஜமால்முகமது, பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் மஸார் நாசிப்கான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் பேசுகிறார் கிங்மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமி ஆலோசகர் எம். பூமிநாதன். உடன் (இடமிருந்து) கல்லூரி குடிமைப்பணித் தேர்வுகளுக்கானப் பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் மஸார் நாசிப்கான், கிங்மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமி திருச்சி கிளை நிர்வாகி பன்னீர்செல்வம், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி விவேக் ஹரிநாராயணன், கல்லூரிப் பொருளாளர் ஜமால்முகமது உள்ளிட்டோர்.






உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18









# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் முன்னாள் விளையாட்டு வீரர்கள் ஒன்று கூடும் நிகழ்ச்சி




திருச்சி, ஜூலை. 30-

திருச்சிராப்பள்ளி ஜமால் முஹம்மது கல்லூரி உடற்கல்வித் துறை சார்பில், முன்னாள் விளையாட்டு வீரர்கள் ஒன்றுகூடும் நிகழ்ச்சி (28.07.2019 ஞாயிற்றுக்கிழமை) கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1955ஆம் ஆண்டிலிருந்து கல்வி பயின்ற முன்னாள் மாணவர்கள் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொண்டதும், தங்களது மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டதும் நிகழ்வில் நெகிழ்ச்சியான அம்சமாக அமைந்தது.

காவல்துறை உயரதிகாரிகள், காவல்துறை கண்காணிப்பாளர், ரயில்வே துறை அதிகாரிகள், தங்களது உயர்ந்த பதவிகளை பெறுவதற்கு ஜமால் முஹம்மது கல்லூரியில் விளையாட்டு துறையில் கோலோச்சியதே மிக முக்கிய காரணமாகும் என நன்றியோடு குறிப்பிட்டனர்.

குறிப்பாக, விருத்தாச்சலம் தொகுதி அதிமுக எம்எல்ஏ. விடி. கலைச்செல்வன் மற்றும் முன்னாள் ஆங்கிலத்துறை பேராசிரியர் பஞ்சநாதன் ஆகியோர் நலிவடைந்த மாணவர்களுக்கு உதவித் தொகையாக தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கி சிறப்பித்தனர்.

கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்ஜே. ஜமால் முஹம்மது, துணைச் செயலாளர் முனைவர் கே. அப்துஸ் சமது, இயக்குநர் மற்றும் நிதியாளுநரான முனைவர் அப்துல்காதர் நிஹால், விடுதி இயக்குநர் முனைவர் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் ஹாஜிரா பாத்திமா உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக, உடற்கல்வித் துறை இயக்குநர், முனைவர். பிஎஸ். ஷாயின்ஷா அனைவரையும் வரவேற்றார். மேலும், முன்னாள் மற்றும் இந்நாள் விளையாட்டு வீரர்களுக்கிடையேயான கால்பந்து மற்றும் கையுந்துப் பந்து போட்டிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னாள் மாணவர் சங்க பொதுச் செயலாளர் முனைவர் ஜாகிர்உசேன், உடற்கல்வித் துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள், பயிற்றுனர்கள், மாணவ-மாணவியர் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.

# தபால் துறை தேர்வை ஆங்கிலம், தமிழ் உள்ளிட்ட பிற மாநில மொழிகளில் எழுதலாம்

## உயர் நீதிமன்றத்தில், மத்திய அரசு தகவல்

சென்னை, ஜூலை. 30-

தபால் துறை தேர்வை ஆங்கிலம், தமிழ் உள்ளிட்ட பிற மாநில மொழிகளில் எழுதலாம் என உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

தபால்காரர், உதவியாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே எழுத்து தேர்வு நடத்தப்படும் என்று தபால்துறை அறிவித்தது.

இதன்படி தேர்வையும் நடத்தியது. இதற்கு தமிழக எம்பிக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்த தேர்வை பின்னர் மத்திய அரசு ரத்து செய்தது.

இதற்கிடையில், தபால் துறையில் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே தேர்வு நடத்தப்படும் என்ற உத்தரவை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் திமுக. எம்எல்ஏ. எழிலரசன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கிற்கு பதில் அளிக்க மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், உயர் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்மணிக்குமார், சுப்பிரமணியம் பிரசாத் ஆகியோர் முன்பு மத்திய அரசின் உதவி சொலிசிட்டர் ஜெனரல் கார்த்திகேயன் ஆஜராகி, 'தபால் துறை தேர்வை ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டும் எழுத வேண்டும் என்று கடந்த 11-ந் தேதி பிறப்பித்த உத்தரவு மட்டும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலம், தமிழ் உள்ளிட்ட பிற மாநில மொழிகளில் தேர்வு எழுதலாம் என்று கடந்த மே 10-ந் தேதி பிறப்பித்த உத்தரவு தொடர்ந்து பின்பற்றப்படும். இந்த வழக்கை செவ்வாய்க்கிழமை (இன்று) விசாரணைக்கு எடுத்து கொள்ள வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார். இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், இன்று (செவ்வாய்க்கிழமை) இந்த வழக்கை விசாரிப்பதாக உத்தரவிட்டனர்.

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

makkalkural tv

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 ★ 30.7.2019 செவ்வாய் மாலை ★ வெளியீடு 31.7.2019 புதன் ★ இதழ் 64)

Regd. No. TN/SR-21/18–20

ஸ்ரீ மீனாட்சி கேட்டரர்ஸ்
சைவம் & அசைவம்
93452 13345, 82201 11500
84891 68816
காட்டுப்பிள்ளையார் கோவில் பின்புறம், நரிமேடு, மதுரை-2

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் உடற்கல்வித் துறை சார்பில் முன்னாள் விளையாட்டு வீரர்கள் சந்திப்பு நிகழ்ச்சி

திருச்சி, ஜூலை.30–

**திருச்சிராப்பள்ளி ஜமால் முஹம்மது கல்லூரி உடற்கல்வித் துறை சார்பில் முன்னாள் விளையாட்டு வீரர்கள் ஒன்றுகூடும் நிகழ்ச்சி இன்று காலை (28.7.2019 ஞாயிற்றுக்கிழமை) கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது.**

கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 1955ஆம் ஆண்டிலிருந்து கல்வி பயின்ற முன்னாள் மாணவர்கள் ஒருவருக்கொருவர் சந்தித்துக்கொண்டதும் தங்களது மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டதும் நிகழ்வில் நெகிழ்ச்சியான அம்சமாக அமைந்தது. காவல்துறை உயரதிகாரிகள், காவல்துறை கண்காணிப்பாளர், ரயில்வே துறை அதிகாரிகள், தங்களது உயர்ந்த பதவிகளை பெறுவதற்கு ஜமால் முஹம்மது கல்லூரியில் விளையாட்டு துறையில் கோலோச்சியதே மிக முக்கிய காரணமாகும் என நன்றியோடு குறிப்பிட்டனர். குறிப்பாக விருத்தாச்சலம் தொகுதி அதிமுக எம்.எல்.ஏ. வி.டி. கலைச்செல்வன் அவர்கள், மற்றும் முன்னாள் ஆங்கிலத்துறை பேராசிரியர் பஞ்சநாதன் ஆகியோர் நலிவடைந்த மாணவர்களுக்கு உதவித்தொகையாக தலா ஒரு லட்ச ரூபாய் வழங்கி சிறப்பித்தனர்.

கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன் அவர்கள், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, துணைச்செயலாளர் முனைவர். கே. அப்துஸ் சமது, இயக்குநர் மற்றும் நிதியாளுநரான முனைவர் அப்துல்காதர் நிஹால், விடுதி இயக்குநர் முனைவர் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் ஹாஜிரா பாத்திமா, உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக, உடற்கல்வித் துறை இயக்குநர், முனைவர். பி.எஸ். ஷாயின்ஷா அனைவரையும் வரவேற்றார். மேலும், முன்னாள் மற்றும் இந்நாள் விளையாட்டு வீரர்களுக்கிடையேயான கால்பந்து மற்றும் கையுந்துப் பந்து போட்டிகள் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னாள் மாணவர் சங்க பொதுச்செயலாளர் முனைவர் ஜாகிர்உசேன், உடற்கல்வித் துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.




## முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி

திருநெல்வேலி மாவட்டம்

ந.க.எண்.59/2017 நாள்.25.07.2019

**திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் அபராதம்**

திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளிலும் பொதுமக்கள் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தக்கூடாது என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதோடு பல்வேறு தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. அதனால் பொதுமக்கள் பொது கழிப்பிடத்தையோ அல்லது தனிநபர் கழிப்பிடத்தையோ பயன்படுத்த வேண்டும். கழிப்பிடத்தை பயன்படுத்தாமல் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தி சிறுநீர் கழித்தால் ரூ.100/–ம் மலம் கழித்தால் ரூ.500/–ம் அபராதம் விதிக்கப்படுவதுடன் உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். தற்போது ஒவ்வொரு வார்டு கண்காணிக்கப்படுகிறது. எனவே பொது மக்கள் பேரூராட்சி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இதன் மூலம் அன்புடன் தெரிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி
முக்கூடல் 627601

Prithvi
INNER WEARS
Bra | Slips | Panties
Uniform Shorts
Trichy: 98429 94951
Pudhukottai: 94436 76559
Ariyalur: 97914 84224

-TPTC Edition-
தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

திருச்சியில்
மரா, ஸ்டீல் பர்னிச்சர்கள்
வாங்க ராசியான ஸ்தாபனம்
ராயல் பர்னிச்சர்
22, மதுரை ரோடு, திருச்சி – 8.
போன்: 2702225, 2700620.

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
29 JUL 2019

திருச்சி • திங்கள் • ஜூலை 29, 2019 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | 16 பக்கம் • 600 காசு • மலர் 68 • இதழ் 326



# தனியார் வேலைவாய்ப்பு முகாம்:5, 826 பேருக்கு நியமன ஆணை

திருச்சி, ஜூலை 29-

*திருச்சியில் நடந்த தனியார் வேலை வாய்ப்பு முகாமில் 5 ஆயிரத்து 826 பேருக்கு பணிக்கான உத்தரவை கலெக்டர் சிவராசு வழங்கினார்.*

திருச்சி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் சார்பில் படித்த இருபாலருக்கானதனியார்த்துறை வேலை வாய்ப்பு முகாம்திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்தது.



திருச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு துறை சார்பில் நடந்த தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணையை கலெக்டர் சிவராசு வழங்கினார். அருகில் மண்டல இணை இயக்குனர் (வேலைவாய்ப்பு) அனிதா, துணை இயக்குனர் சுப்பிரமணியன் மற்றும் பலர்.

முகாமில் 10ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை, தொழிற்கல்வி, பட்டயப்படிப்பு மற்றும் பட்டப்படிப்பு படித்த இளைஞர்கள், இளம் பெண்கள் என மொத்தம்14 ஆயிரத்து 471 பேர்கலந்து கொண்டனர். 171 தனியார்துறை நிறுவனங்களை சேர்ந்த மனிதவள மேம்பாட்டு அலுவலர்களால்நேர்காணல் நடத்தப்பட்டது. இதில் ஓவர்சீஸ் மேன்பவர்கார்ப்பரேஷன்,பர்ஸ்ட் சோர்ஸ், ராணே, ஆனந்த் இன்ஜினியரிங், 108ஆம்புலன்ஸ், அப்போலோபார்மசி, சென்னை சில்க்ஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் பங்கேற்றன. இதில் 63 மாற்றுத் திறனாளிகள் உட்பட 5 ஆயிரத்து 826 பேர் தேர்வு செய்யப்பட்டுபணி உத்தரவை கலெக்டர் சிவராசு வழங்கினார்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் 52 பேருக்கு விண்ணப்பங்கள்வழங்கப்பட்டு, உதவித்தொகை பெற ஆணை வழங்கப்பட்டது. அரசு சார்பு நிறுவனமான அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் நபர்கள் அயல்நாட்டு பணிக்கான வேலை வாய்ப்புக்கு மருத்துவம் சார்ந்த பணிக் காலியிடங்கள், எலக்ட்ரிக்கல் இன்ஜினியர், டெக்னீஷியன் போன்ற பணிகளுக்கு நேரடியாக தேர்வு செய்தனர். முகாமில் மண்டல இணை இயக்குனர் அனிதா (வேலை வாய்ப்பு) துணை இயக்குனர் சுப்பிரமணியன், உதவி இயக்குனர் பரமேஸ்வரி, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் கலைச்செல்வன், போலீஸ் கமிஷனர் அமல்ராஜ், மாவட்ட மாற்றுத் திறனாளி நலஅலுவலர்ரவிச்சந்திரன்மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், திருச்சி. வாரிசுரிமை சான்றிதழ்

Dr. HAJA K. MAJEED, M.B.B.S., F.A.G.E.
Dr. ABDUL MAJEED ARSHAD, M.D.
(Chest Specialist)
MARIAM DIAGNOSTIC CENTRE
Authorised Medical Centre for GCC Countries and Brunei Darussalam
New No. 19A (Old No. 8), Thiruvalluvar Salai, Teynampet, Chennai - 600 018. Ph : 044 - 2433 1034 / 35 / 37
Fax : 91- 044 - 2433 1036 / Mobile : 98400 74949
E-mail : mariamdiagnosticcentre@gmail.com
Website : mariamdc.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

ZAM ZAM REAL ESTATE
ALHAJEE S.M. BATHRUTHEEN
Phone : 044 - +91 44 2848 0697 / 4330 2522
E-mail : zamzam501@rediffmail.com www.zamzamrealestate.com






திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சிக் கல்லூரி; வணிகவியல் துறை சார்பில், 22.07.2019 திங்கட்கிழமை வணிகவியல் பேரவை தொடக்கவிழா மற்றும் முதலாம் ஆண்டு வணிகவியல் மாணவர்களுக்கான வரவேற்பு விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, சிறப்பு விருந்தினராக, திருச்சிராப்பள்ளி, தூய வளனார் கல்லூரியின் மனிதவள மேம்பாட்டுத்துறை பேராசிரியர் ஹெர்மன் கார்டஸ் கலந்து கொண்டு 'இன்றைய மாணவர்கள் தலைமைப் பண்பை வளர்ப்பது எப்படி?' என்பது பற்றி சிறப்புரையாற்றினார். கடந்த ஏப்ரல் 2019 செமஸ்டர் தேர்வுகளில் ஒவ்வொரு பாடத்திலும், முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணவர்களுக்கு, கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தி பேசினார்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

புதன்கிழமை
24 ஜூலை 2019
திருச்சி
20 பக்கங்கள் ரூ.7

# உள்நாடு, அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு: திருச்சியில் ஜூலை 27-இல் சிறப்பு முகாம்

**திருச்சி, ஜூலை 23:** உள்நாடு மற்றும் அயல்நாடுகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தரும் வகையிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் திருச்சியில் சனிக்கிழமை நடைபெறுகிறது.

இதுதொடர்பாக, திருச்சி மாவட்ட ஆட்சியர் சு. சிவராசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

திருச்சி மாவட்ட நிர்வாகம், திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவை இணைந்து ஜமால் முகமது கல்லூரியில் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமை நடத்தவுள்ளன.

இதில், தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு பணி நிறுவனத்தால் ஓமன், சவூதி உள்ளிட்ட நாடுகளில் பணிபுரிய ஆள்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். செவிலியர், மருத்துவம் சார்ந்த தொழில்நுட்ப பணியாளர்கள், மருத்துவம் சாராத தொழில்நுட்ப பணியாளர்கள், பார்மசிஸ்ட், எலக்ட்ரிக்கல் என்ஜினியர், கேபிள் இணைப்பாளர், லைன் மேன், ஆபரேட்டர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு ஆள்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். ரூ.28 ஆயிரம் முதல் ரூ.72 ஆயிரம் வரையில் மாத ஊதியமாக வழங்கப்படும்.

இதுமட்டுமல்லாது உள்நாட்டில் வேலைவாய்ப்பை பெற்றுத் தரும் வகையில் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், மத்திய, மாநில அரசுகளின் பொதுத் துறை நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையிலான பணிகள் மற்றும் பல்வேறு வகையான பணியிடங்களுக்கு இந்த முகாமில் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு முகாம் இடத்திலேயே பணி ஆணை வழங்கப்படும். 100-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன. 8ஆம் வகுப்பு முதல் பட்டதாரிகள், பட்டயப் படிப்பு முடித்தவர்கள் என அனைவரும் பங்கேற்கலாம். வேலைதேடும் இளைஞர்கள், மகளிர் தங்களது சுய விவரக் குறிப்பு, கல்விச் சான்று நகல்கள், ஆதார் அட்டை, மார்பளவு புகைப்படம் ஆகியவற்றுடன் இந்த முகாமில் பங்கேற்று பயன்பெறலாம் என்றார் அவர்.

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

makkalkural tv

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 ★ 24.7.2019 புதன் மாலை ★ வெளியீடு 25.7.2019 வியாழன் ★ இதழ் 58)

Regd. No. TN/SR-21/18–20

ஸ்ரீ மீனாட்சி கேட்டரர்ஸ்
சைவம் & அசைவம்
93452 13345, 82201 11500
84891 68816
காட்டுப்பிள்ளையார் கோவில் பின்புறம்,
நரிமேடு, மதுரை-2




# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் வணிகவியல் பேரவை தொடக்கவிழா

திருச்சி, ஜூலை.24–

திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சிக் கல்லூரி வணிகவியல் துறை சார்பில், வணிகவியல் பேரவை தொடக்கவிழா மற்றும் முதலாம் ஆண்டு வணிகவியல் மாணவர்களுக்கான வரவேற்புவிழா நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, சிறப்பு விருந்தினராக, திருச்சிராப்பள்ளி, தூய வளனார் கல்லூரியின் மனிதவள மேம்பாட்டுத்துறை பேராசிரியர் ஹெர்மன் கார்டஸ் அவர்கள் கலந்துகொண்டு இன்றைய மாணவர்கள் தலைமைப்பண்பை வளர்ப்பது எப்படி என்பது பற்றி சிறப்புரையாற்றினார்.

கடந்த ஏப்ரல் 2019 செமஸ்டர் தேர்வுகளில் ஒவ்வொரு பாடத்திலும், முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணவர்களுக்கு, கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்திப்பேசினார். தொடர்ந்து உரையாற்றிய கல்லூரியின் பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகமது அவர்கள் மாணவர்களை ஊக்கமூட்டினார். துணை முதல்வர் ஏ. முகமது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் எம். முகமது சிஹாபுதீன், துணைச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ்சமது, இயக்குநர் முனைவர் அப்துல்காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முன்னதாக, துறைத் தலைவர் இ. முபாரக் அலி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, துறை பேராசிரியர் முனைவர் ஏ. கலிலுர்ரஹ்மான் உள்ளிட்ட பேராசிரியர்கள் மாணவர்கள் அடங்கிய குழுவினர் செய்திருந்தனர். நிறைவாக லெப்டினன்ட் முனைவர் கே. விஜயகுமார் நன்றி கூறினார்.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 | TRICHY | MONDAY, JULY 22, 2019 | 14 PAGES | METRO | PRICE ₹2.50

THE TIMES OF INDIA

To order your copy, call 1800 1200 004 toll free or visit - subscribe.timesgroup.com



ALL-ROUNDER HARDIK PANDYA TO MISS FULL WINDIES TOUR, VIRAT WILL LEAD IN ALL 3 FORMATS 13



'DIPLOMATIC SNUB'? NO US OFFICIAL AT AIRPORT TO GREET PAK'S IMRAN 10

zomato Presents HAPPYTIMES
Everyday, 2500 winners get upto* ₹ 200 off from Zomato.
Dozens of lucky winners, drawn monthly and weekly take home Croma Vouchers and Cars.
Questions are in the strip below
TODAY'S HAPPY TIMES
READ
WIN
T&Cs Apply www.toihappytimes.com

# Alumni of JMC donate money for 2 poor students' education

**Sambath.Kumar**
@timesgroup.com

**Trichy:** Most reunions are memorable; only a few are meaningful. This bunch of septuagenarians made sure that their gettogether at Jamal Mohamed College (JMC), Trichy, after long years, would end on a useful note by donating ₹30,000 for the education of a couple of students in the college.

The kind gesture from 11 1963-66 batch B Com students, who met at the college, will see the two financially poor students get their studies funded, as a token of gratitude towards their alma mater. Among the 56 students of the bactch, 22 are have departed for their heavenly abode while a few are immobile due to age related issues.

However, the remaining decided to meet and contribute towards needy students as a token of gratitude towards their alma mater. It all started about four years ago when V Janarthanan, 81, took the responsibility of identifying his batchmates. He got in touch with 38, and by the time 16 had already died.

> **While alumni meeting is celebrated as a mere gettogether without any meaningful cause in sight, our alumni stood apart by coming forward to help the needy**
>
> **S ISMAIL MOHIDEEN.**
> Principal of JMC

"Four years down the lane, we have lost 22 of our batchmates and eleven of us could come for the meeting this year," says the retired assistant manager from civil supplies corporation. For 71-year-old R P Srinivasan, meeting his old batchmates, some of whom he is meeting after several decades is rejuvenating. "I feel seventeen-year-old after meeting old buddies," says retired deputy manager from Karur Vysya Bank.

As one of his best friend Chari is no more, meeting Balasubramanian took transported to good old days when they had all fun. "I owe my public speaking skills to the college which had given me some of the fine teachers," he says adding that they are now helping the college back by contributing to the education of the needy.

"We had offered monitory help to one of our batchmates in need of money two years ago. As we wanted to give back to the college, we were told about the students and we decided to help," said Janarthanan.

"While alumni meeting is celebrated as a mere gettogether without any meaningful cause in sight, our alumni stood apart by coming forward to help the needy," said principal of Jamal Mohamed College, S Ismail Mohideen.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
வியாழக்கிழமை
18 ஜூலை 2019
திருச்சி
14 பக்கங்கள் ரூ.7

# 'குடிமைப்பணித் தேர்வில் வெற்றி பெற விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவை'

திருச்சி, ஜூலை 17: குடிமைப்பணித் தேர்வில் வெற்றி பெற விடா முயற்சி, கடின உழைப்பு தேவை என்றார் திருச்சி மாநகரக் காவல் துணை ஆணையர் (குற்றம் மற்றும் போக்குவரத்து) ஆ. மயில்வாகனன்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில், குடிமைப்பணி போட்டித் தேர்வுகளில் பங்கேற்போருக்கான பயிற்சி மையத்தை புதன்கிழமை தொடக்கி வைத்து,மேலும் அவர் பேசியது:

சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பேசப்பட்டு வரக்கூடியதும், அன்று முதல் இன்று வரை இலக்கியங்களிலும்இலக்கண நூல்களாலும் இன்றும் அழியாமல் உயிர்த்தன்மையுடன் இருந்து வரும் மொழி தமிழ். உலக அதிசயங்களை விட முதல் அதிசயமாக இதை கூறலாம்.

குடிமைப் பணித் தேர்வுகளில் வெற்றி பெற விரும்புபவர்கள் விடா முயற்சி, அறிவை விருத்தி செய்து கொண்டே இருத்தல், முறையான பயிற்சி, கடின உழைப்பு, தன்னம்பிக்கை, தியாக உணர்வு, தேசப்பற்று உடையவர்களாக இருக்கவேண்டும்.

குடிமைப்பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற ஒவ்வொருவரும், அவரவர்களது தனித் திறமையை உயர்த்திக் கொண்டால் அவர்கள் பலரும் உயருவதற்கு காரணமாக இருப்பார்கள்.

இத்தேர்வுகளில் வெற்றி பெற்றால் ஊதியம் கிடைப்பது மட்டுமின்றி மக்களுக்கு சேவை செய்யும் வாய்ப்பும் கிடைக்கிறது. முடியாது என்று நினைத்து விட்டால் எதுவுமே முடியாமல் போய் விடும். முடியும் என்று நினைத்து விட்டால் முடியாது என்று பிறர் சொன்னாலும் நீங்கள் முடித்து காட்டி வீடுவீர்கள்.

எனவே எண்ணம் வலிமையானதாக இருந்தால் எதிலும் வெற்றி பெறுவது உறுதி.நம்மிடம் என்ன இருக்கிறது என்பது முக்கியமல்ல, இருப்பதை வைத்து என்ன செய்கிறோம் என்பது தான் மிகவும் முக்கியம் என்றார் அவர்.

இந்த விழாவுக்கு கல்லூரி முதல்வர் எஸ்.எம். இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் ஏ.கே.காஜா நஜ்முதீன், பொருளாளர் எம்.ஜெ.ஜமால் முகம்மது முன்னிலை வகித்தனர்.

முன்னதாக வினாடி- வினா போட்டியில் வென்றோருக்கு தலைக்கவசங்கள் பரிசாக வழங்கப்பட்டன. குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் மசார் நஜீப் கான் வரவேற்றார். நிறைவில், பேராசிரியர் சையது அலி பாதுஷா நன்றி கூறினார்.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில், வினாடி வினா போட்டியில் வென்ற மாணவருக்கு தலைக்கவசம் வழங்குகிறார் மாநகரக் காவல் துணை ஆணையர் (குற்றம் மற்றும் போக்குவரத்து) ஆ. மயில்வாகனன். உடன் (இடமிருந்து) கல்லூரிப் பொருளாளர் எம்.ஜெ. ஜமால் முகமது, குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் மசார் நஜீப்கான்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
புதன்கிழமை
17 ஜூலை 2019
திருச்சி
22 பக்கங்கள் ரூ. 7

# மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

**திருச்சி, ஜூலை 16:** திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி வளாகத்தில் மழைநீர் சேமிப்பு மற்றும் மழைநீர் மேலாண்மை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் செயலாளர் ஏ.கே.காஜா நஜ்முதீன் தலைமை வகித்தார். பொருளாளர் எம்.ஜெ.ஜமால் முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் வரவேற்றுப் பேசினார். கல்லூரியின் துணைச் செயலர் கே. அப்துஸ் சமது, துணை முதல்வர்கள் ஏ.முகம்மது இப்ராஹிம், எம். முகம்மது சிகாபுதீன், சுயநிதிப் பிரிவு இயக்குநர் கே.என்.அப்துல்காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் கே.என். முஹம்மது பாஜில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கீழ் நாட்டு நலப்பணித் திட்டம், கல்லூரியின் மேம்பாட்டுத்துறை ஆகியோர் இணைந்து மழைநீர் சேமிப்புத் தொட்டி புனரமைத்தல், மழைநீர் வடிகால்களை தூய்மை செய்தல் மற்றும் நிலத்தடி நீர் சேகரிப்பு ஆகியன குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★★★
புதன்கிழமை
17 ஜூலை 2019
திருச்சி
22 பக்கங்கள் ரூ. 7

# மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

**திருச்சி, ஜூலை 16:** திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி வளாகத்தில் மழைநீர் சேமிப்பு மற்றும் மழைநீர் மேலாண்மை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் செயலாளர் ஏ.கே.காஜா நஜ்முதீன் தலைமை வகித்தார். பொருளாளர் எம்.ஜெ.ஜமால் முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் வரவேற்றுப் பேசினார். கல்லூரியின் துணைச் செயலர் கே. அப்துஸ் சமது, துணை முதல்வர்கள் ஏ.முகம்மது இப்ராஹிம், எம். முகம்மது சிகாபுதீன், சுயநிதிப் பிரிவு இயக்குநர் கே.என்.அப்துல்காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் கே.என். முஹம்மது பாஜில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கீழ் நாட்டு நலப்பணித் திட்டம், கல்லூரியின் மேம்பாட்டுத்துறை ஆகியோர் இணைந்து மழைநீர் சேமிப்புத் தொட்டி புனரமைத்தல், மழைநீர் வடிகால்களை தூய்மை செய்தல் மற்றும் நிலத்தடி நீர் சேகரிப்பு ஆகியன குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

Dr. HAJA K. MAJEED, M.B.B.S., F.A.G.E.
Dr. ABDUL MAJEED ARSHAD, M.D.
(Chest Specialist)
MARIAM DIAGNOSTIC CENTRE
Authorised Medical Centre for GCC Countries and Brunei Darussalam
New No. 19A (Old No. 8), Thiruvalluvar Salai, Teynampet, Chennai - 600 018. Ph : 044 - 2433 1034 / 35 / 37
Fax : 91- 044 - 2433 1036 / Mobile : 98400 74949
E-mail : mariamdiagnosticcentre@gmail.com
Website : mariamdc.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : பாஹிம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துல் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42726/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

999 LUNGIES
Shop Online @ www.999lungies.com | Trade Enquiry: +91 89999 97475
அனைத்து முன்னணி கடைகளிலும் கிடைக்கும்

மணி - 34 சுடர் - 306 | ஹிஜ்ரி 1440 - துல்க:அதா 11 | திருவள்ளுவர் ஆண்டு 2049 ஆனி - 30 | சென்னை 15.07.2019 திங்கள் | வெளியூர் 16.07.2019 செவ்வாய் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3



ஜமால் முகமது கல்லூரியின் நிறுவனர் நாள் விழாவில் நிறுவனர் காஜா மியான், நினைவு தபால் தலையினை கல்லூரி செயலாளர் காஜா நஜிமுதீன் வெளியிட அறிவியல் அறிஞர் மற்றும் தோஷிபா எலிவேட்டர்ஸ் கம்பெனி நிர்வாக இயக்குநர் ஹாஜி எம். ஜே. முஹம்மது இக்பால் பெற்றுக்கொண்டார். நிறுவனர் ஜமால் முஹம்மது நினைவு தபால் தலையினை எம் ஜே இக்பால் வெளியிட கல்லூரி பொருளாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மது பெற்றுக் கொண்டார். இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன், கல்லூரி உதவி செயலாளர் முனைவர் அப்துல் சமது, கல்லூரி நிதியாளர் முனைவர் அப்துல் காதர் நிகால், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பழ. கருப்பையா, சுப. வீரபாண்டியன், துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முஹம்மது சகாபுதீன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

RAMRAJ COTTON
DHOTIS
SHIRTS
BANIANS
AVAILABLE @ COMPANY SHOWROOMS & ALL LEADING TEXTILE SHOPS

TRINITY MIRROR

Madurai SUNDAY 14-7-2019
VOL. 24 No.5 PAGES 8 Rs. 4.00

NATIONAL DAILY FOR THE PEOPLE

Regd.No.TN/MA/175/18-20
Air Surcharge 40 Paise

makkalkural tv

# People's participation should be ensured for success of water conservation campaign

Tanjore, July 14: People's participation should be ensured to make Jal Shakthi Abhiyan-Central government's water conservation campaign a success, said Pramod Kumar Pathak, additional secretary, Union Ministry of Ayush, here on Saturday. He is heading a ten-member Central team to run the campaign in Thanjavur district.

Speaking at a meeting of officials at the collectorate to discuss the campaign, Pathak said that block and district conservation plans should be prepared by officials and they should be implemented with the participation of people. He said that 'Jal Shakthi Abhiyan' focuses on five aspects-water conservation and rain water harvesting, renovation of traditional and other water bodies, reuse of water and recharging of structures, watershed development and intensive afforestation. It lays emphasis on developing block and district level plans and oragnising Krishi Vigyan Kendra melas to promote efficient water use for irrigation and better crop choices.

The campaign will be run in 256 districts facing water shortage, covering 1592 water stress blocks in these districts during monsoon season, Pathak said.

A. Annadurai, Thanjavur district collector briefed the team about Kudimaramathu works being undertaken in the district as a water conservation and water resource development measure.

Janaki Raveendran, municipal corporation commissioner, Thanjavur, said that three ponds have been cleaned in the town with a view to harvest rain. Agriculture department officials explained about the minor irrigation projects, drip irrigation projects, cropping pattern and also direct sowing as a means of water saving.

The team will be here till July 17 and block level assessment about water bodies, aquifer, conservation works undertaken.

P. Mantrachalam, project director, DRDA, Thanjavur and other officials from corporation, municipalities, town panchayats, panchayats, PWD, Forest, TWAD, Agriculture and Horticulture departments participated in the meeting.



**Dr K N Abdul Kader Nihal, Head, Information Technology department and bursar, Jamal Mohamed College, Tiruchi presenting a cheque to college treasurer Haji Jamal Mohamed being the financial assistance to poor students studying in the college.**

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 * 13.7.2019 சனி மாலை * வெளியீடு 14.7.2019 ஞாயிறு * இதழ் 47)

Regd. No. TN/SR-21/18–20

makkalkural tv

ஸ்ரீ மீனாட்சி கேட்டரர்ஸ்
சைவம் & அசைவம்
93452 13345, 82201 11500
84891 68816
காட்டுப்பிள்ளையார் கோவில் பின்புறம், நரிமேடு, மதுரை-2

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி நிறுவன நாள் விழா: தோஷிபா எலிவேட்டர்ஸ் நிர்வாக இயக்குநர் பங்கேற்பு



திருச்சி, ஜூலை.13–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் நிறுவனர் நாள் விழா, மஜ்லிசுல் உலமா நூற்றாண்டு விழா, இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மைய நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழா இன்று (11.7.2019 வியாழக்கிழமை) நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில், செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ் சமது ஆகியோர் முன்னிலையில் விழா காலை 9.30க்கு தொடங்கியது.

இதில் திருச்சி அஹமத் பிரதர்ஸ் பங்குதாரர் ஹாஜி. ஏ.கே. உசேன் சாஹிப் அவர்கள் முன்னிலையில், கல்லூரியின் மேனாள் மாணவரும் சாகித்ய அகாதமி விருதுபெற்ற எழுத்தாளருமான திரு. ஆயிஷா நடராசன் அவர்கள் கல்லூரியின் பெருமைகளையும், வளர்ச்சி, பழமை மற்றும் சிறப்புகள் பற்றி தொடக்கவுரையாற்றினார்.

கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன் மற்றும் பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## மஜ்லிசுல் உலமா நூற்றாண்டு விழா

இந்நிகழ்வில் தமிழக மேனாள் சட்டமன்ற உறுப்பினர் பழ. கருப்பையா கலந்துகொண்டு மஜ்லிசுல் உலமாவின் சிறப்புகள் மற்றும் இந்திய நாட்டில் இஸ்லாமியர்கள் ஆற்றிய பங்கு குறித்து எழுச்சியுரையாற்றினார்.

இதயம் முதல் இமைகள் வரை ததும்பும் ஜமால் எமக்குள்ளே யாராக...? என்ற தலைப்பில் வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் கவிமாமணி முனைவர் தி.மு. அப்துல்காதர் தலைமையில் தாயாக என்ற அணியில் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி , தந்தையாக என்ற அணியில், கவிஞர் தக்கலை ஹலீமா , நண்பராக என்ற அணியில் கவிஞரும் பேராசிரியருமான மானசீகன் , நல்லாசிரியராக என்ற அணியில் கவிஞர் தஞ்சை இனியன் தத்தம் வாதங்களை எடுத்துரைத்தனர்.

கல்லூரியின் மேனாள் மாணவரும் ஏபிசி மருத்துவமனையின் மூளை நரம்பியல் மருத்துவ நிபுணருமான டாக்டர் எம்.ஏ. அலீம் முன்னிலையில் நூலாசிரியர் முனைவர் ஜெ.ராஜா முகமது கலந்துகொண்டு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். என். ராஜேந்திரன் நூலை வெளியிட்டு கருத்துரைத்தார். என்.எம். கமால் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் கே. பஷீர் அஹமது முதற்பிரதியை பெற்றுக்கொண்டார்.

முப்பெரும் விழாவின் நிறைவு விழாவில் துபாயை சேர்ந்த அறிவியல் அறிஞரும்பொறியியல் வல்லுநருமான முனைவர் எம்.ஜே. முகமது இக்பால் அவர்கள் வாழ்த்துரை வழங்க திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை நிறுவனரும்பொதுச் செயலாளருமான பேரா. சுப. வீரபாண்டியன், கலந்து கொண்டு நிறைவுவிழா பேருரை நிகழ்த்தினார்.

முன்னதாக கல்லூரியின் இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிறைவாக துணைமுதல்வர் முனைவர் முகமது இப்ராஹீம் நன்றி கூறினார். முப்பெரும் விழாவிற்கான ஏற்பாடுகளை, கூடுதல் துணை முதல்வர் முனைவர் மு. முகமது சிஹாபுதீன் உள்ளிட்ட தமிழ்த்துறை மற்றும் அனைத்துத்துறை பேராசிரியர்கள் ஒன்றிணைந்து செய்திருந்தனர்.

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

makkalkural tv

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:41 * 13.7.2019 சனி மாலை * வெளியூர் 14.7.2019 ஞாயிறு * இதழ் 47)

Regd. No. TN/SR-21/18–20



ஸ்ரீ மீனாட்சி
கேட்டரர்ஸ்
சைவம் & அசைவம்
93452 13345, 82201 11500
84891 68816
காட்டுப்பிள்ளையார் கோவில் பின்புறம், நரிமேடு, மதுரை–2


# இஸ்லாமியர்களின் வரலாறு மீட்டெடுக்க சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் ஆயிஷா நடராசன் வலியுறுத்தல்



திருச்சி, ஜூலை.13–

மறைக்கப்பட்ட இஸ்லாமியர்களின் வரலாறு மீட் டெடுக்கப்பட வேண்டும் என சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் ஆயிஷா இரா. நடராசன் வலியுறுத்தினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மஜ்லிசுல் உலமா நூற்றாண்டு விழா, கல்லூரி நிறுவனர் நாள் விழா, இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மைய நூல் வெளியீட்டு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது.

இந்த விழாவில், சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் ஆயிஷா இரா. நடராசன் பேசியது:–

மறைக்கப்பட்டு வரும் இஸ்லாமியர்களின் வரலாறுகள் குறித்த தகவல்களை மீட்டெடுக்க அத்தகைய வரலாறுகள் குறித்த படைப்புகள் அதிகம் வெளிவர வேண்டும். சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

ஜான்சி ராணியின் போர்ப்படையில் இடம் பெற்றிருந்த அஷ்ரத் பேகம் என்பவரது வீரம் குறித்து லண்டன் இதழ்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதேபோல, இந்திய குடியரசுத் தலைவராக இருந்த ஜாகிர் உசேன், வெளிக்கொணர்ந்த கல்விக் கொள்கைதான் உலகத்துக்கே முன்னுதாரணமாக இருந்தது. இன்று கல்விக் கொள்கை என்ற பெயரில் தாங்கள் விரும்பியதை வலுக்கட்டாயமாக திணிக்கும் முயற்சி நடைபெறுகிறது.

சுதந்திரப் போராட்டத்துக்கு நிதி திரட்டும்போது பூர்த்தி செய்யப்படாத காசோலை அளித்து மகாத்மா காந்தியடிகளையே வியப்பில் ஆழ்த்தியவர் ஜமால் முகமது. கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஏழை, எளிய மக்கள் உயர் கல்வி பெறவே கல்வி நிறுவனங்களைத் தொடங்கினர்.

பல்வேறு நிலைகளில் மக்களின் வளர்ச்சிக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும் இஸ்லாமியர்கள் பலர் பெரும் பங்களித்துள்ளனர். அத்தகைய தகவல்கள் வெளிக்கொணரப்பட வேண்டும் இவ்வாறு அவர் பேசினார்.

அழகப்பா பல்கலைக் கழக துணைவேந்தர் என். ராஜேந்திரன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலர் சுப. வீரபாண்டியன், தொழிலதிபர்கள் ஏ.கே. உசேன்சாஹீப், கே.பஷீர் அகமது, பொறியியல் வல்லுநர் எம்.ஜே. முகமது இக்பால், மருத்துவர் எம்.ஏ. அலீம் ஆகியோர் பேசினர்.

கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரித் தலைவர் ஜமால் முகமது பிலால், செயலர் காஜா நஜீமுதீன், பொருளாளர் ஜமால் முகமது, உதவிச் செயலர் அப்துஸ் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



பெரம்பலூர் பாலக்கரையில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை திட்ட இயக்குனர் சீனிவாசன் துவக்கி வைத்தார். அருகில் கோட்டாட்சியர் விஸ்வநாதன், துணை இயக்குனர் சிவப்பிரகாசம் உஷா மற்றும் பலர் உள்ளனர்.

சென்னை
மதுரை
கோவை
வேலூர்
திருநெல்வேலி
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
13 ஜூலை 2019
திருச்சி
14 பக்கங்கள் ரூ.7

# 'மறைக்கப்பட்ட இஸ்லாமியர்களின் வரலாறு மீட்கப்பட வேண்டும்'

**திருச்சி, ஜூலை 12:** மறைக்கப்பட்ட இஸ்லாமியர்களின் வரலாறு மீட்டெடுக்கப்பட வேண்டும் என சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் ஆயிஷா இரா. நடராசன் வலியுறுத்தினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மஜ்லிசுல் உலமா நூற்றாண்டு விழா, கல்லூரி நிறுவனர் நாள் விழா, இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மைய நூல் வெளியீட்டு விழா என முப்பெரும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில், சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் ஆயிஷா இரா. நடராசன் பேசியது:

மறைக்கப்பட்டு வரும் இஸ்லாமியர்களின் வரலாறுகள் குறித்த தகவல்களை மீட்டெடுக்க அத்தகைய வரலாறுகள் குறித்த படைப்புகள் அதிகம் வெளிவர வேண்டும். சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. ஜான்சி ராணியின் போர்ப் படையில் இடம் பெற்றிருந்த அஷ்ரத் பேகம் என்பவரது வீரம் குறித்து லண்டன் இதழ்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல, இந்திய குடியரசுத் தலைவராக இருந்த ஜாகிர் உசேன், வெளிக்கொணர்ந்த கல்விக் கொள்கைதான் உலகத்துக்கே முன்னுதாரணமாக இருந்தது. இன்று கல்விக் கொள்கை என்ற பெயரில் தாங்கள் விரும்பியதை வலுக்கட்டாயமாக திணிக்கும் முயற்சி நடைபெறுகிறது.

சுதந்திரப் போராட்டத்துக்கு நிதி திரட்டும்போது பூர்த்தி செய்யப்படாத காசோலை அளித்து மகாத்மா காந்தியடிகளையே வியப்பில் ஆழ்த்தியவர் ஜமால் முகமது. கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஏழை, எளிய மக்கள் உயர் கல்வி பெறவே கல்வி நிறுவனங்களைத் தொடங்கினர். பல்வேறு நிலைகளில் மக்களின் வளர்ச்சிக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும் இஸ்லாமியர்கள் பலர் பெரும் பங்களித்துள்ளனர். அத்தகைய தகவல்கள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றார் அவர். அழகப்பா பல்கலைக் கழக துணைவேந்தர் என். ராஜேந்திரன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலர் சுப. வீரபாண்டியன், தொழிலதிபர்கள் ஏ.கே. உசேன்சாஹீப், கே. பஷீர் அகமது, பொறியியல் வல்லுநர் எம்.ஜே. முகமது இக்பால், மருத்துவர் எம்.ஏ. அலீம் ஆகியோர் பேசினர்.

கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரித் தலைவர் ஜமால் முகமது பிலால், செயலர் காஜா நஜ்முதீன், பொருளாளர் ஜமால் முகமது, உதவிச் செயலர் அப்துஸ் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.






உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18









# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி நிறுவன நாள் முப்பெரும் விழாவில் தோஷிபா எலிவேட்டர்ஸ் நிர்வாக இயக்குநர் எம்.ஜே. முஹம்மது இக்பால் பங்கேற்பு




திருச்சி, ஜூலை.12-

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் நிறுவனர் நாள் விழா, மஜ்லிசுல் உலமா நூற்றாண்டு விழா, இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மைய நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழா கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமையில், செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜி முத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ் ஸமது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

திருச்சி அரைஸ் பிரதரஸ் பங்குதாரர் ஹாஜி. ஏ.கே. உசேன் சாஹிப் முன்னிலையில், கல்லூரியின் மேனாள் மாணவரும், சாகித்ய அகாதமி விருதுபெற்ற எழுத்தாளருமான ஆபிஷா நடராசன் கல்லூரியின் பெருமைகளையும், வைரவிழா மற்றும் சிறப்புகள் பற்றி தொடக்கவுரை யாற்றினார் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜிமுத்தீன் மற்றும் பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மஜ்லிசுல் உலமா நூற்றாண்டு விழா தமிழக மேனாள் சட்டமன்ற உறுப்பினர் பழ. கருப்பையா மஜ்லிசுல் உலமாவின் சிறப்புகள் மற்றும் இந்திய நாட்டில் இஸ்லாமியர்கள் ஆற்றிய பங்கு குறித்து எழுச்சியுரையாற்றினார்.

